KUDUMBA NOVEL - TAMIL FORTNIGHTLY SEPTEMBER -16' 2012. REGD No: TN/CH©/159/12-14 & WPP.NO.
TN/PMG(CCR)WPP - 230/2012 - 14 Registered with the Registrar of News Paper India No: 53775/92

## விரைவில் வெளிவருகிறது!
## முதல்பாகத்தின் சுருக்கத்துடன்









## 1

இதயத்தைத் துளை போட்டு, குருதியைக் கசிய வைத்து, முள்ளாய் உறுத்திக் கொண்டிருந்த கேள்விக்கு விடை காணாமல் தவித்துக் கொண்டிருந்தாள் அதிசயா.

தரையில் பாயில் கிடத்தப்பட்டிருந்த அப்பா சிவராமனைப் பார்க்கும் போதெல்லாம்... அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

கீழுதட்டை அழுந்தக் கடித்து - முட்டிக் கொண்டு வந்த அழுகையை சிரமப்பட்டு அடக்கினாள்.

மனதில் பயக்குமிழ்கள் உற்பத்தியாகி... அவளை பலவீனப்படுத்தின.

மூன்று வருடங்களுக்கு முன்பே அம்மா சிந்தாமணி புற்று நோய்க்கு ஆளாகி பூவுலகை விட்டு மறைந்து விட்டிருந்தாள்.

அந்தப் பெரிய சோகத்திலிருந்து இன்னமும் அதிசயா மீண்டு வர முடியவில்லை என்பது நிஜம்!

அதற்குள் அப்பா மரணப் படுக்கையில் விழுந்து விட்டார்.

அவருக்கு ஏற்கெனவே ஆஸ்துமா தொந்தரவு இருந்தது என்னவோ உண்மை..!

அது டி.பி.யாக முற்றி நுரையீரல் முழுவதும் நீர் கோர்த்து நிமோனியாவாகி... கடைசியில் அவர் பிழைப்பது கடினம் என்று டாக்டர் கையை விரித்து விட்டார்.

ஆஸ்பத்திரியில் இனிமேலும் அவரை வைத்திருப்பதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்று தெரிந்ததும்... அதிசயாவுக்கு வேறு வழி தெரியவில்லை.

"உயிர் இழுத்துட்டிருக்கு. ரொம்ப நாள் தாங்காது. மிஞ்சி மிஞ்சிப் போனா ரெண்டு மூணு நாளைக்குள்ளே முடிஞ்சுடும். எதுக்கும் உங்க சொந்தக்காரங்களுக்கு தகவல் சொல்லிடுங்க... கடைசியா முகத்தைப் பார்க்கணும்னு பிரியப்படறவங்க.. வந்து பார்த்துக்கட்டுமே..." என்று தலைமை மருத்துவர் கூறிய போது... துக்கம் பந்தாய் எழும்பி தொண்டையை அடைத்தது.

சொல்லிக் கொள்ளும்படியாக சொந்தங்கள் என்று யாருமே இல்லையே?

யாருக்கு அவள் சொல்லி அனுப்புவாள்?

'அப்பா இந்த உலகத்தை விட்டுப் போகப் போகிறார். அருமை மகள் அதிசயாவை நிர்க்கதியாக நிற்க வைத்து விட்டு நிரந்தரமாகக் கண்ணை மூடப் போகிறார்' என்ற நிதர்சனத்தை ஏற்று தன்னைத் தயார்படுத்திக் கொள்ள... அவள்

படாத பாடு பட்டாள்.

அப்பா சிவராமன் ஒரு சரித்திரப் பேராசிரியர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'ஹெச்.ஓ.டி.'யாக பணியாற்றி வந்தவர்.

கலகலப்புக்கு மறுபெயர் உண்டென்றால்... அது சிவராமனாகத் தான் இருக்கும்.

''ஹிஸ்டரியா? சுத்த போராச்சே? கிளாஸ் ஆரம்பிச்சதுமே எனக்கு தூக்கம் தூக்கமா வந்துடுமே? கொட்டாவி விட்டுட்டு சாமிஆடிட்டு உட்கார்ந்திருப்பேன். படு போர்'' என்று சொல்லும் கடைநிலை மாணவன் கூட... 'சிவராமன் சார் கிளாஸ் எடுக்க வருகிறார்' என்றால் சுவாரஸ்யமாய் நிமிர்ந்து அமர்ந்து... அவரது வருகையை எதிர்பார்ப்பான்.

அந்த அளவுக்கு நேர்த்தியாய் சிரித்த முகத்துடன் 'மோட்டிவேட்டிவேஷன்' கொடுத்து கலகலப்பாய் - நேரம் போவதே தெரியாமல் அருமையாய் பாடம் நடத்துவதில் வல்லவர்.

பாடம் நடத்துவதில் மட்டுமல்ல... எந்த டாபிக்கை எடுத்தாலும் அழகான விளக்கத்தோடு பொருத்தமான மேற்கோள் காட்டி அவர் பேசுவதை நாளெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம் என்று யாருக்குமே தோன்றும்.

ஜோதிடம், சாஸ்திர சம்பிரதாயங்களில் அதீத பற்று கொண்டவர்.

'நமக்கும் மேலே ஒருவனடா... அவன் நாலும் தெரிந்த தலைவனடா' என்ற பாடல் வரிகளை அடிக்கடி சுட்டிக் காட்டுபவர்.

அளவு கடந்த தெய்வ நம்பிக்கை மட்டுமல்ல... சித்தர்கள், அற்புத மகான்கள், சாதுக்கள் எழுதி வைத்த நூல்களை ஈடுபாட்டுடன் வாசித்து... தான் சிலாகித்து ரசித்த வரிகளை மனைவியிடமும் மகளிடமும் எடுத்துச் சொல்லி லயித்துப் போவார்.

சிறு வயதிலிருந்தே அதைக் கேட்டுக் கேட்டு வளர்ந்ததாலோ என்னவோ... அதிசயாவுக்கும் அப்பாவைப் போன்றே ஈடுபாடு வந்து விட்டது.

அந்த ஈடுபாடு நாளாக ஆக... அதீத பக்தியாக முற்றிப் போயிருந்தது.

''எல்லாம் அவன் செயல், அவன் அன்றி ஒரு அணுவும் அசையாதும்மா... அதே சமயத்துல விதி வலியது. எல்லாம் பகவான் செயல்னு.. கடவுள் மேலே பாரத்தைப் போட்டுட்டு கடமையை செய்துட்டே போகணும். அவரவர் தலையில் என்ன எழுதி வச்சிருக்காரோ... அந்த விதிப்படி தானே... எல்லாம் நடக்கும்?

மனசைத் தேத்திக்கோ அதிசயா! உங்கம்மாவுக்கு கேன்சர் வந்திடுச்சு... அம்மா மூணுமாசம் கூட தாங்கமாட்டா. நம்மை விட்டு சீக்கிரமே போயிடுவா... போனவாட்டி பாபநாசத்துக்கு நான் போனப்போ.. வழக்கம் போல அகத்தியர் அருவிக்குப் பக்கத்துல இருக்கிற ஆசிரமத்துக்குப் போனேன்.



அங்க இருக்கிற சாமியார் சோழி போட்டுப் பார்த்தாரு.

ஒரு கணம் கண்ணை மூடிக்கிட்டாரு. அப்புறமா இதை எனக்கு சொன்னாரு. நான் ஆடிப் போயிட்டேன். கலங்கி கண்ணீர் வடிச்சேன். துக்கம் தாங்காம தேம்பினேன்.

'இது தானப்பா விதி!'ன்னு அழுத்தம் திருத்தமா சொல்லிட்டாரு. தியானம் பண்ணி மனசைக் கட்டுக்குள்ளே கொண்டு வந்தேன். நீயும் மனசை திடப் படுத்திக்கோ... நம்ம கையில ஒண்ணுமே இல்லைம்மா...''

அம்மா சிந்தாமணி நோயின் தீவிரத்தால் துடி துடித்ததைப் பார்த்து விட்டு... தனியறைக்குள் வந்து அவள் கதறிய போது, அப்பா சிவராமன் அவளது தோளில் ஆறுதலாய் தட்டிக் கொடுத்து நிதானமாய் பேசினார்

''அம்மா ரொம்ப பாவம் அப்பா! அவங்க ஈ எறும்புக்கு கூட துன்பம் விளைவிச்சது இல்லையே? அவங்களுக்கு ஏன் இப்படி ஒரு வியாதி வரணும்?

அம்மான்னா... எனக்கு உயிருப்பா... நான் யாருக்கும் ஒரு துரோகமும் பண்ணலையே? நான் இந்த வயசுலே அம்மாவை இழக்கணுமா?''

முதுகு குலுங்க விசும்பி அழுதபடி கிசுகிசுப்பாய் பேசிய மகளின் முன் நெற்றிக் கூந்தலை ஆதுரமாய் ஒதுக்கி விட்டபடி அவளை ஊன்றிப் பார்த்தார்.

''அதுதான் விதி! துரோகம் பண்ணினது நீ இல்லைம்மா... நான்தான்...''

''எ... என்னப்பா சொல்றீங்க?''

''ஒ... ஒண்ணுமில்லைம்மா...''

''இல்லப்பா... நீங்க எதையோ என்கிட்ட மறைக்கிறீங்க! ரொம்ப நாளா நானும் கேட்டுட்டே இருக்கேன். நீங்களும் அம்மாவும் எதையாவது சொல்லி மழுப்பிடறீங்க... நமக்கு ரிலேட்டிவ்ஸ்னு யாருமே இல்லையாப்பா?''

''நம்மகூட வேலை பார்க்கிறவங்க... நம்மைச் சுத்தி இருக்கிறவங்க... அக்கம் பக்கத்துல உள்ளவங்க எல்லாருமே ரிலேடிவ்ஸ் மாதிரி தானே பழகறாங்க?''

''அப்பா! ப்ளீஸ்... பேச்சை மாத்தாதீங்கப்பா.. ரெண்டு நாள் முன்னாடி தற்செயலா நீங்களும் அம்மாவும் பேசிக்கிட்டதை நான் கேட்டேன்.

'இப்பவாவது உனக்கு அவங்களை எல்லாம் பார்க்கணும்னு தோணலையா சிந்தாமணி? எப்படி வாழ வேண்டியவள் நீ... என்னாலே தானே உனக்கு இப்படியொரு நிலைமை வந்துச்சு?'ன்னு தழுதழுத்தபடி... நீங்க கேட்டீங்கப்பா...

அதுக்கு அம்மா 'சத்தியமா எனக்கு அவங்களைப் பார்க்கணும்கிற ஆசை துளிகூட இல்லைங்க... விதி வசத்தாலே வியாதி வர்றது இயற்கை தானே? இந்த வியாதி வந்து - போய்சேரணும்னு என் தலையில் எழுதியிருக்கு. விதியை யாரால மாத்த முடியும்? எனக்கு சீக்கிரமாவே விதி வந்து முன்னாடி நின்னுடுச்சு... மத்தபடி நான் சந்தோஷமா தானே இருக்கேன். நிறைவான வாழ்க்கை எனக்கு அமைஞ்சிருக்கே?

அதிசயாவை மாலையும் கழுத்துமா பார்க்க முடியலையேங்கிற குறை ஒண்ணு தான்... நெருஞ்சி முள்ளா நெருடுது... உன்னதமான மனிதருக்கு மனைவியா வாழ்ந்த திருப்தியோட தான்... நான் கண்ணை மூடுவேன்.

நான் செத்துப் போயிட்டேங்கிற முடிவுக்கு... அவங்க எப்பவோ வந்துட்டாங்க.. மறந்தும் போயிருப்பாங்க... இப்ப அவங்களைப் போய் நான் என்னத்துக்கு பார்க்கணும்?'னு... அம்மா உங்களைப் பார்த்து எதிர்க்கேள்வி கேட்டாங்க...

'இந்த சமயத்துல உனக்கு ஒரு ஏக்கம் இருக்கும்னு நெனச்சேன். எனக்குள்ளே ஒரு உறுத்தல் சிந்தாமணி! அவங்க வயிறெரிஞ்சு விட்ட சாபம் தான்... இப்படியொரு வியாதியில உன்னைத் தள்ளி விட்டுடுச்சோன்னு... மனசு குத்துது'ன்னு நீங்க ஃபீல் பண்ணி பேசினீங்க.

'எனக்கும் மனசுல உறுத்தல் இருக்கத்தான் செய்யுது. தயவு செஞ்சு பழசை ஞாபகப்படுத்தாதீங்க... அதிசயா கிச்சன்லே இருக்கா... அவ காதுலே விழுந்துடப் போகுது... வேற ஏதாச்சும் பேசுங்க'ன்னு அம்மா சொன்னாங்களே...!

பெத்த மகள் நான்... உங்க கடந்த காலத்தைப் பத்தி நான் தெரிஞ்சுக்கிட்டா... என்னப்பா தப்பு? இப்பவாவது மறைக்காம சொல்லுங்கப்பா... மத்தவங்களை அதட்டிக் கூடப் பேசத் தெரியாதவர் நீங்க... நீங்க போய் யாருக்காச்சும் துரோகம் பண்ணியிருப்பீங்களா?''

வாத்சல்யத்துடன் அப்பாவின் கரத்தைப் பிடித்துக் கொண்டு மன்றாடினாள் அதிசயா.

'சொல்லலாமா? வேண்டாமா?' என்று அப்பாவுக்குள் பட்டி மன்றப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

அவர் உள்ளுக்குள் தவித்து தத்தளிப்பதை... அதிசயாவால் நன்கு உணர முடிந்தது.

''அப்பா - மகள் உறவைத் தாண்டி... நாம் ஃபிரண்ட்லியா தானேப்பா பழகறோம், என்கிட்ட என்னத்துக்கு இந்த ஒளிவு மறைவு?''

சிவராமன் ஏதோ சொல்ல வாயெடுக்கும் தருணத்தில்... சிந்தாமணி 'லொக்... லொக்' என்று - தீனமாய் இடைவிடாமல் இருமும் சப்தம் கேட்டது.

''கால நேரம் வரும் போது உனக்கு எல்லாமே தெரிய வரும். அது வரைக்கும் கொஞ்சம் பொறுமையா இரு அதிசயா!'' என்று கூறி விட்டு அவளது கையை மெல்ல அழுத்தி விட்டு அந்த இடத்தை விட்டு அகன்றார் சிவராமன்.

அந்த அழுத்தத்தில் 'இதற்கு மேல் எதையும் கேட்டு என்னை தர்ம சங்கடத்தில் ஆழ்த்தாதே' என்று பூடகமாக சொல்வது போல் இருந்ததை... தெளிவாகப் புரிந்து கொண்டாள் அதிசயா.



அம்மாவின் சாவிற்கு அப்புறமும்... அவள் நாசூக்காக நடந்து கொண்டாள்.

உள்ளுக்குள் 'மகளிடமே மறைக்கிறாரே?' என்ற வருத்தம்.. இதயத்தை இரும்பு குண்டாய் கனக்க வைத்தாலும்... கேள்விகள் கேட்டு அப்பாவைத் துளைத்தெடுக்காமல் அமைதி காத்தாள்.

அம்மாவின் மறைவுக்குப் பின்... அப்பா வெகுவாய் மாறிப் போய் விட்டார்.

சிந்தாமணி மறைந்த மறுமாதமே... அவருக்கு ரிட்டையர் மெண்ட் கிடைத்து விட்டதால்... சிவராமனுக்கு தோதாய் போய் விட்டது.

புரஃபஸராய் இதுகாலம் வரை பணியாற்றியவர் என்று சத்தியம் செய்தால் கூட யாரும் நம்பமாட்டார்கள்.

நெற்றியில் பட்டையாய் விபூதியும் கழுத்தில் ருத்திராட்ச கொட்டையுமாய் - காவி வேட்டி சட்டை அணிந்தும்... சோகத்தில் உருத் தெரியாமல் மெலிந்தும்... கிட்டத்தட்ட பரதேசி போல் ஆகி விட்டிருந்தார்.

அதிசயாவின் விருப்பத்திற்கு அவர் என்றுமே முட்டுக்கட்டை போட்டதில்லை.

அவளின் விருப்பப்படி தொல்லியல் துறையைத் தேர்வு செய்து படித்து முடித்து தொல்லியலில் இளம் ஆய்வாளராகவும் (ஆர்க்கியாலஜிஸ்ட்) ஆகி விட்டிருந்தாள்.

அகழ்வாராய்ச்சி செய்வதற்காகவும், கோவில்கள், மண்டபங்கள், சிலைகள், சிற்பங்களை ஆய்வு செய்வதற்காகவும் அவள் செல்லும் போதெல்லாம்... துணையாய் அப்பாவும் கூடவே வருவதுண்டு.

இவள் ஆய்வுப் பணியில் தீவிரமாய் இறங்கும் போது... அவர் அலாதியாய் ஒதுங்கி வெகு தூரத்திலிருக்கும் மரத்தடியிலோ அல்லது சுவரோரமாகவோ முதுகுகாட்டி அமர்ந்து மும்முரமாய் டைரியில் எதையோ எழுதிக் கொண்டிருப்பது வழக்கம்!

'அப்படி மாய்ந்து மாய்ந்து ரகசியமாய் என்னதான் எழுதி வைத்தாரோ?' மனம் விட்டு அப்பா எதையும் சொல்லவில்லை.

இதோ... அவருக்கு அந்திம காலமும் நெருங்கி விட்டது. உற்றார், உறவினர், சொந்த பந்தங்கள், இரத்த சம்பந்தம் உள்ளவர்கள் என்று யாருமே இல்லாத அனாதையாய் அகதி போல் நிற்கிறேனே?

இந்த சோகம் போதாதென்று... புதிதாய் ஒரு பிரச்சினையும் முளைத்து விட்டதே?

இதை யாரிடம் சொல்லி அழுவேன்?

அப்பா! தெய்வாதீனமாய் நீங்கள் இந்த கண்டத்திலிருந்து மீண்டு விடுங்களேன்... ப்ளீஸ்...'

யதார்த்தம் புரிந்தாலும் பச்சைக்குழந்தையாய் மனம் பரிதவிக்கத்தான்

செய்தது.

முழங்கால்களைக் கட்டிக் கொண்டு முகம் புதைத்துக் கேவி அழுதாள்.

ஏதோ சப்தம் கேட்டு மெல்ல நிமிர்ந்தாள்.

தரையில் தன் அருகே படர்ந்திருந்த நிழலைப் பார்த்து திடுக்கிட்டு ஏறிட்டுப் பார்த்தாள்.

அவளை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தவனைக் கண்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

''நீ...ங்களா?''

## 2

அதிசயாவுக்கு தன் மேனி எங்கும் கரப்பான் பூச்சி படர்வது போல் அருவருப்பாக இருந்தது.

ஒரு காதலனைப் போன்று வெகு உரிமையாய் கிட்டத்தில் வந்து நின்றபடி அவளைப் பார்வையால் அளவெடுத்துக் கொண்டிருந்தான் சுகுமார்.

சரக்கென்று நான்கடி பின்னால் நகர்ந்து நின்றாள் அதிசயா.

சிவராமன் பணியாற்றிய கல்லூரியில்... இளம் விரிவுரையாளராக நான்கு வருடங்களுக்கு முன்னர்தான் வேலைக்குச் சேர்ந்திருந்தான்.

ஒரே துறை... பணிவும் பவ்யமுமாய் மரியாதையுடன் நடந்து அவ்வப்போது உச்சி குளிர வைத்துப் பேசி... சிவராமனின் மனதில் இடம் பிடித்து விட்டிருந்தான்.

நல்ல மதிப்பை சம்பாதித்து விட்ட உரிமையில்... சாயந்தரம் ஆகி விட்டால் தினமும் வீட்டிற்கே வந்து விடுவான்.

அரசியல், பொது அறிவு, ஜோதிடம், சித்தாந்தம், வேதாந்தம் என்று ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி... நேரம் போவது தெரியாமல் மணிக்கணக்காய் பேசி விட்டு இரவு எட்டு மணி வாக்கில் கிளம்பிச் செல்வான்.

சிந்தாமணியை உரிமையாய் 'அக்கா' என்று தான் அழைப்பான்.

நாள் கிழமைகளில் தம்பதி சமேதராய் இருவரையும் நிற்க வைத்து காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கத் தவறமாட்டான்.

அழகுப் பதுமையாய் நடமாடும் அதிசயாவைக் கண்டால்... மரியாதை நிமித்தமாக வணக்கம் வைப்பதோடு சரி!

கண்ணியமாய் - இவளை ஏறெடுத்தும் பார்க்காமல் - தான் இருந்தான்.

''ஏங்க.. சுகுமார் ரொம்ப நல்ல டைப்... இல்லையாங்க? இந்தக் காலத்துல இப்படியொரு கண்ணியமான - நேர்மையான பிள்ளையைப் பார்க்கிறது அபூர்வம்...'' என்று சிந்தாமணி அடிக்கடி இவனைப் பற்றி பாராட்டுப் பத்திரம் வாசித்தாள்.

'சார்... நீங்க பெரிய ஜீனியஸ்... உங்களை மாதிரி பெரியவங்களோட அன்பும் ஆசீர்வாதமும் கிடைக்கிறதுக்கு நான் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும் சார்' என்று அடிக்கடி சிவராமனுக்கு ஐஸ் வைத்து, மகுடிக்கு மயங்கிய நாகமாய் ஆக்கி விட்டிருந்தானே..!

''இவனோட அப்பா பக்கத்துல மாங்காட்டுல பல வருஷங்களா தொடர்ந்து கவுன்சிலரா இருக்காரு. காடு, கழனி, தோட்டம்னு நல்ல வசதி இருக்கு. ஒரே புள்ளை. படிச்சு வேலைக்குப் போய் சம்பாதிக்கணும்ன்னு லட்சியத்தோட இருந்திருக்கான். பெரியவங்க கிட்டே காட்டற மரியாதை இருக்கே? கண்டிப்பா அவன் அமோகமாத்தான் இருப்பான்...''

மனமார வாழ்த்தினார் சிவராமன்.

பார்க்கும் பார்வையிலேயே ஒரு ஆளை எடைபோடத் தெரிந்த மனிதர் தான். இவன் விஷயத்தில் வெள்ளந்தியாய்... வெகுளியாய் இருந்தது நிஜம்!

அந்த அளவுக்கு இந்த எமகாதகன் இவரிடம் சிறப்பாய் நடித்திருக்கிறான் என்று தான் சொல்ல வேண்டும்.

அப்பாவிற்கு உடல் நலக் குறைவு ஏற்பட்ட இந்த ஒரு மாதத்தில் தான்... இவனது 'நீலச்சாயம்' மெள்ள மெள்ள வெளுக்க ஆரம்பித்தது.

''சுகு வரலையாம்மா?'' என்று ஏக்கத்துடன் தீனமாய் அப்பா அடிக்கடி கேட்க ஆரம்பித்தார்.

''இல்லையேப்பா...''

''அவன் வந்தா... ஏதாச்சும் பேசிட்டிருக்கலாம்ன்னு பார்த்தேன். ஃபோன் கூட பண்ணலையா அதிசயா?''

''பண்ணலைப்பா...''

அக்கம் பக்கத்தில் இருந்தவர்களாவது கூடமாட ஆஸ்பத்திரிக்கு வந்து உதவினார்கள்.

சுகுமார் ஆஸ்பத்திரிக்கு ஒரே ஒரு தடவை தான் வந்து எட்டிப் பார்த்தான்.

''என்ன அதி? மாமாவுக்கு எப்படி இருக்கு?''

''மாமாவா?'' அதிசயாவுக்கு வித்தியாசமாய் பட்டது.

''ஆமா... உங்கம்மாவை அக்கான்னு தானே கூப்பிடுவேன். அப்போ இவரு எனக்கு மாமா தானே?'' என்று தினுசாய் பார்த்தபடி சிரித்தான்.

''எப்பவும் அப்பாவை 'சார்'னு தானே கூப்பிடுவீங்க? என்ன திடீர்ன்னு?'' வெடுக்கென்று கேட்டு விட்டாள்.

''கூப்பிட்டா என்னவாம்? அவரோட மனசுல நான் இடம்

பிடிச்சிருக்கேனே? இப்படி கூப்பிட்டா அவரு சந்தோஷம்தான் படுவாரு உரிமை இருக்கு - கூப்பிடறேன். நீ ஏன் கோபமா முகத்தைத் திருப்பிக்கிட்டே அதி?''

அவன் உரிமையாய் ஒருமையில் விளித்ததும்... 'அதி' என்று செல்லமாய் சுருக்கி அழைத்ததும்... அவளது கோபக்கனலை இன்னமும் விசிறி விட்டது.

''உரிமை இருக்குன்னு சொல்றவரு.. ஏன் இத்தனநாளா பாராமுகமா இருந்தீங்களாம்? அப்பா அடிக்கடி கேட்டாரு தெரியுமா? இத்தனை நாளா 'எட்டிப் பாக்காம' இருந்தீங்களே?''

''கோபத்தைப் பாரேன்! பாராமுகமா நான் இருந்துட்டேனா? கொஞ்ச நாள் பாக்காம இருந்தாத்தான்... மனசுல ஒரு ஏக்கம் வரும்; நெருக்கம் வரும்னு நெனச்சேன். அது சரியாத்தானிருக்கு. தினமும் இனிமே ஆசை தீரப் பார்த்துக்கலாம்...''

அதிசயாவுக்கு தூக்கி வாரிப்போட்டது.

'என்னது இது? ஒருவேளை 'தண்ணி' அடித்து விட்டு வந்து விட்டானோ? பைத்தியம் போல் இப்படி பிதற்றுகிறானே?'

அவளது கோபம் எல்லை கடந்தது.

''மிஸ்டர்! என்னாச்சு உங்களுக்கு? நிதானத்துல தான் இருக்கீங்களா? இது ஹாஸ்பிடல்...! எங்கப்பா சீரியஸா இருக்காரு... நான் உயிரைக் கையில புடிச்சுக்கிட்டு இருக்கேன். என்கிட்டே வந்து இப்படி பேசறதுக்கு எப்படி மனசு வந்துச்சு? நான்சென்ஸ்...''

''நோ... நோ! நான், சென்ஸோட தான் இருக்கேன். ரொம்ப நாளா மனசைத் திறந்து பேசணும்னு ஆசை! இன்னிக்குதான் சந்தர்ப்பம் கிடைச்சது...''

''ஏன்... அப்பா திடகாத்திரமா இருக்கும்போது பேசியிருக்க வேண்டியது தானே? கேட்கிறதுக்கு யாருமே இல்லைன்னு இப்போ தான் தைரியம் வந்துச்சோ?''

''உண்மைதான் அதி! ஒத்துக்கிறேன்... எனக்கு பதில் சொல்லு அதி...''

''பதிலா? அதான் சொன்னேனே? அப்பா 'சீரியஸ்' கண்டிஷன்லே தான் இருக்காரு...''

''ப்ச்! நான் அதைக் கேட்கலை... உன்னோட அழகுக்கு இந்த உலகத்தையே எழுதி வைக்கலாம். அதிசயான்னு பேர் வச்சாங்களே..! அவங்களை பாராட்டியே தீரணும். என் வாழ்நாள்லே இப்படியொரு பேரழகியை நான் பார்த்ததே இல்லை.

நீ எனக்கு வேணும் அதி! என்ன அப்படி பார்க்கிறே? ஆமா.. நா ஒத்துக்கிறேன் எனக்கு பித்து பிடிச்சு போச்சு. இது காதல் பித்து...''

''ஸ்டாப் இட்! சே... நெஞ்சுல ஈரமே இல்லாத மனுஷனா இருக்கீங்களே!



எங்கப்பா உயிருக்கு போராடிக்கிட்டு இருக்காரு. துக்கத்துல கலங்கிப் போய் நிக்கிற பொண்ணுகிட்டே வந்து இப்படி பினாத்தறீங்களே? அப்பெல்லாம் 'சார்... சார்'னு அப்பாவை சுத்தி சுத்தி வந்து உருகுனீங்க...

இப்போ அவரோட நிலைமையைப் பத்தி கடுகளவுகூட நெனச்சு... ஃபீல் பண்ணற மாதிரி தெரியலையே? அப்போ... எல்லாமே நடிப்பு தானா? சேச்சே... என்னால ஜீரணிக்கவே முடியலை.''

ஊசிப்பட்டாசாய் பொரிந்து தள்ளினாள் அதிசயா.

''நடிப்புதான்! ஒத்துக்கிறேன். ஒரு வயசுப் பொண்ணு இருக்கிற வீட்டுக்கு... என்னை மாதிரி ஒரு இளைஞனை யாராச்சும் நுழைய விடுவாங்களா? மாட்டாங்கதானே? தற்செயலா உங்கப்பாவோட பர்ஸில் உன்னோட ஃபோட்டோவைப் பார்த்தேன். உன்னோட அழகைப் பார்த்து அசந்துட்டேன். திட்டம் போட்டு உங்கப்பாவோட மனசுல இடம் பிடிச்சேன்.

உரிமையா தினமும் உன் வீட்டுக்கே வந்து... உன்னை ஒரு செகண்டாவது ஆசை தீரப் பார்க்க ஆரம்பிச்சேன். தினமும் உன்னோட தரிசனத்துக்காக நான் எவ்வளவு மெனக்கெட்டேன் தெரியுமா?''

வெற்றிக் களிப்புடன் தலையை சரித்து சிரித்தான் சுகுமார்.

'அடப்பாவி! நம்பிக்கை துரோகி! உன்னை நல்லவன்னு நம்பித் தானே... வீட்டுக்குள்ளே அனுமதிச்சு அப்பா மணிக்கணக்கா சிரிச்சுப் பேசிட்டிருந்தாரு... பொறுக்கித்தனமா என்னை 'சைட்' அடிக்க வந்திருக்கியே... இதைக் கேட்டா அப்பா எவ்வளவு வேதனைப்படுவாரு...' என்று சூடாய் கேட்க வேண்டும் என்று நினைத்தாள்.

மறுகணமே நினைப்பை மாற்றிக் கொண்டு... 'இந்த தரம்கெட்ட மனிதனிடம் பேசிப் பிரயோஜனம் இல்லை' என்று தீர்மானித்து விருட்டென்று வெளியேறி, ஆஸ்பத்திரி வளாகத்திலிருந்த 'ஆரோக்கிய விநாயகர் சன்னதி'க்குள் சென்று சம்மணமிட்டு அமர்ந்து விட்டாள்.

'யாருமில்லாமல் நாதியற்று நிர்க்கதியாய் நான் நிற்கிறேனே... இந்த தைரியத்தில் தானே.. இந்தப்பாவி இத்தனை துணிச்சலாய் வந்து என்னிடம் பேசுகிறான்.

கடவுளே! அப்பா எனக்கு வேணும்! நான் அனாதையாகி விடக்கூடாது... எனக்காக பிழைச்சு வந்துடுங்க அப்பா!'

தாரை தாரையாகக் கண்ணீர் உகுத்தபடி பிரார்த்தனை செய்தும் பிரயோஜனம் இல்லை.

இதோ.. அன்று ஆஸ்பத்திரிக்கு வந்தவன்... இன்று வீட்டிற்குள் நுழைந்திருக்கிறான்.

கதவைத் தாழிடாமல் வெறுமனே சாத்தி வைத்தது தவறாய் போய் விட்டதே!

"பயந்துட்டியா அதி? என்னைத் தவிர இந்த வீட்டுக்கு வேற யார் வருவாங்க?" என்றபடி நெருங்கி வந்தவனை... சட்டென்று கையமர்த்தினாள்.

"அங்கேயே நில்லுங்க... இனிமே வீட்டுக்குள்ளே வராதீங்க... அப்பா ஆரோக்கியமா இருந்தப்போ வந்துட்டிருந்தீங்க... இப்போ கதையே வேற... தயவு செஞ்சு வெளியில் போயிடுங்க..."

துணிவைத் திரட்டிக் கொண்டு அதட்டினாள் அதிசயா.

"ஒரு மாசத்துக்கு முன்னாடியே... 'சீக்கிரமா நான் கண்ணை மூடிடுவேன் சுகு! எனக்கு ஆயுசு அவ்ளோ தான்'னு... மாமா என்கிட்டே சொன்னாரு தெரியுமா? உனக்கு ஆதரவு இனி நான்தான். உன்னை 'மாலையும் கழுத்துமா பார்க்காம போறோமே!'ன்னு அவருக்கு ரொம்ப ஏக்கம்..."

"ஓ... அந்த ஏக்கத்தை தீர்த்து வையுங்களேன். உசுரு இருக்கும்போதே பார்த்துட்டு நிம்மதியா போய் சேரட்டும். போய் உங்க வீட்டுப் பெரியவுங்களை கூட்டிட்டு வாங்க.. எங்கப்பா எதிரிலேயே என் கழுத்துல தாலியைக் கட்டுங்க. அவரோட ஆத்மா சாந்தி அடையட்டும் உங்க புண்ணியத்துல..."

"அ... அது.. அது எப்படி? எங்க வீட்டுல எனக்குப் பெரிய இடத்துல பொண்ணு பார்த்துட்டிருக்காங்க... அவங்களைக் கன்வின்ஸ் பண்றது கஷ்டமாச்சே?"

"பரவாயில்ல... மெதுவா கன்வின்ஸ் பண்ணிக்கோங்க... இப்போ அக்கம் பக்கத்துல இருக்கிறவங்களை சாட்சியா கூப்பிட்டு... என் கழுத்துல தாலியைக் கட்டுங்க..."

அழகான அகண்ட கண்கள் விரிய அவனை உறுத்துப் பார்த்தாள்.

"அதெப்படி..? நாதியத்து நிக்கிற உன் கழுத்துல... நான் எப்படி தாலி கட்டறது? அது முடியாது...!"

கோபத்தில் அக்னி துண்டங்களாய் அவளது விழிகள் பளபளத்தன.

"நினைச்சேன்... அப்படின்னா... என்னை உன்னோட ஆசை நாயகியா வச்சுக்கலாம்னு பார்த்தியா?"

"அப்பாடா... ஒரு வழியா புரிஞ்சுடுச்சா அதி? காலத்துக்கும் உன்னை நான் காப்பாத்தறேன். இனி உனக்கு சகலமும் நான் தான்டா..."

"தூ! போடா... பொறுக்கி நாயே! கத்தி கூச்சல் போட்டு ஊரைக்கூட்டி அசிங்கப்படுத்தறதுக்கு முன்னாடி... ஓடிப் போயிடுடா..."

"நிறுத்து அதி! உணர்ச்சி வசப்படாதே! ஊருக்குள்ளே என்ன பேசிக்கிறாங்க தெரியுமா? 'அதிசயா சுகுமாரோட 'கீப்'புன்னு. நான்தான் அப்படி பத்த வச்சேன். வதந்தி, தீயா பரவிடுச்சு...

நீ சத்தியம் அடிச்சு சொன்னாலும் நம்பமாட்டாங்க. எவனும் துணிஞ்சு வந்து உன்னை... அதுவும் நாதியில்லாத உன்னை... கட்டிக்கப் போறதில்ல.. மீறி யார் வந்தாலும் நான் விடப் போறதில்லை....



அவமானச் சின்னமா தனிமரமா நின்னு காலத்துக்கும் அவதிப் படப் போறியா? இல்ல.. எனக்கு இணக்கமா வாழ்ந்து நிம்மதியா, சந்தோஷமா காலத்தை ஓட்டப் போறியா? முடிவு பண்ணிக்கோ அதி!"

"அப்படியொரு கேடு கெட்ட வாழ்க்கை வாழ்வேன்னு எதிர்பார்க்கிறியா? பாவி... அதுக்கு வேற ஆளைப் பாரு... செத்தாலும் சாவேனே தவிர.. உன் எண்ணம் ஈடேறாதுடா ராஸ்கல்...."

"தேர் இஸ் நோ அதர் வே... வேற வழியில்லாம... நீ என் வழிக்கு வருவே டார்லிங்! வர வைப்பேன். என்கிட்டே மோதிட்டே இல்ல... என் சுயரூபத்தைக் காட்டறேன் பாரு! என் பொறுமையை நீ ரொம்ப சோதிச்சா... என்னாகும் தெரியுமா?

பத்து ரவுடிகளை விட்டு.. உன்னை... என்ன? நான் சொல்றது புரியுதா? என் கிட்டேயிருந்து நீ தப்பவே முடியாது... ஜாக்கிரதை. புத்திசாலித்தனமா நடந்துக்கோ...! இல்லேன்னா... சின்னாபின்னமாயிடுவே... வரட்டுமா செல்லம்..."

விருட்டென்று வெளியேறி விட்டான் சுகுமார்.

அதிர்ச்சியிலும் பயத்திலும் அதிசயாவின் மலர்மேனி கிடுகிடுவென்று நடுங்கியது.

## 3

கதவைத் தாழிட்டு விட்டு... அப்பா சிவராமனின் அருகே வந்து நின்ற அதிசயாவுக்கு அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

சரிந்து அமர்ந்து தேம்பி அழுதாள்.

'அப்பா! என்னோட கதியைப் பார்த்தீங்களாப்பா?

நீங்க உயிரோட இருக்கும்போதே.. எப்படி மிரட்டிட்டுப் போறான் பார்த்தீங்களாப்பா?

உங்க கண் எதிரிலேயே துணிச்சலா... என்னை 'ஆசைநாயகியா இரு'ன்னு மிரட்டறானே?

இவனைப் போய் நம்பினீங்களே?

நாதியத்து நிற்கிறதால தானே... துணிஞ்சு சவால் விட்டுட்டுப் போறான்.

அவன் கிட்டேயிருந்து நான் எப்படி தப்பிக்கப் போறேன்? அவன் எதுக்கும் துணிஞ்சவன். சொன்னதை செஞ்சுடுவான். அந்த வெறி அவன் முகத்துலேயும் குரல் தொனியிலேயும் தெரியுதே?

நான் என்ன செய்யப் போறேன் அப்பா?

இது உங்களுக்கே நியாயமா அப்பா?

இவன்கிட்டப் போய் மனசுவிட்டு உங்க அந்திம காலம் நெருங்கிடுச்சுன்னு
சொல்லியிருக்கீங்க...

பெத்த மகள்கிட்டே வெளிப்படையா பேசாம மறைக்கிறீங்க! என்னோட
அழகே... எனக்கு ஆபத்தாயிடுச்சேப்பா...?

இந்த உலகத்துல அழகான இளம் பெண்... நிர்க்கதியா நின்னா... பேராபத்து
வரும்கிறது என் விஷயத்துல சரியாயிடுச்சே? தினமும் இந்தப் பாவி வீட்டுக்கு
வந்து போயி.. கடைசியில நரித்தனமா என்னோட பேரைக்
களங்கப்படுத்திட்டானேப்பா...

களங்கத்தை எப்படிப்பா துடைக்கப் போறேன்?

யாரு நம்புவாங்க? களங்கம் சுமத்தப்பட்ட பெண்ணை இனி யாரும்
கட்டிக்கத் துணிய மாட்டாங்களே?

எனக்கு கல்யாணம் நடக்காட்டியும் பரவாயில்ல... கையில நல்ல வேலை
இருக்கு.

சொந்தக் கால்லே நின்னு நான் பிழைச்சுக்க முடியும். எந்தக் கறையும்
படாமலேயே... என் பேர் களங்கப்பட்டுடுச்சே?

அதைத்தான் என்னால தாங்கிக்கவே முடியலை...

அது மட்டுமா? அவனோட ஆசைக்கு இணங்காட்டி... 'ரவுடிகளை விட்டு
உன்னை நாசப்படுத்திடுவேன்'னு சொல்லிட்டானே?

எப்படிப் பார்த்தாலும்... எனக்குப் பெரிய ஆபத்து காத்திருக்கே..?

நான் எப்படி தப்பிக்கிறது?

ஊகூம்... வேற வழியே இல்லைப்பா...

உங்க உயிர் பிரிஞ்சதும்... உங்களுக்கு செய்ய வேண்டிய கடமையை
செய்துட்டு.. நானும் உங்க கூடவே வந்துடறேன்.

எஸ்... நான் என்னை முடிச்சுக்கப் போறேன் அப்பா! எனக்கு வேற வழி
தெரியலை...'

கேவி அழுதவளின் பார்வை சட்டென்று அப்பாவின்மேல் நிலை குத்தி
நின்றது.

உயிர் இழுத்துக் கொண்டு தான் இருந்தது.

அப்பாவின் விழியோரம் கண்ணீர் வழிந்து கொண்டு இருந்தது.

மூன்று நாட்களாக கண்ணை மூடியபடி கிடந்தவர்... இப்போது கண்ணைத்
திறந்திருக்கிறார்.

முகத்தில் ஏதோ ஒரு பாவனை!

எதையோ சொல்லத் துடிப்பது புரிந்தது.

ஆனால்... அவரால் பேச முடியவில்லை.

'மகளை அனாதையாக தவிக்க விட்டுப் போகிறோமே!' என்று அவர்



உள்ளுக்குள் புழுவாய் துடிதுடிப்பதை.... அதிசயாவால் நன்கு உணர முடிந்தது.

'ஜடமாய் கிடந்தவர் - பார்க்கிறார். எதையோ சொல்லிவிடத் துடிக்கிறார்.
கண்ணீர் வடிக்கிறார். 'அப்பா பிழைத்துக் கொள்வார் போலிருக்கிறதே'

"பகவான் நம்மைக் கைவிட மாட்டாருப்பா. நீங்க பிழைச்சுக்குவீங்கப்பா...
உங்களுக்கு ஒண்ணுமில்ல.. எல்லாத்தையும் நீங்க கடந்து வந்துட்டீங்கப்பா..."

அவரது கையைப் பற்றிக் கொண்டு ஆறுதல் கூறினாள்.

"உ.. உனக்கு... பெ... பெ... பெண் தெய்வம்... து... துணை இருக்குன்னு...
ச... ச... சடையாண்டி சித்தர் அ... அருள் வாக்கு கு... குடுத்திருக்காரு... க...
கவலைப் படாதே.. அதி...சயா!" என்றபடி வலதுகரத்தை மெல்ல உயர்த்தி...
ஆள்காட்டி விரலால் எதிரில் சுட்டிக் காட்டினார்.

அவர் சுட்டிக் காட்டிய திசையில்... பார்வையாலேயே பயணித்தாள்.

'அலமாரியை சுட்டிக் காட்டுகிறாரே! அதுவும் அது அம்மாவின் அலமாரி!

அம்மா இறந்த பின்பு.. எனக்குத் தெரிந்த வரையில் இதைத் திறப்பதே
இல்லையே?'

குழப்பத்துடன் திரும்பி அப்பாவின் முகத்தைப் பார்த்தாள்.

"புரியலைப்பா... பெண் தெய்வமா? சடையாண்டி சித்தரா? அவரு
உங்களுக்கு அருள்வாக்கு குடுத்தாரா? எங்கே? எப்போ? தெளிவா
சொல்லுங்கப்பா..."

அப்பாவின் வலது கரம் பொத்தென்று விழுந்தது.

"பெ... பெண் தெ... தெய்வம்.. உ.... உன்னைக் காக்கும்" குமுறித் திணறிப்
பேசியவர்... ஒரு கணம் ஆழமாய் இவளது விழிகளை ஊடுருவினார்.

மறுகணம் சட்டென்று விழிகளை மூடிக்கொண்டார். தலை இலேசாய் இடது
புறமாய் சரிந்தது.

"அ... அ.... அப்பா! உங்க முகத்துல தெரிஞ்ச தெளிவைப் பார்த்துட்டு
ஏமாந்துட்டேனேப்பா... அணையப் போகிற விளக்கு பிரகாசமா எரியறமாதிரி
கடைசி கணத்துல தெளிவு வந்து எதையோ அரைகுறையா சொல்லிட்டு...
அனாதையாக்கிட்டுப் போயிட்டீங்களேப்பா...

அ... அப்பா... என்னை விட்டுப் போயிட்டீங்களே?"

கல் மனமும் கரையும் வண்ணம் கதறி அழுதாள்.

அப்பாவுடன் பணியாற்றியவர்கள், பழகியவர்கள், அக்கம் பக்கத்தில்
உள்ளவர்கள் என்று இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கு மத்தியில்
சுகுமாரனும் இருந்தான்.

தன் தலைவிதியை எண்ணி நொந்து கொண்டாள் அதிசயா.

அன்றிரவு... கூட்டம் கலைந்து சென்றதும் தலைவிரி கோலமாய்

அமர்ந்திருந்தவளுக்கு ஏதோ பொறி தட்டியது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு துக்கத்தை விழுங்கியபடி மரணத் தறுவாயில் அப்பா சொன்னதை யோசித்துப் பார்த்தாள்.

'அப்பா! நீங்க சொன்னது உண்மைதானா? இல்ல... உயிர் போகப் போற தருணத்துல எனக்கு ஆறுதலா சில வார்த்தைகள் சொல்லிட்டுப் போயிட்டீங்களா?'

அப்படித்தான் இருக்கணும். 'உங்கம்மா சுமங்கலியா போய் சேர்ந்துட்டா... நம்ம குடும்பத்துக்கு அவ தான் தெய்வம்'னு அடிக்கடி சொல்வீங்களே...?

அப்படின்னா... பெண் தெய்வம்னு நீங்க சொன்னது அம்மாவைத்தானே?

அந்த அர்த்தத்துல தானே... நீங்க அம்மாவோட அலமாரியைச் சுட்டிக் காட்டினீங்க...

போங்கப்பா... 'சுகுமார்ங்கிற அரக்கன் கிட்டேயிருந்து என்னை அம்மா காப்பாத்திடுவாங்க'ன்னு நம்பச் சொல்றீங்களா?

அந்த நேரத்துக்கு ஏதோ ஆறுதல் சொல்லணும்னு சொல்லிட்டுப் போயிட்டீங்க.

இதை நம்பிக்கிட்டு நானும் நிம்மதியா இங்க இருக்க முடியுமா? அந்தப் பாவி மறுபடியும் வருவானே?

நான் மசியலைன்னா... ரவுடிகளை ஏவி விட்டுருவேன்னு சொல்லிட்டுப் போயிருக்கானே?

'தற்கொலை செய்துக்கிறது மகா பாவம்'னு... நீங்களும் அம்மாவும் சொல்லி வளர்த்திருக்கீங்க தான்...

சுகுமார் பணபலம் மிக்க ஆளு... அவன்கிட்டே நான் மோதி ஜெயிக்க முடியாதே?

கடைசியா என்னவோ சொன்னீங்களே? சடையாண்டி சித்தர்னு... அது யாராக இருக்கும்?

அம்மா இறந்ததுக்கு அப்புறம் அடிக்கடி நீங்க மலைவாசஸ்தலங்களில் இருக்கிற ஆசிரமங்களுக்குப் போய் வந்தீங்க...

பாபநாசம், சொரிமுத்து அய்யனார் கோவில், சுருளி, சதுரகிரி, கஞ்சமலை, பாம்பாட்டி சித்தர் ஜீவ சமாதி அடைஞ்ச சங்கரன் கோவில்னு பல இடங்களுக்குப் போயிட்டு வந்தீங்க... அங்கே உங்களுக்கு உண்டான ஆன்மீக அதிர்வைப் பற்றி சிலாகிச்சு சொல்வீங்க...

சடையாண்டி சித்தரைப் பத்தி நீங்க இதுவரைக்கும் என்கிட்டே சொன்னதே இல்லையே?

அருள்வாக்கு குடுத்ததா வேற சொன்னீங்க! எங்கே, எப்போ, எப்படினு ஒண்ணுமே புரியலையேப்பா...



சரி... இருக்கட்டும்... என் முடிவுலே மாற்றமில்லை. கடமையை செய்துக்கிட்டே என் உயிரைப் போக்கிக்கலாம்ங்கிற முடிவுக்கு வந்துட்டேன்.

பசி வயித்தைக் கிள்ளுதுப்பா... என் வேதனையும் துக்கமும் இதயத்தைப் பாறாங்கல்லாய் கனக்க வைக்கிறப்போ... எப்படி பசி எடுக்குதுன்னு தெரியலை...'

மானசீகமாய் அப்பாவுடன் பேசியவள் எழுந்து மடக் மடக் என்று தண்ணீரைப் பருகி இரைந்த வயிற்றை நிரப்பிக் கொண்டு அந்த அலமாரியின் அருகில் போய் நின்றாள்.

அலமாரியை தயக்கத்துடன் மெல்லத் திறந்தாள்.

அம்மா சிந்தாமணியின் பட்டுப்புடவைகளும் காட்டன் புடவைகளும் நேர்த்தியாக - தனித்தனியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

பத்துக்கும் மேற்பட்ட புதுச் சேலைகளை அம்மா கட்டாமலே போய் சேர்ந்து விட்டிருந்தாள்!

அம்மா வீட்டு உபயோகத்திற்கு என்று வைத்திருந்த பழைய புடவைகளை... அதிசயா தன் அறையில் படுக்கையில் பத்திரப்படுத்தி வைத்திருந்தாள்.

இரவில் தலைமாட்டில் அந்தப் புடவைகளை வைத்துக் கொண்டுதான் தூங்கினாள்.

மெத்தென்ற காட்டன் புடவையில் தலையை சாய்த்தால் அம்மாவின் மடியில் படுத்துக் கொண்டிருப்பதைப் போன்று... அலாதி நிம்மதியும் சுகமும் கிடைக்கும்.

அதே நேரத்தில் துக்கமும் பீறிட்டுக் கொண்டு வரும். 'ஏம்மா உனக்கு அவசரம்? மாயமா என்னை விட்டுட்டுப் போயிட்டியேம்மா?' மெல்ல முணுமுணுத்தபடி புடவை நனையும் வண்ணம் கண்ணீர் உகுப்பாள்.

அம்மாவும் சரி... அப்பாவும் சரி.. அதிசயாவிடம் நண்பர்களைப் போல்தான் பழகி பாசத்தைக் கொட்டினார்கள்.

அதனால்தானோ என்னவோ... அவளுக்கு இழப்பின் வேதனை சற்று அதீதமாகவே இருந்தது.

அப்பா சுட்டிக்காட்டியதால்... அலமாரியில் எதையோ தேடப் போனவள்... சகலத்தையும் மறந்துவிட்டு மீண்டும் விம்மினாள்.

'அம்மா! நீ போனதையே என்னால ஜீரணிக்க முடியல. அதுக்குள்ளே அப்பாவும் என்னை அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டாரே?'

நீர்த் திரையிட்ட விழிகளால் அடுக்கப்பட்டிருந்த புடவைகளை ஏறிட்டவளுக்கு... அதற்கு மேல் தாங்க முடியாமல் சட்டென்று அலமாரியை மூடி விட்டாள்.

டிராயரைத் திறந்து பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்.

அலமாரியை மூடியவள் அதில் சாய்ந்து நின்றபடியே நேரம் போவது தெரியாமல்.. மவுனமாய் கண்ணீர் வடித்தபடி இருந்தாள்.

இந்தப் பிரபஞ்சத்தில் தான் மட்டும் தனித்து விடப்பட்டது போலிருந்தது. சிறு வெளிச்சப் பொட்டுகூட தட்டுப்படாத அந்தகார இருளில் மூழ்கிக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வில் தவித்துப் போனாள்.

அழுதழுது மூக்கில் நீர் கோர்த்து மூக்கு அடைத்துக் கொண்டது. மெள்ள சரிந்து அமர்ந்து முந்தானையால் மூக்கையும், கண்களையும் துடைத்தாள்.

அதீத துக்கத்தாலும் பசிக் களைப்பாலும் தன்னையும் மீறி உறங்கிப் போனாள்.

விதி சிரித்தது. அவளை அத்துவானக் காட்டில் அலைக்கழிய வைக்க தக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

## 4

“இனியன்! இவன்தான் என்னோட பால்ய நண்பன் சபாபதி! நானும் இவனும் இணைபிரியாத நண்பர்கள். வா... வந்து இவன்கிட்டே ஆசீர்வாதம் வாங்கிக்கோ!'' தாத்தா கைலாசம் உத்தரவிட்டதும்... உடைத்த கோதுமை நிறத்தில் வாட்ட சாட்டமாய் இருந்த இனியன்... பவ்யமாய் நெருங்கி வந்து ''என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க தாத்தா'' என்றபடி சபாபதியின் பாதங்களைத் தொட்டுப் பணிந்தான்.

''தீர்க்க ஆயுளோட சவுக்கியமா இருப்பா'' - அவனது உச்சந்தலையில் கை வைத்து ஆசீர்வதித்த சபாபதி... அவனை ஏறஇறங்கப் பார்த்தார்.

''மூணு தலைமுறையாக உங்க நட்புல எந்த விரிசலும் இல்லாம தொடருதுன்னா... அது ரொம்ப ஆச்சரியமான விஷயம் தாத்தா! ரொம்ப சந்தோஷமா இருக்கு. உங்க வெள்ளிமலை எஸ்டேட் பார்க்க ரம்யமா... அழகா இருக்கு...''

பளிச்சென்று பல் வரிசை தெரிய முறுவலித்தான் இனியன்.

''இந்த வெள்ளிமலை மட்டுமில்ல... சுத்துவட்டாரத்துல உள்ள எஸ்டேட்டுகள், திராட்சைத் தோட்டம், முந்திரி தோட்டம்னு திரும்பின திசையெல்லாம் இவனோட ஆளுகைக்கு உட்பட்டதுதான் இனியா!''

''தாத்தா! நீங்களே நியாயத்தைச் சொல்லுங்க. நான் வெளிநாட்டுல படிச்சுட்டு வந்தேன். எம்.பி.ஏ. முடிச்ச கையோட நல்ல வேலையும் கிடைச்சது. வேலையில் சேர்ந்து ஆறுமாசம் கூட ஆகலை. எங்க தாத்தா சீரியஸா இருக்காருன்னு... மதுரையிலிருந்து மேனேஜர்.. ஃபோன் பண்ணினாரு.



பதறி அடிச்சுட்டு ஓடி வந்தா... தாத்தா ஹெல்த்தியா நடமாடிக்கிட்டு இருக்காரு. 'ஏன் தாத்தா? எதுக்கு பொய் சொல்லச் சொன்னீங்க?'ன்னு கேட்டா... 'நீ வரப் போற சந்தோஷத்துல உடம்புல தெம்பு கூடிப் போச்சு...

இனிமே நீ சென்னைக்குப் போக வேணாம்... நம்ம பண்ணைகளையும் கடைகளையும் தோப்பு துரவுகளையும் கவனிச்சுட்டு இங்கேயே இரு'ன்னு கண்டிஷன் போடறாரு. 'அப்புறம் என்னத்துக்கு இவ்ளோ செலவழிச்சு படிக்க வச்சீங்க?'ன்னு கேட்டா... 'அதெல்லாம் ஒரு கவுரத்துக்கு தானே? நீ என் வார்த்தையை மீறிப் போனா.. அடுத்த கணமே நான் உசுரை விட்டுருவேன்'னு பிளாக்மெயில் பண்றாரு... நல்ல பதவியில் இருக்கேன். அந்த நிறுவனத்துக்கு நான் என்ன பதிலை சொல்றதாம்? உங்க நண்பர் பிடிவாதம் பிடிக்கிறது சரிதானா தாத்தா? உங்களைப் பார்த்து ரொம்ப காலமாச்சு. வெள்ளி மலைக்கு உடனே கூட்டிட்டுப் போன்னு ஒத்தைக்கால்லே நின்னுட்டாரு. அதான் தாத்தாவைக் கூட்டிட்டு வந்தேன். இப்போ நீங்க தான் நடுவரா இருந்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்ப்பு சொல்லணும்...'' பேசியபடி சபாபதியின் கரத்தை உரிமையாய் பற்றிக் கொண்டான் இனியன்.

புளகாங்கிதம் அடைந்து போனார் சபாபதி.

''முதல்லே சாப்பிடலாம்... அப்புறமா இதைப் பத்தி நாம பேசலாமே?''

''ஊகூம்... முதல்லே எனக்கு ஒரு முடிவு தெரிஞ்சாகணும் தாத்தா! நீங்க கறார் பேர்வழியாம்... சொன்ன சொல் தவற மாட்டீங்களாம்... 'ரொம்ப நேர்மை... நாணயம் மிக்கவர்... மானஸ்தர்... சபாபதி சொன்னா சுப்ரீம்கோர்ட்டே சொன்ன மாதிரி'ன்னு அடிக்கடி தாத்தா சொல்றாரே?

ப்ளீஸ்... சொல்லுங்க தாத்தா! உங்க வார்த்தைக்கு நான் கட்டுப்படறேன்...''

சபாபதி புன்னகைத்து விட்டு அவனுக்கு பதில் சொல்லாமல் கைலாசத்தை ஏறிட்டார்.

''கைலாசம்! இனியன் அச்சு அசலா ஈஸ்வரன் மாதிரியே இருக்கான் இல்ல? எனக்கு ஈஸ்வரனையே நேர்ல பார்த்த மாதிரி இருக்கு. ஹ்ம்! நாம ஒண்ணை நெனச்சோம். விதி விளையாடி... என்னென்னமோ நடந்து போச்சே?''

பழைய கசப்பான நினைவுகள் மேலெழும்பியதால்... முதியவருக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

சபாபதியின் விழிகள் கலங்கியதைப் பார்த்த கைலாசம் ''ஈஸ்வரன் ரொம்ப சாது! இருக்கிற இடமே தெரியாது. இவன் அவனுக்கு நேர் எதிர் தெரியுமா?'' என்றபடி பேச்சை திசைமாற்றினார்.

''கலகலப்பா பேசறான். பார்த்ததுமே சட்டுன்னு மனசுல வந்து ஒட்டிக்கிட்டான். இந்தக்காலத்து படிச்ச இளைஞர்கள் மாதிரி இல்லையே? எம்.பி.ஏ. படிச்சிருந்தும் பண்பா - பணிவா - பவ்யமா - மரியாதையா

நடந்துக்கிடறானே?''

மனம் திறந்து பாராட்டினார் சபாபதி.

''சரியா சொன்னே! இவனுக்கு இந்தக் காலத்துப் படங்களே பிடிக்காது. ராத்திரியானா பழைய கண்ணதாசன் பாடல்களைத் தான் ரசிச்சுக் கேட்பான். வெளிநாட்டுல படிச்சவன்னுபேரு... இவன் வாசிக்கிற புத்தகங்களைப் பார்த்தா அசந்துடுவே...

விவேகானந்தர், ரமணர், ராமகிருஷ்ண பரமஹம்சர்... இன்னும் பலரோட சித்தாந்த நூல்கள், சித்தர்கள் எழுதி வைத்த பாடல்கள்னு அடுக்கி வச்சிருக்கான்.

ஆன்மீகத்துல நல்ல நாட்டம் இருக்கு. அசைவத்தைக் கையால கூடத் தொடமாட்டான். இயற்கை உணவுதான் சிறந்ததுன்னு சொல்லிட்டிருக்கான்...''

''ஆச்சரியமா இருக்கே? அப்புறம் ஏனிந்த முரண்பாடு? வேலையை விட்டுட்டுப் பூர்வீக சொத்துக்களை கவனிச்சுக்கிடறதிலே ஏன் உடன்பாடு இல்லாம போச்சு?''

''நண்பர்கள், ஆபீசை விட்டுட்டு வர மனசு இல்லையாம்.''

''இனியா! கைலாசத்தைப் பத்தி யோசிச்சுப் பாரு. இவனுக்கு உங்கப்பா ஒரே புள்ளை... கல்யாணமாகி ஒரு வருஷத்துல விபத்துல காலமாயிட்டான். அந்த அதிர்ச்சியிலேயும் துக்கத்திலேயும் பிரசவத்துல ஜன்னி கண்டு உங்கம்மாவும் போய் சேர்ந்துட்டா...

சோகத்தை மென்னு முழுங்கி உன்னைக் கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கினான். நீ ஆசைப்பட்டபடியே வெளிநாட்டுக்கு அனுப்பி படிக்க வச்சிருக்கான். இந்தத் தள்ளாத வயசுல, ஒரே பேரன் தன் கிட்டத்துலேயே இருக்கணும்ன்னு பிரியப்படறதிலே என்ன தப்பு?

அதுவும் தவிர இருக்கிற ஆஸ்தியை நீதானே கட்டிக் காப்பாத்தணும்? இப்போ என்ன? படிச்ச படிப்பு வீணாகக்கூடாதுன்னு நெனைக்கிறே... பேசாம நீயே சொந்தமா ஒரு நிறுவனத்தை ஆரம்பிச்சுடேன்...

உன் திறமையைப் பயன்படுத்து! நிறைய பேருக்கு நல்ல வேலை வாய்ப்பும் கிடைச்ச மாதிரி இருக்குமில்ல? உன் தாத்தாவோட ஆசையும் நிறைவேறும். அதே சமயத்துல உனக்கும் ஆத்ம திருப்தி கிடைக்கும் இல்லையா?''

''எக்ஸாட்லி! தாத்தா... கை குடுங்க... தேங்க் யூ ஸோ மச் தாத்தா! நல்ல ஐடியா குடுத்துட்டீங்க... எனக்கு ஏன் இந்த யோசனை தோணாம போச்சு? உங்க அனுபவத்தை வச்சு சமயோசிதமா ஒரே கல்லுல ரெண்டு மாங்காய் அடிச்சுட்டீங்க... இந்த ஏற்பாட்டை உடனே செய்ய வேண்டியது தான். நிறுவனத்தோட திறப்பு விழாவுக்கு நீங்க தான் சீஃப் கெஸ்ட்! உங்க ராசியான கையால திறந்து வச்சு ஆசீர்வாதம் பண்ணனும்..''

''என்னோட ஆசீர்வாதம் உனக்கு எப்பவும் உண்டு இனியா! மறுத்துப்



பேசறேன்னு தப்பா நெனைக்க வேணாம். நான் ரொம்ப காலமா எந்த விசேஷத்துக்கும் போனதே இல்ல. அதனால முன்கூட்டியே என்னோட மனமார்ந்த வாழ்த்தை தெரிவிச்சுக்கிறேன்...''

''ஏன் தாத்தா? எதனால எந்த விசேஷத்துலேயும் கலந்துக்காம இருக்கீங்க...?''

சட்டென்று கைலாசம் குறுக்கிட்டார்.

''அதைப் பத்தி சாவகாசமா பேசலாமே? எனக்கு என் நண்பனைப் பார்த்ததுமே... இதுநாள் வரை மந்தமா இருந்த வயிறு வேலை செய்யத் தொடங்கிடுச்சு. பசி எடுக்குது சபாபதி!''

''வா... வா... நாம சேர்ந்து சாப்பிட்டு எத்தனை வருஷமாச்சு?''

பணியாள் பவ்யமாய் பரிமாற... மூவரும் நிதானமாய் சிரித்துப் பேசியபடி உணவருந்தினர்.

''ரொம்ப காலத்துக்கு அப்புறம் இன்னிக்குத்தான் திருப்தியா சாப்பிட்டிருக்கேன்'' என்று முறுவலித்தார் சபாபதி.

''நானும் தான்'' நிம்மதிப் பெருமூச்சு விட்டார் கைலாசம்.

''இனியா! மனசு விட்டுச் சொல்றேன். நீ எனக்கும் பேரனாகி இருக்க வேண்டியவன் தான்...'' சபாபதியின் குரலில் ஏக்கம் தொனித்தது.

''இப்போ மட்டும் என்ன தாத்தா? நான் உங்களுக்கும் பேரன் மாதிரி தானே?''

''மாதிரி என்ன மாதிரி? நீ அசல்லேயே எனக்கு பேரனா பிறந்திருக்க வேண்டியவன். எனக்குத் தான் அந்த குடுப்பினை இல்லாம போயிடுச்சு. விதி வசமா விளையாடிடுச்சு''

சபாபதியின் குரல் சோகத்தில் பிசிறடித்தது.

''என்ன தாத்தா சொல்றீங்க? எனக்குப் புரியலையே? என்ன நடந்துச்சு?''

''சந்தோஷமா இருக்கிற நேரத்துல... என்னத்துக்கு பழசைப் போட்டு கிளறிக்கிட்டு இருக்கே சபா?'' உரிமையுடன் அதட்டினார் கைலாசம்.

''இல்ல... இனியாவைப் பார்த்தா... எனக்கு குபீர்னு பழைய ஞாபகம் தான் வருது. இனியாகிட்டே அதைச் சொன்னா.. ஏதோ கொஞ்சம் மனசுக்கு ஆறுதலா இருக்கும்னு தோணுது கைலாசம்...''

தழுதழுத்தார் சபாபதி.

''உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்னா... அதைப் பத்தி சொல்லுங்க தாத்தா! நான் உங்க பேரன்தான்னு உரிமையா நெனச்சு சொல்லுங்க''

ஆதுரமாய் அவரது கையைப் பற்றி அழுத்தினான் இனியன்.

''நெருங்கிய நண்பர்களா பல வருஷமா பழகிட்டு வந்த எங்களுக்கு... நெருங்கிய உறவுக்காரங்களா மாறணும்னு ஆசை வந்துச்சு... இவன் புள்ளைக்கு என் பொண்ணைக் கொடுத்து சம்பந்திகளாயிடணும்னு முடிவு செஞ்சு... தடபுடலா ஊரே மெச்சற மாதிரி நிச்சயதார்த்தத்தை நடத்தினோம். ஆனா...

கல்யாணம் நடக்காம... நின்னு போயிடுச்சு...''

''கல்யாணம் ஏன் திடீர்னு நின்னு போச்சு? இதைப் பத்தி என்கிட்டே இதுவரைக்கும் சொன்னதே இல்லையே? எங்க தாத்தா ரொம்ப அழுத்தக்காரரு. சாமானியத்துல எதையும் அவரு வெளிப்படையா சொல்லவே மாட்டாரு. நீங்களாவது மனசு திறந்து என்கிட்ட பேசறீங்களே? தேங்க்யூ தாத்தா!''

இனியனை ஏறிட்ட சபாபதியின் முதிய விழிகள் கண்ணீரில் தத்தளித்தன.

''சொல்லுங்க தாத்தா! என்ன நடந்துச்சு? இடையில் ஏதாச்சும் அசம்பாவிதம் ஏற்பட்டுடுச்சா? இல்லன்னா... உங்களுக்குள்ளே மனஸ்தாபம் ஏதும் வந்துடுச்சா? ஊகூம்... உங்க ரெண்டு பேத்துக்குள்ளே மனஸ்தாபம் வர்றதுக்கு வாய்ப்பே இல்லையே?''

கலங்கிய விழிகளுடன் - இறுகிய தாடையுடன் மவுனம் காத்தார் சபாபதி.

''பாட்டிம்மா திடீர்னு காலமாகி கல்யாணம் நின்னு போச்சா? இல்ல... ஜாதகத்துல தோஷம் இருக்குன்னு யாராச்சு கிளப்பி விட்டு கல்யாணத்தை நிறுத்திட்டாங்களா? ப்ளீஸ் தாத்தா! முழுவதுமா சொல்லி முடிங்களேன்..''

''என் ஒரே மக... அவ... அவ... இப்படியொரு கேடு வரும்னு நான் கனவுல கூட நெனைச்சுப் பார்க்கலைப்பா...'' முதுகு குலுங்க தேம்பியவரின் புஜத்தில் வாத்சல்யத்துடன் கை வைத்தான் இனியன்.

''கேடு வந்துடுச்சா? அப்படின்னா?''

''அ... அவ... அவ... அகாலமா மரணமடைஞ்சுட்டா''

''சபா... என்ன நீ...?''

தடாலென்று எழுந்து நின்றார் கைலாசம்.

சட்டென்று கையை இறுகப் பற்றிய சபாபதி, ''அவ மாண்டு போயிட்டதால கல்யாணம் நின்னு போயிடுச்சுப்பா...'' என்று குரலுடைந்து அழுதவாறே ஏறிட்டார்.

இரு நண்பர்களும் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டனர்.

## 5

நண்பர்கள் இருவரும் நடந்த உண்மையை... என்ன காரணத்தாலோ மறைக்கிறார்கள் என்று அப்பட்டமாய் இனியனுக்குப் புரிந்தது.

தாத்தா கைலாசத்தை வெள்ளி மலை எஸ்டேட்டில் சபாபதியின் பங்களாவில் விட்டுவிட்டு அன்றிரவே புறப்பட்டு விடலாம் என்று தீர்மானித்திருந்தவன்... தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

எந்தக் காரணத்தால் திருமணம் நின்று போனது - என்று தெரிந்து கொள்ளாவிட்டால் அவனுக்குத் தலையே வெடித்து விடும் போலிருந்தது.

'இதைக் கட்டாயம் தெரிஞ்சுக்கணும்... பாவம்! சபாபதி தாத்தாவுக்கு என் அருகாமை ஆறுதலைக் கொடுக்கிறது.

சில நாட்கள் தங்கி இருந்தால்.. அந்த வயதான மனிதர் ஆறுதலடைவாரே? அதே சமயத்தில் நம் தாத்தாவுக்கும் ஆத்ம நண்பருடன் அளவளாவுவதில் அலாதி மகிழ்ச்சி கிடைக்கிறதே?

பொழுது போகாவிட்டால்.. பங்களாவில் உள்ள எல்லா அறைக்குள்ளும் புகுந்து புறப்பட வேண்டியதுதான்... போரடித்தால் எஸ்டேட்டைக் காலார சுத்திப் பார்க்க வேண்டியதுதான்.'

தனக்குள் முடிவு செய்து கொண்டான் இனியன்.

பிரயாணக் களைப்பில் மதியம் அசந்து தூங்கிவிட்டிருந்தான்.

தாத்தா கைலாசமும் அவனருகில் குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருந்தார்.

திரும்பவும் இவன் கண் விழித்த போது மாலை மணி ஐந்தே முக்கால் ஆகி விட்டது.

தாத்தாவை அருகில் காணவில்லை.

'மைகுட்னஸ்! மணி ஆறாகப் போகுது. இவ்ளோ நேரமா அசந்து தூங்கிட்டேனா? தாத்தா என்னை எழுப்பி விட்டிருக்கலாமே?'

முகம் கழுவி உடைமாற்றிக் கொண்டு புத்துணர்ச்சியுடன் வெளிப்பட்டான்.

பரந்த ஹாலிலும் மாடியறைகளிலும் தேடிப் பார்த்து விட்டான்.

சபாபதியையும் காணவில்லை; தாத்தா கைலாசமும் கண்ணில் தென்படவில்லை.

'ரெண்டு பேருமா கை கோர்த்துக்கிட்டு... 'அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே!'ன்னு பாடிக்கிட்டு எஸ்டேட்டுல உலாவப் போயிட்டாங்களோ?'

தனக்குள் முணுமுணுத்தவன்.. தோள்களைக் குலுக்கியபடி அந்த பங்களாவைச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தான்.

கலை நயத்துடன் - நுணுக்கமான மர வேலைப்பாடுகளுடன் - அந்தக் காலத்து கட்டிடக் கலை அழகைப் பறை சாற்றியபடி நிமிர்ந்து அந்தப் பழைய பங்களாவை அதிசயித்துப் பார்த்த இனியன்... இண்டு இடுக்கு விடாமல் சுற்றி வந்தான்.

மதுரையிலிருந்த கைலாசத்தின் பங்களாவும் பிரமாண்டமானது தான்! ஆனால் வாஸ்து சாஸ்திரப்படி, இந்தக் காலத்துக்கு ஏற்ற படி அவ்வப்போது மாற்றி

நவீனமாகக் கட்டிவிட்டிருந்தார்.

இனியனுக்கு இனம் புரியாமல் அடிமனதில் மட்டற்ற மகிழ்… அலைஅலையாய் பொங்கிக் கொண்டிருந்தது.

'யார் அந்த நிலவு...?

ஏன் இந்தக் கனவு...?'

கவிஞர் கண்ணதாசனின் அற்புத வரிகளை ராகம் பிறழாமல் அழகா… பாடியபடி... அவ்வப்போது சீட்டியடித்தபடி வளைய வந்தான்.

அதற்கு ஒரு முக்கியமான காரணம் இருந்தது என்னவோ உண்மை!

இனியனுக்கு சாதாரணமாகப் புதிய இடத்தில் சுட்டுப்போட்டாலும் தூக்க… வரவே வராது. இன்று என்னவோ வழக்கத்திற்கு மாறாக... படுத்த மாத்திரத்தி… கண் அயர்ந்து விட்டிருந்தான்.

நிம்மதியான ஆழ்ந்த உறக்கத்தில் ஒரு அழகான கனவு! கனவில்… அகன்ற - வட்ட வடிவமான - பிரமாண்டமான கிணறு. அந்தக் கிணற்றுக்… சுற்றுச் சுவரே இல்லை. தரையோடு தரைமட்டமாக இருந்த அந்த ஆழமான கிணற்றில் தளும்பத் தளும்ப தண்ணீர்!

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டிருக்க வேண்டும்.

வட்ட வடிவமான கிணற்றின் ஒருபுறம் சிதிலமடைந்து இடிந்து சரிந்து கிடந்தது.

அந்த சரிவின் வழியே மெதுவாக ஒரு ஆட்டுக்குட்டி கவனமாக கால் பதித்து இறங்கியது.

தண்ணீர் தாகமெடுத்த ஆட்டுக்குட்டி மெல்ல இறங்கி முன்னங்கால்களை மடக்கி லாவகமாக நீர் அருந்தியது.

தாகம் தீர்ந்ததும் என்ன நினைத்ததோ? 'ம்மே' என்று தீனமாய் கத்தி மீண்டும் சரிவின் மேல் ஏறிச் சென்று விட்டது.

கிணற்றின் நீர்ப்பரப்பில் அசைவு! வட்ட வடிமான வளையங்கள் தோன்றித் தோன்றி மறைந்தன.

திடுமென்று நடுவிலிருந்து நான்கு பக்கமும் சட்டங்கள் பொருத்தப்பட்ட படம் ஒன்று எழும்பி தளும்பி மிதக்கத் தொடங்கியது.

தண்ணீரில் தளும்பிய அந்தப் படம் என்னவென்று சிறிது சிறிதாக தெளிவாய் தெரிய ஆரம்பித்தது.

அழகான ஒரு இளம் பெண்ணின் ஓவியம்...!

அகண்ட அழகான விழிகள்... கூர் மூக்கு, ரோஜா இதழ்கள், பிறை நெற்றி, கண்ணாடியாய் பளபளத்த கன்னங்கள்... சங்கு கழுத்து.. இதழ்களில் ஒட்டிக் கொண்டிருந்த மோனாலிசாவின் புன்னகை!



அந்த அகண்ட விழிகள் இனியனின் இதயத்தைத் துளைத்தெடுப்பதுபோல் ஊடுருவிப் பார்த்தன.

இப்படியொரு அழகியை... அதிசயப் பெண்ணை... இனியன் இது காலம் வரை நேரில் பார்த்ததே இல்லைதான்.

ஆனால்... பலகாலம் அவளுடன் நெருங்கிப் பழகியதைப் போன்ற நூதன உணர்வு ஏற்பட்டது நிஜம்!

அவனும் அவளைப் பார்த்து சிநேகமாய்... நேசமாய்... இன்னும் சொல்லப் போனால் பல்லாண்டு பழகிய காதலனாய்... முகத்தில் காதல் ரசம் சிந்தப் புன்னகைத்தான்.

மறுகணம்... அந்த அழகுப் பெண்ணின் இதழ்கள் மெள்ள விரிந்து முத்துப்பல் வரிசை தெரிய மோகனமாய் முறுவலித்தாள்.

இனியனின் இதயத்தில் ஜிலுஜிலுவென்று ஐஸ் கிரீம் மழை வழிந்தாற் போலிருந்தது.

சிலுசிலுவென்று குற்றாலச் சாரலில் நனைந்தாற் போலிருந்தது. இந்த சுகானுபவத்தில் தான் அவனையும் அறியாமல் வெகுநேரம் உறங்கிப் போய் விட்டிருந்தான்.

''யார் அந்த நிலவு...?'' மீண்டும் மீண்டும் 'ஹம்' செய்த படி அந்த பிரமாண்டமான அறையின் முன் நின்றான்.

ஈசான மூலையிலிருந்த அறை வெளியில் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. பூட்டு எதுவும் போடப்படவில்லை எனினும்... அந்த அறைக்கதவைத் திறந்தே பல காலமாகியிருக்க வேண்டும் என்று - பார்க்கும் போதே தெரிந்தது.

தாழ்ப்பாளை விலக்கும் போது 'கிரீச்... கிரீச்' என்று ஏகத்திற்கும் சப்தம் கிளம்பி பங்களா முழுவதும் எதிரொலித்தது.

பணியாளனும் சமையற்காரனும் பீதியுடன் எட்டிப் பார்த்தனர்.

எஜமானரின் பங்களாவுக்கு புதிதாய் வந்திருக்கும் விருந்தாளியைத் தடுக்க.. அவர்களுக்குத் துணிவு வரவில்லை.

'எதற்கு வம்பு?' என்று கண்டும் காணாமல் அடுக்களைக்குள் பதுங்கி விட்டனர்.

'எஜமானரின் மனம் கவர்ந்த இளைஞன் இவன்' என்று காலையிலேயே அவர்களுக்குப் புரிந்துபோய் விட்டிருந்தது.

அறைக் கதவைத் திறந்து தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

பல காலமாய் திறக்கப்படாமலிருந்ததால்... எங்கும் நூலாம்படை படர்ந்திருந்தது.

உடலில் படர்ந்த நூலாம்படையை உதறித்தட்டிக் கொண்டு சுற்றும் முற்றும்

பார்த்தான்.

பழைய தேக்கு நாற்காலியுடன், உடைந்து போன மேஜைகள், கறுத்து போன பித்தளை பூ ஜாடிகள், லொட்டு லொசுக்கு சாமான்கள் என்று அறையெங்கும் இறைந்து கிடந்தன.

சுவரில் மாட்டப்பட்டிருந்த மான் கொம்புகள், யானைத் தந்தங்கள் தூசு தும்பு பிடித்து நூலாம்படையால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருந்ததைக் கண்டான்.

'பாடம் செய்யப்பட்ட மான் கொம்பு, விலை உயர்ந்த அழகான யானைத் தந்தங்களைப் போய்... இந்த குடோன் மாதிரியான அறைக்குள்ளே போட்டு வச்சுட்டாங்களே?' என்று எண்ணமிட்டான் இனியன்.

'ஒருவேளை இவைகளை வச்சுட்டிருந்தா... அது சட்ட விரோதமான செயல்ன்னு நினைச்சு இங்க இப்படி போட்டு வச்சிருக்காங்க போலிருக்கு.'

தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டு... அந்த அறையின் கோடியில் சுவரில் மாட்டப்பட்டிருந்த பிரமாண்டமான படத்தைப் பார்த்தான்.

சபாபதி தாத்தா இளமையில் கம்பீரமாய் - ஆணழகனாய் - சிம்மாசனம் ஒன்றில் கால் மேல் கால் போட்டபடி அமர்ந்திருந்தார்.

அடுத்ததாய் ஒரு படத்தில் தனது இளம் மனைவியின் தோளில் கை போட்டபடி போஸ் கொடுத்திருந்தார்.

வேட்டைக்கு எடுத்துச் செல்லும் துப்பாக்கிகள் ஐந்தாறு மூலையோரமாய் சாத்தப்பட்டு துருப்பிடித்துக் கிடந்தன.

சுற்றும் முற்றும் ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டு வந்தவன் கண்களில்... அந்த பிரம்மாண்டமான இரும்புப்பெட்டி பட்டதும்... அதனருகில் சென்றான்.

அதற்கும் பூட்டு போடப்படவில்லை. ஏகப்பட்ட தூசு! திறக்க முற்படும் போது தூசு கிளம்பி... 'ஹச் ஹச்' என்று மூன்று நான்கு முறை அவனைத் தும்ம வைத்தது.

செல்லரித்துப் போன கணக்குப் புத்தகங்கள்... பழைய டைரிகள் என்று வேண்டாத வஸ்துக்களுடன் ஒரே ஒரு பொருள் மட்டும் வித்தியாசமாகத் தென்படவே... அதை மெல்ல எடுத்தான்.

நான்கு புறமும் சட்டமிடப்பட்ட படம் அது!

மெதுவாய் அதை எடுத்தான். திருப்பினான். பல வருடங்களாய் கேட்பாரற்று கிடந்ததால்.. தூசு தும்பு படர்ந்திருந்த அந்தப் படம் தெளிவாய் தெரியவில்லை.

இனியனுக்கு ஆர்வம் தாங்கவில்லை.

பேண்ட் பாக்கெட்டிலிருந்ந கர்ச்சீப்பை எடுத்து தூசு தும்பைத் துடைத்து விட்டு அந்தப் படத்தைப் பார்த்தவனுக்கு தூக்கி வாரிப்போட்டது.

கனவில் வந்த அதிசயப் பெண்ணைப் போல்... அச்சு அசலாய் ஒரு இளம் பெண் முறுவலித்துக் கொண்டிருந்தாள்.



எதிர்பாராத அதிர்ச்சி... இனியனின் பிடரியை 'சில்'லென வருடியது.

## 6

**வி**யப்பின் விளிம்பிற்கே இனியன் சென்று விட்டிருந்தான்.

சற்று நேரத்திற்கு முன்பு வந்த கனவில்... தெள்ளத் தெளிவாய் காட்சியளித்த அந்த அழகியின் உருவம் அவனது மனதில் கல்வெட்டாய் பதிந்து விட்டிருந்தது.

அச்சு அசலாய் அதே ஜாடையில் ஒரு இளம் பெண்ணின் புகைப்படம் இருக்கிறதே?

இது யாராக இருக்கும்?

சபாபதி தாத்தாவின் மகளாய் இருக்குமோ?

இவள் தான் அகாலமாய் மரணமடைந்து விட்டாளா?

இந்தப் படத்தை பரந்த ஹாலில் மாட்டி வைத்தால்... துக்கம் அதிகமாகப் பீறிட்டு வரும் என்று நினைத்து... இதை இங்கு மறைவாய் போட்டு விட்டாரோ?

இது... சபாபதியின் மகள்தானா? அல்லது மனைவியா? ஊகூம்... அவரது இளம் மனைவியின் படத்தைப் பார்த்தேனே? இவள் மனைவி அல்ல... அவரது மகள் தான்.

உற்றுப் பார்த்தால்... அப்பாவை ஜாடையில் உரித்துக் கொண்டு இருக்கிறாளே...?

கனவில் வந்த அழகியின் முகமும் இந்தப் பெண்ணின் முகமும் கிட்டத்தட்ட ஒன்று போல் இருந்தாலும்... கனவில் வந்த அழகியோ முப்பது சதவீதம் கூடுதல் பொலிவோடு தெரிந்தாளே!

கொஞ்சம் வித்தியாசம் தென்படுகிறது. அதனால்... இவள் கனவில் வந்தவளே இல்லை. ஆனால் கனவில் வந்தவளுக்கும் இவளுக்கும் ஏதோ நெருங்கிய பந்தம் இருக்க வேண்டும்....

இதென்ன அதிசயமாய் இருக்கிறது?

சபாபதியின் மகளை இதற்கு முன்பு நான் படத்தில் கூடப் பார்த்ததே இல்லையே?

அவளது ஜாடையிலிருக்கும் இளம் பெண்ணின் உருவம் என் கனவில் ஏன் வரவேண்டும்?

என்னையும் அறியாமல்... ஏதோவொரு உந்து சக்தி என்னைத் தூண்ட - ஆர்வமாய் இந்த அறையைத் திறந்து நுழைந்து இந்தப் படத்தைக் கண்டெடுத்து இருக்கிறேனே?

இதற்கு எல்லாம் என்ன காரணம்?

என்ன அர்த்தம்...? ஏதோவொரு முக்கிய காரணம் இருக்கிறது. காரணமில்லாமல்... என் கனவில் அப்படியொரு காட்சி ஏன் வர வேண்டும்?

சபாபதியின் மகள் இவள் என்றால்.. கனவில் வந்தவள் யாராக இருக்கும்?

இந்தப் படம் கறுப்பு வெள்ளையில்... கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்கு முந்தி எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பெண்ணுக்கும் என் கனவில் வந்தவளுக்கும் என்ன தொடர்பு?

இந்தப் படம் என்னிடமே இருக்கட்டும், இதை நம் தாத்தாவிடம் காட்டி.. இவள் எப்படி மறைந்தாள் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்...

என் உள் மனம் சில சமயங்களில் ஒரு விஷயத்தை உறுதியாக அறுதியிட்டு சொல்வது... மிகவும் சரியாக இருக்குமே?

இப்போது அந்த உள் மனம்... 'கனவில் வந்தவள் எங்கோ இருக்கிறாள்! அவளைக் கண்டு பிடி! கண்டு பிடி!' என்று உத்தரவிடுகிறதே?

அதற்கு மேலாக... 'அவள் என்னவள்' என்ற எண்ணம் எழும்பி பலமாய் இதயத்தை மோதுகிறதே?

ஏதோ பூர்வ ஜென்ம பந்தம் போலிருக்கிறதே... அவளை நிஜமாகவே என்னவளாக்கிக் கொண்டு... அவளை பூப் போல் உள்ளங்கையில் வைத்து தாங்க வேண்டும். அவளது அழகை காலமெல்லாம் ஆராதனை செய்ய வேண்டும் என்று என் மனம் துடியாய் துடிக்கிறதே...'

படத்தின் பின்புறமும் தூசைத் தட்டித் துடைத்து, அதை பத்திரமாய் அவன் தங்கியிருந்த அறையில் இருந்த மேஜை மீது கவிழ்த்து வைத்தான்.

இரவு எட்டு மணிவாக்கில் சபாபதியும் கைலாசமும் ஸ்வெட்டர் மப்ளர் அணிந்தபடி நிதானமாய் டைனிங் ஹாலுக்கு வந்தனர்.

பணியாள் வந்து அழைக்கவே.. அறையை விட்டு வெளிப்பட்டு டைனிங் டேபிளில் போய் அமர்ந்த இனியன், ''ரெண்டு பேரும் எங்கே போயிருந்தீங்க? காலார வாக்கிங் போயிட்டு வர்றீங்களாக்கும்?'' என்று கேள்விக் கணையைத் தொடுத்தான்.

''ஊகூம். பங்களாவை விட்டு எங்கேயும் போகலையேப்பா?'' என்றார் கைலாசம்.

''பொய் சொல்றீங்க. நான்தான் பங்களா முழுவதும் தேடிப் பார்த்தேனே தாத்தா?''

''நீ மொட்டை மாடிக்கு வந்தியா?'' புன்னகைத்தபடி கேட்டார் சபாபதி.

''இல்ல... ஓ... மொட்டை மாடியில்தான் இவ்ளோ நேரமா உட்கார்ந்து அந்தநாள் ஞாபகங்களைப் பகிர்ந்துட்டீங்களாக்கும்?''



''நேரம் போனதே தெரியலை...'' என்று கைலாசம் கூறியபோது இனியன் மவுனமாய் சப்பாத்தியைப் பிட்டு குருமாவில் தோய்த்து சாப்பிட ஆரம்பித்தான்.

இரவு அவனருகே கட்டிலில் வந்து படுத்த கைலாசத்தைப் பார்த்து விட்டு, ''தாத்தா! உங்ககிட்டே ஒரு விஷயம் கேட்கணுமே? இதோ... இந்தப் படத்துல இருக்கிற பெண்ணைப் பாருங்களேன்'' என்றபடி படத்தை எடுத்துக் காண்பித்தான்.

கிழவர் கூர்ந்து பார்த்து விட்டு அதிர்ச்சியுடன் அவனை ஏறிட்டார். ''இந்தப் படத்தை நீ எங்கேயிருந்து கண்டெடுத்தே?''

''இதே பங்களாவுல தான்.. பேச்சை மாத்தாம இவங்க யாருன்னு சொல்லுங்க தாத்தா ப்ளீஸ்...''

''இவ... இவதான் சபாபதியோட மகள்.''

''இவங்க அகாலமா மரணமடைஞ்சுட்டாங்கன்னு தாத்தா சொன்னாரே? எப்படி இறந்தாங்கன்னு சொல்லுங்க தாத்தா!''

''இந்தப் படத்தைப் பார்த்தா... சபாபதி எரிமலையா குமுறுவான். ரொம்ப வருத்தப்படுவான். இதை எடுத்துக்கிட்டு வந்து என்னத்துக்கு குடைஞ்சு குடைஞ்சு கேள்விகள் கேட்கிறே இனியா?''

''காரணம் இருக்கு. கேட்டா ரொம்ப ஆச்சரியப்படுவீங்க. ப்ளீஸ், சொல்லுங்களேன்...''

'''இவ அகாலமா மரணமடைஞ்சுட்டாள்'னு சபா சொன்னது பொய்..... இவ கல்யாணத்துக்கு ரெண்டு நாள் முந்தி... தன் மனசுக்குப் பிடிச்சவனோட ஓடிப்போயிட்டா.. தனக்கு அவமானத்தையும் தலை குனிவையும் ஏற்படுத்தின மகள் செத்தே போயிட்டாள்னு விரக்தியில - கோபத்துல சொல்லிட்டிருக்கான் சபாபதி...''

''ஓ... அப்படின்னா இவங்க தன் காதலனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கை வாழ்ந்துட்டிருக்காங்களா?''

''தெரியலைப்பா... சபாபதி ஒரு அனாதைப் பயலை வளர்த்து ஆளாக்கி நல்லா படிக்க வைச்சான். பேரு - சிவராமன். உண்ட வீட்டுக்கே ரெண்டகம் பண்ற மாதிரி... அந்தப் பய இந்தப் பெண்ணை மயக்கி மனசைக் கலைச்சு இழுத்துட்டு ஓடிட்டான்...'' கோபமாய் பேசியவரை ஊன்றிப் பார்த்தான்.

''ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பிட்டாங்க. காதலிச்சவரை விட்டுட்டு இன்னொருத்தருக்கு கழுத்தை நீட்ட... இவங்களுக்கு மனம் ஒப்பாம.. பிடிச்சவரோட வீட்டை விட்டுப் போயிருக்காங்க... சரி... காதலிக்கிறது பெரிய குற்றமா தாத்தா?''

''அது பெரிய குற்றம்னு யாரு சொன்னாங்க? நிச்சயதார்த்தம் நடக்கிறதுக்கு

முன்னாடியே இந்த சிந்தாமணி மெள்ள தன் மனசுல இருக்கிறதைப் பத்தி...
சபாகிட்டே சொல்லியிருக்கலாம்! சொல்லாம எல்லாத்தையும் மூடி மறைச்சு..
மிகப் பெரிய அவமானத்தையில்ல தேடிக் குடுத்துட்டா? எந்த அப்பனுக்கு தான்
கோபம் வராது?''
''சொல்லியிருக்கணும்தான். சொன்னா சபா தாத்தா உடனே அவங்க
காதலுக்கு பச்சைக் கொடி காட்டியிருப்பாருன்னா நெனக்கிறீங்க? கண்டிப்பா
ஒத்துக்க மாட்டாருங்கிற பயத்துல அவங்க மூடி மறைச்சிருக்கலாம்...''
''தன் மகள்... அதுவும் ஒரே மகள்... இளவரசி மாதிரி வளர்ந்தவ. அவளுக்கு
ஒரு அனாதைப் பயலை எப்படி கட்டி வைக்கத் துணிவான் சபாபதி? அதுவும்
இவன் இரக்கப்பட்டு வளர்த்து பட்டதாரி ஆக்கினானே? அந்த நன்றி விசுவாசம்
இல்லாம அந்த அனாதைப் பய... சிந்தாமணிக்கு, காதல் வலை விரிச்சுட்டானே?
அதைத்தான் யாராலேயும் ஜீரணிக்க முடியலை...''
''காதலுக்கு கண்ணில்லைன்னு சொல்வாங்களே தாத்தா? ஒரு வேளை..
படிச்ச இளைஞர்கிட்டே இந்த சிந்தாமணி தன் மனசைப் பறி கொடுத்திருக்கலாம்
இல்லையா? அந்தஸ்து பேதம் பார்க்காம இவங்க அவர்மேல
ஆசைப்பட்டிருக்கலாம். தன் மனசை வெளிப்படுத்தி அவரை வற்புறுத்தி
காதலை ஏத்துக்கவும் வச்சிருக்கலாமில்லையா?''
'' இருக்கலாம். யார் கண்டது?''
''இப்போ இவங்க எங்கே இருக்காங்களாம்?''
''சபாதியே தெரிஞ்சுக்க விரும்பலை. தலை முழுகிட்டானே? ஆனா... ரொம்ப
காலத்துக்கு முன்னே... யார் மூலமாவோ ஒரு தகவல் கேள்விப்பட்டேன்.
சென்னையில அந்த சிவராமன் ஏதோவொரு கல்லூரியில் பேராசிரியரா வேலை
பார்க்கிறதாக சொன்னாங்க...''
''அவங்களுக்கு குழந்தை குட்டிங்க எதுவும்?''
''அவங்க ஓடிப்போயி நாலஞ்சு வருஷத்துக்கு அப்புறம் தான் இந்தத் தகவல்
கிடைச்சது. அப்போ அவங்களுக்கு குழந்தை எதுவும் இல்லைன்னு தான்
சொன்னாங்க... ஒருவேளை... அதுக்கு அப்புறமா பிறந்திருக்கலாம்...''
''பிறந்திருக்கணும். பிறந்திருக்கு தாத்தா''
''நீ பேசறது. கேட்கிறது எதுவும் பிடிக்கலை இனியா! இவ ஓடிப்போயி...
கல்யாணம் நின்னதால.. நம்ம குடும்பத்துக்கும் சேர்த்துதான் அவமானமா
போச்சு. சபாபதிக்கு மட்டுமில்ல. எனக்கும் இவ மேல வெறுப்புதான்...
இவ பேச்சை எடுத்தாலே... எனக்கு எப்படியோ வருது. என் நண்பன் வெகு
நேரமா மனசை விட்டுப் பேசினதுல... அலாதி நிம்மதியோட தூங்கலாம்ன்னு
வந்தேன். நீ கண்டதையும் பேசி எல்லாத்தையும் கெடுத்துட்டே...''
''வெறுப்புன்னு சொல்றது பொய் தாத்தா! உங்க நண்பர் தன் பொண்ணு



இறந்துட்டாள்னு சொன்னதும்.. உங்களையும் அறியாம பதறுனீங்களே? பாசம் இருக்கு... நண்பனோட மகள்னு இவங்க மேல உங்களுக்கு சாஃப்ட் கார்னர் இருக்கு... அதான் நிஜம்!''

கிழவர் திருட்டு விழி விழித்தார்.

''நீங்களும், உங்க நண்பரும் என்ன ஆசைப்பட்டீங்களோ... அது நடக்கும்...''

''நீ என்ன சொல்றே? புரியலையே?''

''எனக்கே இன்னிக்கு தான் புரிய ஆரம்பிச்சிருக்கு...''

சந்தோஷமாய் சிரித்தவனை ஏற இறங்கப் பார்த்தார் கைலாசம். ''ஏதோ ஒரு காரணம் இருக்கு. சொன்னா ஆச்சரியப்படுவீங்கன்னு... கொஞ்சம் நேரத்துக்கு முன்னாடி சொன்னியே... அது என்ன இனியா?''

''இன்னாருக்கு இன்னார்ன்னு எழுதி வைக்கிறது யாரு தாத்தா?''

''இதுலே என்ன சந்தேகம்? பகவான் தான்!''

''பகவானோட சித்தத்தால உங்க ஆசை நிறைவேறப் போகுது. நான் கூடிய சீக்கிரத்துல வெளியூருக்குப் போக வேண்டியிருக்கும். போயிட்டு வந்து விலாவாரியா... உங்களுக்கும் உங்க நண்பருக்கும் தெளிவா எடுத்துச் சொல்றேன்.

அதுவரைக்கும் என்னை எதுவும் கேட்காதீங்க... என்னோட கடமையை... இல்ல... வேலையை முடிச்சுட்டு வர்ற வரைக்கும்... நீங்க நிம்மதியா இங்கேயே தங்கியிருங்க...''

''வெளியூருக்கா? எந்த ஊருக்கு? எந்த வேலையை முடிச்சிட்டு வரப் போறே? தெளிவா எதையும் சொல்லமாட்டியா இனியா?''

''எந்த ஊருக்குப் போகணும், எந்த வேலையை நான் முடிக்கணும்னு இன்னமும் உத்தரவு வரலே. உத்தரவு வந்ததும் நான் உடனடியா கிளம்பிடுவேன்...''

''உத்தரவு யாரு கிட்டேயிருந்து வரும்? நீதான் உன்னோட வேலையை ராஜினாமா பண்றதா... ஒத்துக்கிட்டியே? என்னை இந்த வெள்ளி மலையில் கொண்டாந்து விட்டுட்டு... நீ மட்டும் எங்கே போறே? அது என்ன வேலைன்னு வெளிப்படையா சொல்லாம... ஏன் இப்படி மூடு மந்திரம் போடறே நீ?''

கிழவரின் குரலில் எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

''உத்தரவு மேலேயிருந்து வரும் தாத்தா! இதுக்கு மேல சத்தியமா... நா எதுவும் பேச மாட்டேன்! தயவு செஞ்சு என்னை நிம்மதியா தூங்க விடுங்க...''

அந்தப் பட்த்தை மேஜையின் மீது வைத்து விட்டு கட்டிலில் படுத்து மெல்லிய விரிப்பால் தலை வரை போர்த்திக் கொண்டு தூங்க ஆரம்பித்தான், தூங்குவது போல் நடித்தான்.

அவன் எதிர்பார்த்தது போலவே... அந்த 'உத்தரவு' வந்தது.




**த**ன்னையும் மீறி உறங்கி விட்டிருந்தாள் அதிசயா.

திடீரென ஏதோ வெளிச்சம் பரவினாற் போலிருந்தது.

பிரகாசத்தில் கண்கள் கூசினாற் போலிருக்கவே... கண்களை சுருக்கிக் கொண்டு... மெள்ள மெள்ள திறந்து பார்த்தவள் அதிர்ந்தாள்.

அப்பா நெற்றியில் விபூதி பட்டையுடன். திறந்த மார்புடன் - இடையில் காவி வேட்டியுடன் மெதுவாக நடந்து வந்தார்.

'என்னது இது? இறந்து போன அப்பா நடந்து வருகிறார்? ஒருவேளை அவரை ஞாபகமாக இருப்பதால்... கனவில் வருகிறாரோ?'

இவள் விழிகளை விரித்துப் பார்த்தாள்.

வந்தவர் நேராய்... அலமாரியை நோக்கினார்.

அலமாரியின் அருகே தரையில்தான் அதிசயா ஒருக்களித்துப் படுத்திருந்தாள்.

அலமாரியின் கதவு தானாய் திறந்தது.

அதன் டிராயரும்... யாரோ பிடித்து இழுத்தாற் போல் சரக்கென்று வெளியில் நீண்டது.

அதிலிருந்து ஒரு சின்ன டைரி எழும்பி மிதந்து வந்து அப்பாவின் வலக்கரத்தில் வந்து அமர்ந்தது.

அப்பா அதை இறுகப் பற்றி... அறையின் ஓரத்திலிருந்த மேஜையருகே சென்றார்.

மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த அதிசயாவின் ஹேண்ட் பேக்கில் அந்த டைரியை வைத்து விட்டு... மெல்லத் திரும்பிப் பார்த்தார்.

திரும்பிப் பார்த்த போது... அவர்... அவர்... அப்பா இல்லை.

ஜடாமுடியுடன் யாரோ சித்தரைப் போன்றிருந்தார். அவர் மெல்ல முறுவலித்தாற் போலிருந்தது. அதிசயாவுக்கு மெய் சிலிர்த்தது.

மறுகணம்... பனிப் படலம் போன்று வெள்ளையாய் புகை கிளம்பியது.

அடுத்த கணத்தில்... அதுவரை பரவியிருந்த வெளிச்சம் சட்டென்று மறைந்து இருள் சூழ்ந்தது.

இவள் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள். வழக்கம் போல் விடிவிளக்கிலிருந்து மெல்லிய வெளிச்சம் தான் கசிந்தது கொண்டிருந்தது.



'இது கனவா? இல்லை நிஜம்தானா?'

மனதில் ஐயம் முளை விட்டது.

'நிஜமாகவே நடந்தது போன்று அவ்வளவு தத்ரூபமாக இருந்ததே?'

சோர்வாய் எழுந்து உட்கார்ந்து யோசித்தாள்.

'இது எப்படி நிஜமாக இருக்க முடியும்? அப்பா இறந்துவிட்டார். இறந்தவர் நடந்து வர முடியுமா? அதுவும் அலமாரியின் கதவு அதிசயமாய் திறந்து... டிராயர் இழுபட்டு அதிலிருந்து சின்ன டைரி அந்தரத்தில் மிதந்து வந்து அப்பாவின் கையில் அமர்ந்ததே?

இது எப்படி சாத்தியமாகும்?

எல்லாவற்றையும் விட... கடைசியில் திரும்பிப் பார்த்தபோது அப்பாவிற்கு பதிலாய் யாரோ ஒரு சித்தரைப் போன்று அல்லவா காட்சியளித்தார்?

இது வேறொன்றும் இல்லை. அதீத சோகத்தில் - துக்கத்தில் ஆழ்ந்து எப்படியோ உறங்கிய போது வந்த கனவு தான் இது!

சதா அப்பாவின் ஞாபகம்! போதாதற்கு மரணத் தறுவாயில் அவர் 'சடையாண்டி சித்தரின் அருள்வாக்கு கிடைத்தது' என்றாரே?

அதைப் பற்றியே சிந்தித்து சிந்தித்து தான்... இப்படியொரு கனவு பரிணமித்திருக்கிறது.

நிச்சயமாய் இது கனவு தான்'

தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டவளுக்கு... திடுமென ஒரு ஞாபகம் வந்தது.

ஒன்றரை மாதத்திற்கு முன்னால் தொல்லியல் துறை அலுவலகத்தில்... ஒரு சுவாரசியமான விஷயத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள்.

''மேற்குத் தொடர்ச்சி மலைப் பக்கமா... நிறைய பாழடைந்த கோவில்கள் இருக்கு... ஏகப்பட்ட ஆற்றங்கால் மண்டபங்கள் இருக்கு. அதில் நிறைய கல்வெட்டுச் செய்திகள் இருக்காம்.

சதுர கிரி மலைக்குப் பக்கத்துல... அர்ச்சுனா புரம்'னு ஒரு கிராமம், வத்திராயிருப்புக்கு அருகிலே இருக்கு. அங்கே அர்ச்சுனா நதி பாயுதாம்.

கிராமத்தோட எல்லையில... ஆளரவமற்ற பகுதியில் ரெண்டு மூனு சிதிலமடைஞ்ச புராதன சிறப்பு பெற்ற ஸ்தலங்கள் இருக்காம். அங்கே குருசாமி சித்தரோட குகை இருக்காம். அந்த சித்தர் அம்மன் அருள் பெற்றவராம்.

அந்தப் பகுதியில வனபத்திரகாளி கோவில் இருந்திருக்கு. கோவிலுக்கு எதிரிலே ஒரு பர்லாங் தூரத்துல பிரம்மாண்டமான பழங்கால கிணறு இருக்காம்... அந்தக் கிணத்துல தான் 'நல்லதங்காள்' தன்னோட ஏழு குழந்தைகளையும் தூக்கிப் போட்டு தானும் குதிச்சு உயிர் நீத்தாங்களாம்...

நல்லதங்காளோட நல்ல மனசையும் தியாக உள்ளத்தையும் பார்த்து

மனமிரங்கின வனபத்திரகாளி... அந்த எட்டுப் பேரையும் மீண்டும் உயிர் பெற்று எழச் செய்தாங்களாம்.

'இறந்தவர்கள் மறுபடியும் உயிர் பிழைப்பது என்பது... இயற்கைக்கு புறம்பான ஒரு செயல்! அதனால் இறந்தவர்கள் இறந்தவர்களாகவே இருக்கட்டும். மீண்டும் உயிர் பெற்று வாழ விருப்பமில்லை தாயே! என்னைப் போல் வறுமையின் பிடியில் வாடி, வாழ வழி தெரியாமல் இருப்பவர்களை... விரக்தியின் விளிம்பில் நிற்பவர்களை நீ காத்து ரட்சித்தால் அதுவே எனக்குப் போதும் தாயே!'ன்னு நல்லதங்காள் வரம் கேட்டிருக்காங்க...

'உன் நல்ல மனதை மெச்சுகிறேன். இனிமேல் இந்தக் கோவிலில் என் பெயர் மங்கி உன் பெயர் நிலைக்கட்டும். இனி இந்த ஆலயம் உன் பெயரிலேயே அழைக்கப்படும்'னு வனபத்திரகாளி அருள் புரிஞ்சிருக்காங்க.

வெளியூருக்குப் போய் சம்பாதிச்சுட்டு வந்த நல்லதங்காளோட கணவர்... ஏராளமான நகைகளோடவும் வைரம் வைடூர்யம் மாணிக்கக் கற்களோடவும் ஊருக்குத் திரும்பியிருக்கார்... மனைவியும் குழந்தைகளும் கிணத்துல விழுந்து மாண்டு போயிட்டதைக் கேள்விப்பட்டதும்... தான் கொண்டு வந்த ஐஸ்வரியங்களை அதே கிணத்துக்குள்ளேயே போட்டுட்டு... விரக்தியிலயும் சோகத்துலயும் பத்தே நாள்லே உயிரை விட்டுட்டதாகவும் சொல்றாங்க.

இந்த கிணத்துக்கு யாராச்சும் வந்து... அந்த நகைகளை அடைய நினைச்சா... அதாவது தீய எண்ணத்தோட வர்றவங்க ரத்தம் கக்கி மாண்டு போறாங்களாம்..

அந்த நல்லதங்காள் கோவில்லே... அம்மன் பக்தரான குருசாமி சித்தர் நிறையபேருக்கு அருள்வாக்கு சொல்லியும் தீராத வியாதிகளைத் தீர்த்தும் வச்சிருக்காராம். அவரு, பக்கத்துல இருக்கிற குகையில ஜீவ சமாதி அடைஞ்சுட்டதாகவும் சொல்றாங்க.

நல்ல தங்காள் தான் அந்த சுத்துவட்டாரத்துக்கே ஊர்க்காவல் தெய்வம்னா... இந்த குருசாமி சித்தர் அந்தம்மாவோட கோவிலுக்கும், அந்தக் கிணத்துக்கும் காவல் தெய்வமா இருக்கிறதா பேசிக்கிறாங்க...

தீய எண்ணத்தோட வர்றவங்களை யாரு தண்டிக்கிறாங்க? நல்ல தங்காளா? இல்ல... குருசாமி சித்தரா? இது இன்னமும் அந்தப் பகுதி மக்களுக்கு புரியாத புதிரா இருக்காம்.

அந்தப் பகுதிக்கு நாம போனா நம்ம ஆய்வுக்கு நிறைய தகவல்கள் கிடைக்கும். ரெண்டு மூணு சிதிலமடைஞ்ச கோவில்களும் இருக்கு.... குறிப்பா இந்த நல்லதங்காள் கோவில் வனத்துல இருக்காம். அந்தக் கிணறு... குருசாமி சித்தரோட குகை... இதை எல்லாம் ஆராய்ஞ்சா... நல்ல பேர் கிடைக்கும்னு நம்ம 'ஹெட்' சொல்றாரு...''



''ரிஸ்க் எடுக்க நாங்க தயாரா இல்லைப்பா... பாழடைஞ்ச கிணறு, சிதிலமடைஞ்ச கோவில், வனம், சித்தர், குகைன்னாலே குலை நடுங்குது... பேசாம சென்னையைச் சுத்தி புறநகர்ப் பகுதிகள்லே இருக்கிற ஏகப்பட்ட கோவில்களை ஆராய்ஞ்சாலே... போதாதா? அதுக்கே நமக்கு ஆயுசு பத்தாதே?

தென்கோடிக்கு... அதுவும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பக்கமா இங்கேயிருந்து யாரு போவாங்களாம்..?''

அலுவலகத்தில்... இதற்கு - இந்த ஆய்வுக்கு யாரும் முன் வரவில்லை.

அதிசயாவுக்கு கூட அங்கு போக வேண்டும் என்று தோன்றவில்லை.

சென்னையிலிருந்து நெடுந்தூரம் பயணப்பட வேண்டும். அதுவும் அப்பாவுக்கு ஆஸ்துமா தொந்தரவு இருக்கும்போது... அவரையும் அழைத்துக் கொண்டோ... அல்லது அவள் மட்டும் தனியாகவோ 'வத்திராயிருப்பு' வரை சென்று வருவது இயலாத காரியம் என்பதால்... அவளும் அமைதி காத்து விட்டாள்.

இந்த ஞாபகம் வந்ததும்... அதிசயா நிமிர்ந்து அமர்ந்தாள். அவிழ்ந்து தொங்கிய கூந்தலைக் கோதி கொண்டையிட்டவளுக்குள் ஒரு யோசனை உதித்தது.

'வத்திராயிருப்பு பகுதிக்குச் சென்று ஆய்வு செய்தாலென்ன? இதென்ன? சாக முடிவெடுத்த பின்பு... ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று யோசனை தோன்றுகிறது?

ஆராய்ச்சிக்காகப் போகும் இடத்தில்... உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டியதுதான்...

அப்பா! அம்மா! நீங்க ரெண்டு பேரும்... ஸாரி! உங்க ஆத்மா வருத்தப்படலாம்... 'நல்லா படிக்க வச்சிருக்கோம். சொந்தக் கால்லே நிக்க முடியுது.

சுகுமாரோட மிரட்டலுக்குப் பயந்து ஏன் சாகத் துணியணும்? பேசாம அலுவலகத்துல டிரான்ஸ்ஃபர் வாங்கிக்கிட்டு... கண்காணாத இடத்துல ஹாஸ்டல்லே தங்கி காலத்தைப் போக்கலாமே?'ன்னு நீங்க வேதனைப்பட்டு நெனக்கிறதை... என்னால புரிஞ்சுக்க முடியுது.

உண்மையைச் சொல்லட்டுமா? உயிர் வாழறதுக்கு எனக்குத் துளிகூட விருப்பமில்லையே? நீங்க பேரண்ட்ஸ் மட்டுமில்ல.... என்னோட ஃபிரண்ட்ஸ்... என்னால உங்க இழப்பைத் தாங்கிக்க முடியலை.

இயல்புக்கு திரும்ப முடியலை... எனக்குன்னு யாருப்பா இருக்காங்க? நான் எதுக்காக இருக்கணும்? எனக்கு ஒரு பிடிப்பும் இல்லையே? அதான்... சுகுமார் விஷயத்தை சாக்கா வச்சு இந்த முடிவுக்கு வந்திருக்கேன்.

நாளைக்கே... நான் வத்திராயிருப்புக்கு கிளம்பறேன்....'

அம்மா அப்பா... இருவரின் படங்களைப் பார்த்து மானசீகமாகப் பேசியவள்... ஷெல்ஃபிலிருந்த டிராவல் பேக்கை எடுத்து தனக்கு வேண்டியவற்றை எடுத்து வைத்து அழகாய் 'பேக்' செய்தாள்.

டிராவல் பேக்கின் மீது தனது ஹேண்ட் பேக்கை கொண்டு வந்து வைத்தாள்.

திடுதிப்பென்று சுகுமார் வந்து பார்த்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்தில்.. அவைகளை ஓரமாய் - மறைவாய் வைத்தாள்

'உயிரை மாய்த்துக் கொள்ளப் போகிறோம்' என்ற சோகமும் விரக்தியும் அவளை ஆட்டிப் படைத்தாலும்.. உள்ளூர ஏதோவொரு ஆர்வம் உந்தித் தள்ளியது நிஜம்!

'நல்ல தங்காள்' தனது குழந்தைகளுடன் உயிர் நீத்த இடத்திற்கு அல்லவா அவள் செல்லப் போகிறாள்?

நல்ல தங்காள் வரலாறு என்பது.. நடந்த சரித்திரம் அல்லவா? முக்கியமான சரித்திர நிகழ்வு நடந்த இடத்திற்குச் சென்றுபார்க்க கொடுத்தல்லவா வைத்திருக்க வேண்டும்...?

'அப்பா குறிப்பிட்ட பெண் தெய்வம் எது? கடைசி வரை தெரிந்து கொள்ளமாலே போய் சேர்ந்து விடுவேன் போலிருக்கிறதே?'

சோகமாய் பெருமூச்சு விட்டாள் அதிசயா.

அந்தப் பெண் தெய்வம் தான் 'நல்ல தங்காள்' என்பதை அறியாமலேயே நல்ல தங்காள் உயிர்நீத்த இடத்திற்கு ஆர்வமாய் கிளம்ப ஆயத்தமானாள்.




அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து கொள்ளும் வழக்கம் கொண்டவள் அதிசயா.

அம்மாவின் புடவை ஒன்றை எடுத்து பத்திரமாய் பேக்கினுள் வைத்துக்கொண்டாள்.

அப்பாவுடைய மூக்கு கண்ணாடியையும் எடுத்து வைத்தாள்.

'உயிரை மாய்த்துக் கொள்ளலாம்' என்று முடிவு செய்ததிலிருந்து விழிகளிலிருந்து கண்ணீர் வழிவது நின்று போயிருந்தது.

அழுதழுது கண்ணீர் வற்றி விட்டதோ.. அல்லது விரக்தியில் இவளது மனம் இறுகிப் போய் விட்டதோ..?

பூஜை அறையின் வாசலில் நின்றபடி எட்டிப் பார்த்தாள். எத்தனை எத்தனை ஸ்வாமி படங்கள்?



ஒரு தெய்வத்திற்கு கூடவா கண் தெரியவில்லை?

'இப்படி அனாதையாக்கி என்னைத் தவிக்க விட்டுட்டீங்களே? சரி... இது தான் விதி போலிருக்கு.

உங்களை நிந்திச்சு... அந்தப் பாவத்தை நான் ஏன் கட்டிக்கணும்? போற நேரத்துல இது தேவையா?

வாழத்தான் எனக்கு குடுத்து வைக்கலை. நல்ல சாவு கிடைக்கிறதுக்கும் நான் வரம் வாங்கிட்டு வரலை போல...

தற்கொலை செய்வதும் மகா பாவம் தானே?

அது துர்மரணம் தானே? அகால மரணம் இல்லையா? இதற்கு அப்புறமும் எனக்கு நிம்மதிகிட்டாதே?

ஆத்மா சாந்தி அடையாமல் ஆவியாய் நான் அலைக்கழிய வேண்டியிருக்குமே?

சரி... இது தான் என் தலை எழுத்து போலிருக்கு. சுகுமாரின் கையில் சிக்கி சீரழிவதற்கு... ஆவியாய் அலைவதில் தப்பே இல்லையே?

நிர்க்கதியாய்... நாதி அற்றவளாய்... இந்த பூமியில் கிடந்து அல்லல்படுவதற்கு இது எவ்வளவோ மேல் ஆயிற்றே?

தனக்குள் ஏதேதோ எண்ணிப் புலம்பியவள்.. நேராக அப்பாவின் அறைக்குள் புகுந்தாள்.

சித்தர்கள் சம்பந்தப்பட்ட நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஷெல்ஃப் அருகே நின்றாள்.

அதிலிருந்து இரு புத்தகங்களை உருவினாள்.

'அப்பா! சித்தர்கள் மீது அதீத ஈடுபாடும் பக்தியும் கொண்டிருந்தீங்களே?' ஒரு சித்தர் கூட உங்களுக்காக மனம் இரங்கலையேப்பா?

எல்லோருமே 'இதுதான் விதி'ன்னு விலகி நின்னுட்டா... பக்தர்கள் வச்சிருக்கிற நம்பிக்கையும் பக்தியும் வீண்தானேப்பா?'

மளுக் என்று கண்களில் கண்ணீர் குளம் கட்டியது.

மனம் சலித்து மீண்டும் அந்தப் புத்தகங்களை எடுத்த இடத்தில் வைக்க முற்பட்ட போது... அந்தப் புத்தகத்திலிருந்து ஏதோ ஒன்று நழுவி விழுந்தது.

புத்தகங்களை வைத்து விட்டு.. கீழே குனிந்த அதை எடுத்தாள். அது ஏதோ படம் போன்றிருந்தது.

அதைத் திருப்பி பார்த்தவளுக்கு... சுரீர் என்றிருந்தது. இரவில் கனவில் வந்த உருவம்தான் அது!

அப்பா திரும்பிப் பார்த்தபோது... அவரது உருவம் மறைந்து அதற்கு பதிலாக யாரோ ஒரு சித்தர் தெரிந்தாரே?

ஜடாமுடியுடன் இருந்தவர் மெல்ல இவளைப் பார்த்து முறுவலித்தாரே?

அதே சித்தர் தான்...!

அதிசயாவுக்கு சில்லென்று மேனியெங்கும் புல்லரித்தது.

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை... மின்சாரம் பாய்ந்தது போல் இனம் புரியாத ஆன்மீக அதிர்வில் ஆடிப் போய் விட்டாள்.

'இவரை.. இந்தப் படத்தை... இப்பேதுதானே முதல் முதலாய் பார்க்கிறேன். இவரது உருவம் நேற்றே கனவில் வந்து விட்டதே? அது கனவா நனவா என்று இன்னமும் குழப்பமாய் தான் இருக்கிறது.

முன் பின் பார்த்தறியாத சித்தரின் முகம்... தெளிவாய் தெரிந்ததே? என்னைப் பார்த்து முறுவலித்தாரே?

இது எப்படி சாத்தியம்? அப்பா... ஒருவேளை இப்படத்தை என்றைக்காவது காட்டியிருப்பாரோ?

ஊகூம்... நிச்சயமாக இல்லையே? நினைவுக்கு தெரிந்தவரை அவர் இந்தப் படத்தை எனக்கு காட்டவும் இல்லை...

இந்த சித்தரைப் பற்றி எதுவும் சொன்னதும் இல்லையே? இந்தப் படத்தைப் பார்த்ததுமே.. இப்படியொரு 'வைப்ரேஷன்' ஏற்படுகிறதே?

ஏதோ... இஷ்ட தெய்வத்தை நேரிலேயே தரிசித்து விட்டாற் போன்று... உள்ளம் பரவசப்படுகிறதே?

பரவசத்தில் மேனி சிலிர்த்து கண்ணீர் வருகிறதே? லட்சுமி, சரஸ்வதி, அம்பாள், கிருஷ்ணர், அகஸ்தியர், வள்ளுவர், படங்கள்... கடைகளில் தத்ரூபமாய் விற்கப்படுமே...! அதைப் போன்று இந்த சித்தரின் படத்தையும் தத்ரூபமாய் வரைந்திருக்கிறார்கள்.

இந்த சித்தரை தத்ரூபமாய் கனவில் பார்த்து விட்டேனே? இதென்ன அதிசயமாய் இருக்கிறதே?'

உள்ளூர அதிசயித்தவள்... கண்ணீர் மல்க, அந்த சிறிய படத்தை கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

ஒற்றிக் கொள்ளும் போது தான்.. அந்த வித்தியாசத்தை உணர்ந்தாள்.

கமகமவென்று விபூதியின் மணம் கமழ்வதை அவளால் நுகர முடிந்தது.

ஒரு கணம் தயங்கி விட்டு.. அந்தப் படத்தை மெல்ல முகர்ந்து பார்த்தாள்.

சன்னதியில்... மூலஸ்தானத்தில் மூலவருக்கு விபூதி அபிஷேகம் நடைபெறும் போது... கும்மென்று காற்றில் விபூதி மணம் வியாபிக்குமே?

அதே போன்று அப்படியொரு மணம்... நாசியை ஸ்பரிசித்து மீண்டும் புல்லரிக்க வைத்தது.

'இந்தப் படத்தை அப்பா... இதற்கு முன்பு விபூதி பொட்டலத்தில் வைத்து எடுத்து வந்திருப்பாரோ?'



படத்தை முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்தால்... அதற்கான அறிகுறியே தென்படவில்லையே?

பின்பு எப்படி இப்படியொரு விபூதி மணம் வந்தது?

அந்த ரெண்டு சித்தர் புத்தகங்களிலும் விபூதி வாசம்வரவில்லை.

இதில் மட்டும் எப்படி வந்தது? அப்பா, இதற்கு முன்பு இந்தப் படத்தை என்னிடம் ஏன் காட்டவில்லை?

சித்தர்களிடத்திலும் அவர்கள் விபூதி, மலர்கள், சந்தனம், ஜவ்வாது, மறிக்கொழுந்து, கஸ்தூரி, சாம்பிராணி, அகிற்புகை, வெற்றிவேர் போன்ற அத்தனை நறுமணங்களும் கலந்திருக்கும் என்று அப்பா அடிக்கடி கூறுவாரே?''

நானும் புத்தகங்களில் இதைப் பற்றி வாசித்திருக்கிறேனே? நேற்று எனக்கு கிடைத்த தரிசனத்திற்கும்... இன்று கையில் படம் கிட்டியதற்கும் என்ன அர்த்தம்?

இது அப்பாற்பட்ட செயல்தானே?

ஏதோ ஒரு அற்புத சக்தி போல் தோன்றுகிறதே?

அப்பா குறிப்பிட்ட சடையாண்டி சித்தர் இவராகத்தான் இருக்குமோ?

''பெண் தெய்வம் உனக்கு துணையிருப்பதாக சடையாண்டி சித்தர் அருள்வாக்கு குடுத்திருக்கிறார்'' என்று அப்பா இறுதியாக கூறினாரே?

அவர் தானா இவர்?

இவரை அப்பா எங்கு சந்தித்திருப்பார்?

கடைசியாக அப்பா ஆறுமாதங்களுக்கு முன்பு... ரமண மகரிஷி பிறந்த ஊரான 'திருச்சுழி'க்கு சென்று அந்த ஆசிரமத்தில் ஒரு வாரம் வரை தங்கி விட்டு வந்தார்.

'திருச்சுழி...' அருப்புக்கோட்டைக்கு அருகில் உள்ள கிராமம் ஆயிற்றே...?

அங்கு போய் விட்டு வந்த அப்பா.. இந்த சித்தரைப் பற்றி மூச்சே விடவில்லையே? அதற்குப் பின்பு.. அவரது உடல்நிலை சீர்கேடு அடையத் தொடங்கி விட்டதால்... அவர் வேறு எங்கும் செல்லவில்லையே?

ஒன்றும் புரியவில்லையே? புரியாத புதிராக இருக்கிறதே?

சிந்தித்தபடியே அந்தப் படத்தை வைத்தகண் வாங்காமல் பார்த்தபடி நடந்தவள்.. அதை பத்திரமாய் தனது ஹேண்ட் பேக்கில் வைத்தாள்.

ஏதோ யோசனையுடன் மெல்ல நடந்து அப்பாவின் டேபிளருகே அமர்ந்து அதில் தலையை சாய்த்துக் கொண்டாள்.

சித்தர்களைப் பற்றி பெரிய பிரசங்கமே செய்யும் அளவுக்கு சிவராமன் நிறைய வாசித்து ஆய்ந்து நிறைய தகவல்களைத் தெரிந்து வைத்திருந்தார்.

'இந்த சித்தர் யாருப்பா? சடையாண்டி சித்தர்தானா? எதையுமே சொல்லாம

மூடிமறைச்சுட்டீங்களேப்பா?

இது நியாயமா?'

மெள்ள முணுமுணுத்தபடி சோர்வாய் விழிகளை மூடிய தருணத்தில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

'காலிங்பெல் இருக்கும்போது.. யார் இப்படி அவசரமாய் கதவைத் தட்டுவது?'

தடுமாறியபடியே கதவை நோக்கி நடந்தாள் அதிசயா. ஜன்னல் வழியே மெல்ல எட்டிப் பார்த்தவள் அதிர்ந்து போனாள்.

சுகுமார் நின்று கொண்டிருந்தான்.

சட்டென்று விலகி கதவின் மேல் சாய்ந்து நின்றவளுக்கு... திகிலில் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.




உள்ளுக்குள் உலை கொதித்தது.

கோபம் தாளாமல்... பற்களை நறநறத்தாள் அதிசயா.

'பாவி! சண்டாளன்... அப்பா இறந்த சோகத்தில் இருப்பதால்... போனால் போகிறதென்று ஒரு பத்து பதினைந்து நாளைக்காவது.. கண்ணில் படாமல் நிம்மதியாய் விட்டு வைப்பான் என்று நினைத்தேனே...?

தட்டிக் கேட்க ஆள் இல்லை என்ற தைரியத்தில் தறிகெட்டு ஆட்டம் போடுகிறானே...? எப்படி மிரட்டினாலும் இன்று கதவைத் திறக்கவே கூடாது...' உறுதி கொண்ட அதிசயாவுக்கு.. வேறொரு குரல் கேட்கவே காதைத் தீட்டிக் கொண்டு செவி மடுத்தாள்.

"பாவம்...! தனிமைங்கிறது மிகப் பெரிய கொடுமையான விஷயம். அதுவும் இந்த மாதிரி சமயத்துல... யாராச்சும் இவங்க பக்கத்துலேயே இருக்கணும். ஒரு மாசத்துக்காவது ஒருத்தர் கூடவே தங்கியிருந்து ஆறுதல் சொல்லி இயல்புக்கு இவங்களைத் திரும்ப வைக்கணும்..."

"சொந்தக்காரங்கன்னு சொல்லிக்கிறதுக்கு யாருமே இல்லைன்னா... இந்த நிலைமைதான்..."

"சிவராமன் சார் தப்பு பண்ணிட்டாரு. சொந்த பந்தங்களே தேவையில்லைன்னு வைராக்கியமா இருந்துட்டாரு. கடைசி காலத்திலாவது...' இந்தப் பொண்ணை மனசுல வச்சாவது... பழைய உறவை அவரு



புதுப்பிச்சிருக்கலாம்.

இப்படி அம்போன்னு யாருமே இல்லாம நிக்கிற நிலைமைக்கு இந்தப் பொண்ணை ஆளாக்கிட்டாரே..."

"சரி! விட்டுத் தள்ளுங்க.. நடக்க வேண்டியதைப் பார்ப்போம். ஆறுதல் சொல்லத்தானே வந்தோம்? செல்ஃபோன் நம்பர்ஸை குடுத்துட்டுப் போவோம்... ஏதாவது உதவி தேவைப்பட்டா வந்து செய்யலாம்... நாம அவர் கூடவே வேலை பார்த்தவங்க... அவர் பொண்ணுக்கு நம்மால இயன்ற வரைக்கும் உதவிட்டுப் போலாம்..."

வெளியில் கசமுசாவென்று நாலைந்து பேர் மாறி மாறிப் பேசும் குரல் கேட்டது.

'ஓ... அப்பாவுடன் கல்லூரியில் வேலை பார்த்த விரிவுரையாளர்கள் வந்திருக்கிறார்களா?'

கூடவே இந்த சுகுமார் தடியனும் வந்து விட்டிருக்கிறான் போலும்...'

நிம்மதி பெருமூச்செறிந்தபடி துணிவுடன் கதவைத் திறந்தாள்.

"வாங்க..."

கை கூப்பியபடி உள்ளே நுழைந்தவர்களைப் பணிவுடன் ஏறிட்டாள். வந்திருந்த நான்கு பேர்களின் விழிகளில் பரிவும் பரிதாபமும் அனுதாபமும் தான் ஏகத்திற்கும் தேங்கியிருந்தன.

கடைசியாக வந்து நின்ற சுகுமார்... இவள் ஏறிட்டபோது சட்டென்று கண்ணடித்து கோணலாய் சிரித்தான்.

யாரும் அறியாமல் ஒரு கணத்தில் அவன் செய்த செய்கையைக் கண்டு... இவளது நாடி நரம்பெல்லாம் வெட்டென்று துடித்தாற் போலிருந்தது.

கோபத்தில்... 'இவனது முகத்தில் காறி உமிழ்ந்து விடலாமா?' என்று துடித்த மனதை.. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"நீங்க படிச்ச பொண்ணு... மனசைத் தேத்திக்கோங்க... உங்களுக்கு ஆதரவா நாங்க எல்லோரும் இருக்கோம்... கவலைப்படாதீங்கம்மா..."

"இந்தாங்கம்மா... இதுல எங்க எல்லோருடைய போன் நம்பர்களும் இருக்கு... ஏதாச்சும் உதவி தேவைப்பட்டா ஒரு கால்பண்ணும்மா... பக்க பலமா நாங்க இருக்கோம்..."

"கூச்சப்படாம என்ன ஹெல்ப் வேணாலும் கேளும்மா. நாங்க சிவராமனோட பல வருஷமா வேலை பார்த்தவங்க... அவரோட ஸ்தானத்துல நாங்க இருக்கோம்கிறதை... மறந்துடாதேம்மா"

ஆள் ஆளுக்கு ஆறுதல் கூறியபடி அவர்கள் நீட்டிய துண்டுக் காகிதத்தை பணிவாய் வாங்கி வைத்துக் கொண்டாள்.

'இவர்களிடம் இந்த தடியனைப் பற்றி சொல்லி விடலாமா?' என்று துடித்த

நாவை... கஷ்டப்பட்டு கடித்து அடக்கினாள்.

'இதை வெளியில் சொன்னால் எனக்குத்தான் அசிங்கம். அதுவும் தவிர... இந்தப் பாவி கில்லாடி ஆயிற்றே? பிளேட்டை அப்படியே திருப்பிப் போட்டாலும் போட்டு விடுவான்.

இவனது அக்கிரமத்திற்கு பகவான் தான் பாடம் கற்றுத் தர வேண்டும். கடவுள் தான் கூலி தரவேண்டும். பெண்ணுக்கு பொறுமை மிகவும் அவசியமாயிற்றே...!'

வந்தவர்கள் ஆறுதல் கூறி விட்டு விடை பெற்றுக் கொண்டார்கள்.

அவர்களைப் பின்தொடர்ந்து போவதுபோல் போக்குகாட்டிவிட்டு திடுதிப்பென்று மீண்டும் வந்து... இவளருகே, ''இவங்களுக்கு மட்டும் இன்னமும் நா சொல்லலை... மத்தவங்க எல்லாருக்கும்... ஏன் இந்த ஏரியாவுக்கே தெரியும்... நீ என்னோட 'கீப்'புன்னு...'' என்று கிசுகிசுத்தான் சுகுமார்.

எரிமலையாய் குமுறிய கோபத்தை வெகு சிரமப்பட்டு அடக்கியபடி... எங்கோ வெறித்தபடி இருந்தாள் அதிசயா.

''வரட்டுமா என் அனாதைச் செல்லமே...!''

கற்சிலை போல் அசையாமல் நின்றிருந்தாள்.

தோள்களைக் குலுக்கியபடி குஷியாய் நடந்து வெளியேறினான் சுகுமார்.

விரைந்து சென்று கதவைத் தாழிட்டு விட்டு வந்து மீண்டும் மேஜையருகே வந்து அமர்ந்தாள்.

கொதிப்பு அடங்க சில கணங்கள் பிடித்தன.

கோபத்தால் வெகுநேரம் மூச்சிரைத்தது.

விழிகளை மூடி தியானித்து மனதைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்.

அப்பா சதா சித்தர்களைப் பற்றித்தான் சிலாகித்துப் பேசிக்கொண்டிருப்பார்.

இவள் தன் மனதைக் கட்டுக்குள் கொண்டு வந்ததுதான் தாமதம்... அப்பாவின் குரல் அசரீரி போல் கேட்க ஆரம்பித்தது.

சுற்றும் முற்றும் திரும்பிப்பார்த்தாள்.

கணீரென்ற கம்பீரமான குரல்!

இவளருகில் அப்பா அமர்ந்து வழக்கம் போல் பேசும் தொனி!

'இதென்ன? கண் விழித்துக் கொண்டிருக்கும் போதே... கனவு வருமா? இப்போது தானே அந்தப் பொறுக்கிப் பயல்... வீட்டுக்கு வந்து என்னை நோகடித்து விட்டுச் சென்றான்...?

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில்... அப்பாவின் குரல் அழகாய் கேட்கிறதே?

'இது கனவல்ல... கிள்ளிப் பார்த்தால் வலிக்கிறதே...? அப்படியென்றால்... இது என்ன பிரமையா?'

இவளுக்குள் வரி வரியாய் யோசனை மெள்ள ஓடியது. தங்கு



தடையில்லாமல் சித்தர்களைப் பற்றி அப்பா பேசியதைக் கேட்டு... சில்லென்று மேனி சிலிர்த்தது.

'இதற்கு என்ன அர்த்தம்? 'எதைப் பற்றியும் கவலைப்படாதே... சித்தர்களின் மீது பாரத்தைப் போடு' என்று அப்பா மறைமுகமாக எனக்கு உணர்த்துகிறாரோ?'

'ஆமாம்... அப்படித்தான் இருக்க வேண்டும்'

அதிசயாவுக்குள் குட்டி நிம்மதி ஜனித்தது.

அப்பா பேசுவதை... முழு கவனத்துடன் செவி மடுக்கத் தொடங்கினாள்.

## 10

'' '**சி**த்தர்கள்' என்பதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? சித்தர்கள்னா... அறிவு நிறைந்தவர்கள் என்று பொருள். 'சித்திகள்' என்ற - மனித அறிவுக்கு எட்டாத பல காரியங்களிலே இவங்க ஈடுபடுவாங்க.

இந்த சித்திகளில் எட்டு பெரும் 'சித்திகள்' இருக்கு. இதைத்தான் 'அஷ்டமா சித்திகள்'னு சொல்றாங்க. இவைகளை நல்லா அறிஞ்சு தேர்ச்சி பெற்றவங்க தான் சித்தர்கள்.

அஷ்டாங்க யோகங்கள்னு சொல்றாங்களே...? அவை என்னன்னு தெரியுமா...? ஒவ்வொண்ணா சொல்றேன். நல்லா கேட்டுக்கோ...

1. **இயமம்:-** கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, வெஃகாமை (பிறர் பொருள் விரும்பாமை), புலன் அடக்கம் என்பன.

2. **நியமம்:-** தவம், மனத்தூய்மை, தத்துவ நூலோர்தல், பெற்றது கொண்டு மகிழ்தல், தெய்வம் வழிபடல்.

3. **ஆதனம்:-** பத்திரம், கோ முகம், பங்கயம், கேசரி, சுவத்திகம் (மங்கலம்), சுகாதானம் (சுகமும் திடமும் எவ்வாறிருக்கின் எய்துமோ அவ்வாறிருத்தல்), வீரம், மயூரம் முதலிய இருப்பினுள் ஒன்றாக இருத்தல்.

4. **பிராணாயாமம்:-** பிராணவாயுவைத் தடுத்தல், வாயுவை உட்செலுத்துதல், வெளிச்செலுத்துதல், இரேசக - பூரக கும்பங்களால் தடுத்தல் (இரேசகம் என்பது மூச்சை வெளிவிடுதல், பூரகம் என்பது வாயுவை உட்செலுத்துதல்) இதுவும் இரண்டு வகைப்படும்.

1. **அகற்பம்:-** மந்திரமில்லாது நிறுத்தல்.

2. **சகற்பம்:-** பிரணவத்துடன் காயத்ரி மந்திரத்தை உச்சரித்து நிறுத்தல்.

5. **பிரத்தியாகாரம்:-** மனமானது, புலன்கள் வாயிலாக விஷயாதிகளில்

சென்று பற்றி உழலாவண்ணம் அடக்குதல்.

6. **தாரணை:-** உந்தி, இதயம், உச்சி என்று மூன்று இடங்களிலும் உள்ளத்தை நிலை நிறுத்துதல்.

இதற்கு, முழங்கால், குதம், இதயம், கண்டம், கபாலம் என்னும் ஐந்து இடங்களிலும் ஐம்பூதங்களை (நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம்.) ஆகியவைகளையும் ஒடுக்கி... அவ்விடங்களிலே முறையே பிரம்மன், விஷ்ணு, மகேசுவரன், உருத்திரன், சதாசிவன் என்னும் பஞ்சமூர்த்திகளையும் 'இருத்திப் பாவித்தல்' என்றும் சொல்லலாம்.

7. **தியானம்:-** ஐம்புலன்களை அடக்கி ஒரு கரத்தில் மழுவும் ஒரு கரத்தில் மானும் ஏந்தியதாய் அபயவரத அஸ்தங்களை உடைய சதுர்ப்புயம், காள கண்டம், திரிநேத்திரம் உடையனவாய் விளங்கும் சிவமூர்த்தியைத் தியானிப்பது.

8. **சமாதி:-** ஓரிடத்தேனும் மந்திரத்தோடு நோக்காமல் எங்கணும் சிவ வியாபகமாய் நோக்கி, அவ்வஸ்துவையும் தன்னையும் பிரிவறப் பொருத்துதல்.

இத்தைகைய அஷ்டாங்க யோகத்தினால் அஷ்டமா சித்திகளை அடைந்தவர்களே சித்தர்கள் ஆவார்கள்...''

'அடேங்கப்பா... தன்னை 'சித்தர்' நிலைக்கு உயர்த்திக் கொள்ள எத்தனை விதமான யோகப் பயிற்சிகளை முறையாக முயற்சித்து கஷ்டப்பட்டு செய்திருக்கிறாங்க...' என்று வியப்பின் மிகுதியில் வாய் விட்டு சொல்ல வேண்டும் போலிருந்தது அதிசயாவுக்கு...!

அதைவிட முக்கியமான ஒன்றைக் கேட்டுவிட வேண்டும் போல் இருந்தது.

'அப்பா! உங்களுக்கு அந்த 'அருள்வாக்கு' எங்கே கிடைச்சது? அதை ஏன் என்கிட்ட முன்னமே சொல்லலை... உங்களுக்கு அந்திம காலம் நெருங்கி வந்ததை உணர்ந்த நீங்க... போயும் போயும் சுகுமார்கிட்டே சொல்லியிருக்கீங்க...

பெத்த மகள்கிட்டே ஏன் அதைச் சொல்லணும்ன்னு தோணலை? அருபமான ரூபத்துல வந்து... இப்போ என்கிட்டே பேசிட்டிருக்கீங்க. அது ஏன்னு எனக்குப் புரிஞ்சு போச்சு.

சுகுமார் இப்போ என்கிட்டே பேசினதைக் கேட்டதும்... கோபமா வந்துச்சு. என் நிலைமையை நெனச்சு வெறுப்பு வந்தது. பேசாம 'இன்னிக்கே இப்பவே என் கதையை முடிச்சுக்கிட்டா என்ன?'ன்னு கூட ஒரு கணம் தோணுச்சு. என் எண்ணத்தை மாத்தணும்; என் மனசுக்கு ஆறுதல் அளிக்கணும்ன்னு தான்... நீங்க... இல்ல... உங்க குரலை அசரீரியாக ஒலிக்க வச்சிருக்கீங்க...



தயவு செஞ்சு இப்போவாச்சும் என்னோட கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கப்பா... ப்ளீஸ்...'

தழுதழுத்த குரலில் கேட்டுவிட்டு... ஆர்வமாய் காத்திருந்தாள்.

பதில் இல்லை. நிசப்தம் தான் நிலவியது.

இதற்கு முன்பு இப்படியொரு அசரீரி கேட்டது நிஜம்தானா? அல்லது பிரமை தானா? - என்ற ஐயம் தான் தலைதூக்கியது.

'கடவுளே! போகிற போக்கைப் பார்த்தால்... நான் 'போய்' சேர்வதற்குள்... பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறதே?

நடப்பதை எல்லாம் பார்த்தால்... ஒன்றும் நம்பும்படியாக இல்லை.

நம்பாமலும் இருக்க முடியவில்லை. நிஜம் எது? கனவு எது? - என்று பிரித்தறிய முடியாமல்... அறிவு மயங்குகிறது. இல்லை. மழுங்குகிறது.

துக்கம் மழுங்க வைக்கிறது போலும்.

இதை யாரிடமாவது வெளியில் சொன்னால்... சத்தியமாய் நம்ப மாட்டார்கள்.

'சிவராமனின் மகளுக்கு சித்தப்பிரமை பிடித்து விட்டது' என்று முடிவே கட்டி விடுவார்கள்.

அம்மா ஆசையாய் என்னை 'அறிவுக்களஞ்சியமே...' என்று தான் அடிக்கடி கொஞ்சுவாள்.

அந்தக் களஞ்சியத்தின் மீது ஒரு கயவன் களங்கம் சுமத்தி இந்த நிலைமைக்கு கலங்கடித்து விட்டானே!

இத்தனை நேரமாய் அசரீரி போல் அழகாய் பிரசங்கம் செய்த அப்பா... என் கேள்விக்கு ஏன் பதிலளிக்காமல் மவுனம் சாதிக்கிறார் என்று தெரியவில்லையே!

சரி... நடப்பது நடக்கட்டும். அப்பாவுக்கு பழக்கமான டிராவல் ஏஜென்ஸிக்கு ஃபோன் செய்து வத்திராயிருப்புக்கு செல்வதற்கு டிக்கெட்டிற்கு ஏற்பாடு பண்ண வேண்டியதுதான்...'

மனதைத் தேற்றிக் கொண்டு... ஃபோன் செய்து முடித்தாள். அடுத்த அரைமணி நேரத்தில் ஒரு ஆள் வீடு தேடி வந்து டிக்கெட்டை கொடுத்து விட்டு.. பணத்தை வாங்கிக் கொண்டு சென்று விட்டான்.

இரவு ஏழுமணி ஆனதும்... வழக்கமாய் வரும் ஆட்டோவுக்கு ஃபோன் செய்து வரவழைத்தாள்.

டிராவல் பேக், மற்றும் ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு வீட்டைப் பூட்டி விட்டுக் கிளம்பி விட்டாள்.

அக்கம் பக்கத்திலிருந்து யாரும் எட்டிப்பார்க்கும் முன்... அவசரமாய் ஆட்டோவைக் கிளம்பச் சொல்லி விட்டாள்.

அவளது ஆட்டோ பஸ் ஸ்டாண்டை அடைவதற்கும்... அவள் ஏறவேண்டிய பஸ் வந்து நிற்பதற்கும் சரியாய் இருந்தது.

பஸ் புறப்படத் தயாரானது. ஆட்டோக்காரர் பொறுப்பாய் இவளது உடைமைகளை பஸ்ஸில் ஏற்றி விட்டு... ''தாயீ! சொந்தக்காரங்க வீட்டுல... மனசுக்கு ஆறுதலா கொஞ்சநாள் தங்கியிருந்துட்டு வரப் போறீங்க... அப்பாவும் அம்மாவும் உங்களை விட்டுப் போகவே மாட்டாங்க தாயீ! அவங்க எப்பவும் தெய்வமா கிட்டவே இருந்து உங்களை ஆசீர்வாதிப்பாங்க... இதை மட்டும் என்னிக்கும் மனசுல வச்சுக்கோங்க...

ஊருக்குப் போனதும் எனக்கு ஃபோன் போடுங்க தாயீ! பார்த்து... பத்திரம்! மனசை எக்காரணத்தைக் கொண்டும் தளர விட்டுடாதீங்க... சரியா?''

பரிவுடன் கையை அசைத்து விடைபெற்றுக் கொண்டு பஸ்ஸை விட்டு இறங்கி விட்டார் ஆட்டோக்காரர்.

இருக்கையில் தலை சாய்த்து விழிகளை மூடிக் கொண்ட அதிசயாவுக்கு.. ஒரு பக்கம் துக்கம் பீறிட்டுக் கொண்டும் வந்தது.

'அப்பாடா! சுகுமாரிடமிருந்து தப்பிச் செல்கிறோம்' என்ற நிம்மதி ஒரு புறம் இருந்தாலும்... 'அபலையாக... அகதியாக ஊரை விட்டே சென்று.. கண் காணாத இடத்தில் அனாதையாக சாகப் போகிறோம்!' என்ற துக்கம் மலையாய் ஒருபுறம் மனதை அழுத்தியது நிஜம்!

''மேடம்! டிக்கெட் ப்ளீஸ்'' கண்டக்டரின் குரல் அவளைக் கலைத்தது.

சட்டென்று நிமிர்ந்து அமர்ந்து ஹேண்ட் பேக்கிலிருந்த டிக்கெட்டை எடுத்து நீட்டினாள் அதிசயா.

டிக்கெட்டை சரி பார்த்து 'டிக்' அடித்து கையெழுத்து போட்டு விட்டு கண்டக்டர் திருப்பித் தந்ததும்... அதை வாங்கி ஹேண்ட் பேக்கினுள் நுழைத்தவளுக்கு... ஏதோ நெருடியது.

'இதற்குள் என்ன வைத்திருக்கிறேன்? செலவுக்குத் தேவையான பணம், ஐ.டி.கார்ட், தொல்லியல் துறை இளம் ஆய்வாளர் என்பதற்கான ஐ.டி... கொஞ்சம் சில்லறைக்காசுகள்... அப்புறம்... அந்தப் புத்தகத்திலிருந்து நழுவி விழுந்த சித்தரின் படம்...

அவ்வளவு தானே? இவைகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லையே?

அப்புறம் எதற்கு... ஹேண்ட் பேக் கனக்கிறது?

இதைக்கூட கவனிக்காமல் தூக்கி வந்திருக்கிறேனே! எதனால் 'பேக்' கனக்கிறது என்று பார்த்துவிட வேண்டியதுதான்...'

யோசனையுடன் கையை விட்டுத் துழாவினாள்.

மெயின் ஜிப்பைத் திறந்து ஆராய்ந்த போது.. கையில் தட்டுப்பட்ட



பொருளை வியப்புடன் தூக்கிப் பார்த்தாள்.

பேருந்தினுள் இருந்த டி.வி.யில் ஏதோவொரு பிரபல திரைப்படக் காட்சி ஓடிக் கொண்டிருந்தது.

பஸ்ஸிலிருந்த பயணிகள் கண்கொட்டாமல் சுவாரஸியமாய் பார்த்துக் கொண்டிருந்தனர். விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன.

பஸ்ஸில் மிக சொற்ப வெளிச்சம் தான் எங்கிருந்தோ கசிந்து வந்தது.

அந்த அரை குறை வெளிச்சத்தில்... தன் கையில் அகப்பட்ட பொருளை உற்று நோக்கியவளுக்கு... தூக்கி வாரிப்போட்டது.

சில்லென்று மேனி புல்லரித்தது.




பிரம்ம முகூர்த்தத்தில்... அதிகாலை நான்கு மணிக்கு குளித்து விட்டு வந்து தியானத்தில் அமர்ந்திருந்தான் இனியன்.

ஐம்புலன்களை அடக்கி மனதை ஒருமுகப்படுத்தியதில்.. அவனது மனம் வெற்றுத்தாளாய் இருந்தது.

அரை மணி நேரம் கடந்தது.

மனக்கண்ணில் அந்தக் காட்சி தென்பட்டது.

அதே கிணறு!

கிணற்றில் நீரலைகள் வட்ட வட்டமாய் தோன்றித் தோன்றி அடங்கின.

நடு மையத்திலிருந்து மிகப் பெரிய அளவில் ஒரு ஏடு மிதந்து வந்தது.

அந்த ஏட்டில் பளிச்சென்று **'குரு சாமி சித்தர்'** என்ற எழுத்துக்கள் தெளிவாய் செதுக்கப்பட்டிருந்தன.

''குருசாமி சித்தர்..!'' என்று இனியனின் உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

மறுகணமே அந்த ஏடு மறைந்து போனது.

ஏடு மட்டுமல்ல... அந்த நீரலைகள், கிணறு... எல்லாமே மறைந்து வெறும் இருள்தான் தெரிந்தது.

இனியனிடமிருந்து நிம்மதிப் பெருமூச்சு வெளிப்பட்டது.

தேடியது கிடைத்து விட்டாற் போன்ற நிம்மதி முகத்தில் பரவ.. ''குருசாமி சித்தரே போற்றி!'' என்று பதினொரு முறை முணுமுணுத்தான். அதன் பின் ஏதோவொரு அரிய மந்திரத்தை மவுனமாய் உச்சாடனம் செய்யத் தொடங்கினான்.

ஒரு மணி நேரம் எந்தத் தடங்கலும் இன்றி நிம்மதியாய் தியானித்து விட்டு..

விபூதியைத் தொட்டு நெற்றியில் கீற்றாய் இட்டுக் கொண்டு மெல்ல பூஜை அறையை விட்டு வெளிப்பட்டான்.

பால்கனியின் அருகே வந்து நின்று தூரத்தில் பார்வையைப் பாய்ச்சினான்.

யாரோ வேலை மெனக்கெட்டு... பாலிதீன் கவர்களில் போட்டு கட்டி வைத்தாற் போன்று.. தூரத்திலிருந்த மலைத் தொடர்கள், பனி படர்ந்து மங்கலாய்த் தெரிந்தன.

'குருசாமி சித்தர்...!'

மதுரை, விருதுநகர், இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு.. இவர் குல தெய்வம் போன்றவர் ஆயிற்றே!

கோட்டூர், சாத்தூர், இராஜபாளையம், வத்திராயிருப்பு போன்ற ஊர்களில்... இவருக்கு ஆலயங்களும், மடங்களும், ஆசிரமங்களும் இருப்பதாக.. தாத்தா கைலாசம் அடிக்கடி கூறுவாரே?

''நான்கைந்து தலைமுறையாக.. நம்ம குருசாமியைத்தான் குலதெய்வம் மாதிரி கும்பிட்டுட்டு வர்றோம்.

சின்னக்குழந்தையில ஜுரம்கண்டு கண்ணு முழிக்காம நீ கிடந்தே... சாகக்கிடந்த உன்னை குருசாமி கோவில்லே அவரோட மூலஸ்தானத்துக்கு நேரா உன்னைக் கிடத்தி.. மனமுருகக் கண்ணீர் விட்டுக் கதறி வேண்டிக்கிட்டேன்.

கையைக் காலை அசைக்காம ஜடம் மாதிரி படுத்துக்கிடந்த நீ... குருசாமியோட அருளாலே காய்ச்சல் விலகி... கால்களை உதைச்சு அழகா சிரிக்க ஆரம்பிச்சே...

எங்க பாட்டன் காலத்துலேர்ந்து நாங்க பரம்பரை பரம்பரையா இவரை வணங்கிட்டு வந்தது வீண் போகலை. என் வம்சம் பட்டுப் போகாம.. உன்னைக் காப்பாத்தி வாழையடி வாழையா தழைக்க அருள் புரிஞ்சிருக்காரு.

நமக்கு குலதெய்வம் இருக்கண்குடி மாரியம்மன் தான்... ஆனா நம்ம குல தெய்வத்துக்கும் மேலா.. இவரை நம்பி வணங்கிட்டு வர்றோம். அவரும் நம்ம வம்சத்தைக் காவல் தெய்வமா இருந்து காத்து ரட்சித்து வர்றாரு.

இந்த வம்சத்துக்கு வாரிசு நீ! எந்தக் காரியமாவது ஜெயம் ஆகணும்ன்னா.. நீ மறக்காம இவரை வேண்டி வணங்கிட்டு... காரியத்தை தொடங்கு. நினைச்ச காரியம் ஈடேறும்...' என்று தாத்தா இவனிடம் கூறியது... ஞாபகத்திற்கு வந்தது.

இனியனுக்கு நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது. கனவில் வந்த அந்தக் கிணறு! கிணற்றுக்குள்ளிருந்து மிதந்து வந்த அழகியின் ஓவியம்...!

வெள்ளிமலை எஸ்டேட் பங்களாவில்.... மூடிய அறைக்குள் கண்டெடுத்த சிந்தாமணியின் புகைப்படம்.

சிந்தாமணியின் மகள் எங்கு இருக்கிறாள் எப்படி இருக்கிறாள், என்று தெரியவில்லை.

அவளிடம் மனதைப் பறிகொடுத்தது எவ்விதம்...?

எந்த சக்தி இவன் மனதை அவளிடம் இணைய வைத்தது?

இதற்கெல்லாம் யார் காரணம்?

இவன் மூலமாக ஏதோவொரு செயலை நிறைவேற்றப் போவது யாராய் இருக்கும்?

மனித குலத்திற்கு அப்பாற்பட்ட செயலைச் செய்தது... செய்யப் போவது யார்? யார்?'

மனதை சதா துளை போட்ட கேள்விகளுக்கு விடை காண வேண்டும் என்றால்... ஆழ்நிலை தியானம் செய்வதுதான் சரி என்று தோன்ற... இன்று பிரம்ம முகூர்த்தத்தில் தியானத்தில் அமர்ந்தான்.

ஏட்டில் அழகாய் 'குருசாமி சித்தர்' என்று தெளிவாய் காட்சி வந்து... இவனது கேள்விகளுக்கு விடை கிடைத்து விட்டது.

இந்த அற்புதத்தை நினைத்தாலே... இனியனின் மேனி சிலிர்க்கத்தான் செய்தது.

'தாத்தாவிடமும் சபாபதி தாத்தாவிடமும் இதைச் சொல்லி விடலாமா?' என்று மனம் துடித்தது.

'ஊகூம்... காரியம் நிறைவேறட்டும். அப்புறமாய் சொல்லிக் கொள்ளலாம்.

எந்த நேரத்திலும் எனக்கு எந்த உத்தரவு வேண்டுமானாலும் வரலாம். நானும் வெள்ளிமலையை விட்டுக் கிளம்ப வேண்டியிருக்கும்.

'உத்தரவு குருசாமி சித்தரிடமிருந்து வரப்போகிறது!' என்று நினைத்தாலே ஆனந்தமாயிருக்கிறது.

எனது வம்சத்திற்கு காவல் தெய்வமாய் இருப்பவர்; சிறு வயதில் என்னை எமனிடமிருந்து மீட்டு உயிர்ப் பிச்சை அளித்தவர்.

இப்போது கனவில் அந்த அழகோவியத்தைக் காட்டி... என் மனதில் அவளை இடம் பெறச் செய்து.. என் இல்லறவாழ்க்கைக்கு இவள் தான் எனக்கு ஏற்ற இணை என்று முடிச்சு போட்டு இருக்கிறார்.

இந்த குருசாமி சித்தருக்கு கோடானு கோடி நன்றி! என்னவள் எங்கு இருக்கிறாள்? அவள் பெயர் என்ன?

அவள் எந்த நிலைமையில் இருக்கிறாள் என்று எதுவுமே தெரியவில்லை. அவளுக்கும் என்னைப் பற்றி ஒன்றுமே தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

முன்பின் அறியாத எங்கள் இருவரையும் குருசாமி சித்தர் எப்படி கை கோர்த்து விடப் போகிறார் என்று தெரியவில்லையே...?

அவளை எப்போது, எங்கு, எப்படி, பார்க்கப் போகிறேன்? மனம் ஆலாய்

பறக்கிறதே!

இது எப்போது நடக்கும் என்று தெரியவில்லையே?

மிக அழகாய் கனவில் காட்சி தோன்றவைத்து நேர்த்தியாய் காய்களை நகர்த்தி வருகிறார் சித்தர்.

இனி நடக்கப் போவதும் அவர் செயல் தானே?

பொறுமையாய் அவரது உத்தரவிற்காகக் காத்திருக்க வேண்டியது தான்...

அவரது அருளுக்கும் அன்பிற்கும் பாத்திரமானவன் நான்...!

இதற்கு நான் என்ன புண்ணியம் செய்தேனோ... தெரியவில்லையே...?'

சந்தோஷத்திலும் ஆச்சரியத்திலும் அவனுக்கு கண்ணில் நீர் கோர்த்தது.

திடுதிப்பென்று விபூதியின் நறுமணம் காற்றில் மிதந்து வந்து... அவனது முகத்தில் மோதியது.

இனியனின் புருவங்கள் வியப்பின் மிகுதியில் மேலேறின.

பார்வை சட்டென்று கூர்மையானது.

## 12

**வி**டிந்தும் விடியாத காலைப்பொழுது!

பச்சைப் பசேலென்ற மரங்கள் பின்னோக்கி விரைந்து ஓடி மறைவதை வேடிக்கை பார்த்தபடி ஜன்னலோரமாய் அமர்ந்திருந்த அதிசயா... காற்றில் கலைந்து பறந்த முடிக்கற்றையைக் கோதி விட்டாள்.

இரவு முழுவதும் அவளால் கணநேரம் கூட கண் அயர முடியவில்லை.

கையில் அந்த டைரி கிடைத்ததும்... வெலவெலத்துப் போய் விட்டிரு தாள்.

'இந்த டைரி அம்மாவின் அலமாரியிலிருந்த டிராயரில் தானே... அப்பா வைத்திருந்தார்...?

இந்த டைரி தானே கனவில் டிராயரிலிருந்து மிதந்து... அப்பாவின் கையில் வந்து அமர்ந்தது?

இதைத்தானே... அப்பா எடுத்துச் சென்று என் ஹேண்ட் பேக்கில் வைத்தார்? வைத்து விட்டுத் திரும்பும் போது... அப்பாவின் உருவத்திற்கு பதிலாக சித்தர் தோன்றி என்னைப் பார்த்து முறுவலித்தாரே?

அதை நான் கனவென்று நினைத்தேனே? அலமாரியிலிருந்த டைரி என் பேக்கில் இருக்கிறதே?

இதற்கு என்ன அர்த்தம்?



நடந்ததெல்லாம் நிஜம் அல்லவா?

அப்பாவின் உருவில் வந்ததும்... சித்தர் தானே?

என்னைப் பார்த்து முறுவலித்து மறைந்தது எல்லாமே உண்மை போலிருக்கிறதே?

அப்படியென்றால்... வந்தது சடையாண்டி சித்தர்தானே? கடைசி நேரத்தில் அப்பா கூறினாரே?

'அருள் வாக்கு கிடைத்திருக்கிறது' என்றாரே?

அருள்வாக்கு என்றோ தந்த சித்தரே... நேரிலும் காட்சியளித்து விட்டாரே?

இந்த அபலைக்கு... அகதிக்கு.. அனாதைக்கு காட்சி தந்து தெய்வீகப் புன்னகை பூத்தும்... நான் புரிந்து கொள்ளாமல் இருந்து விட்டேனே?

'இது கனவு தான்' என்று உறுதியாக முடிவு செய்து அசட்டையாக இருந்து தொலைத்து விட்டேனே?

இந்தக் காட்சி கிடைக்க... நான் கொடுத்து அல்லவா வைத்திருக்க வேண்டும்?

யுகம் யுகமாய் தவமிருந்தவர்களுக்குத் தானே இப்படியொரு கொடுப்பினை கிடைக்கும்?

'அப்பா போய் விட்டாரே என்று கலங்காதே...! உன் தந்தையின் ஸ்தானத்தில் நானிருக்கிறேன்' என்று காட்சி தந்து அர்த்த புஷ்டியுடன் புன்னகைத்து இருக்கிறார் சித்தர்!

அந்த சூட்சுமத்தைப் புரிந்து கொள்ளாமல்.. அறியாமைத்தனம் செய்து விட்டேனே?

இப்போது தான் அதை அறிந்திருக்கிறேன்!

அறியாமல் இருந்த போது கிடைத்த அரிய காட்சி... அனைத்தும் அறிந்த பின்.. அருமையாய் உணர்ந்த பின் கிடைக்குமா?

'அருமையை உணர்ந்தபின் கிடைப்பது மிகவும் அரிது' என்று அம்மா அடிக்கடி கூறுவாளே?

சரி... இந்த டைரியை எதற்காக இந்த பேக்கில் வைத்து இருக்கிறார்?

அந்த சித்தரே வந்து வைத்திருக்கிறார். அவர் வைத்ததை நான் அறிய வேண்டும் என்று... கண்முன்னே அலமாரியை அனிச்சையாய்த் திறக்க வைத்து டிராயரை இழுபட வைத்து... டைரியை... அந்தரத்தில் மிதந்து வரச் செய்து... தன் கையாலேயே பேக்கில் வைத்து இருக்கிறார்.

சுயரூபத்தில் காட்சி அளித்து முறுவலித்து விட்டு மறைந்து இருக்கிறார்.

இதில் டைரியை வைத்ததற்கு என்ன காரணம்?

டைரியை வாசித்துப் பார்க்கச் சொல்லுகிறாரோ?

பூடகமாய்.. இதன் மூலம் எனக்கு ஏதோ தெரியப்போகிறது என்று உணர்த்துகிறாரோ?

இதில் என்னதான் விஷயம் இருக்கிறதாம்?

தொல்லியல் ஆய்வுக்காக.. பழங்கால கோவில்களுக்கோ அல்லது மண்டபங்களுக்கோ நான் சென்று ஆய்வு செய்து மும்முரமாய் இருக்கும் போதெல்லாம்... என் துணைக்கு கூடவே வரும் அப்பா... ஏதாவதொரு மரத்தடியில் முதுகு காட்டி அமர்ந்து தீவிரமாய்... ரகசியமாய் எழுதிக் கொண்டிருப்பாரே?

இந்த டைரியில் தானே ஏதேதோ குறிப்புகளை எழுதி வைத்தார்?

பெற்ற தகப்பனாராக இருந்தாலும்.. டைரியை நான் எடுத்து உரிமையுடன் வாசித்ததே இல்லையே?

ஆயிரம் தான் இருந்தாலும்... இது ஒருவரின் அந்தரங்கமான விஷயங்களை உள்ளடக்கியது. இதைத் திறந்து வாசிப்பது அநாகரீகமான செயல்... என்ற எண்ணத்தில் அந்த டைரியை நான் தொட்டுக்கூடப் பார்த்ததில்லையே...?

வீட்டிலிருந்த போதே... இதைப் பார்த்திருந்தால் நிதானமாய் உடனே வாசித்திருப்பேன்.

பஸ்ஸில் மிகக்குறைந்த வெளிச்சத்தில்... ஒன்றையும் வாசித்துப் பார்க்க முடியவில்லையே...?

இந்த டைரியைப் புரட்டி... அதிலுள்ள எழுத்துக்களை வருடி ஆறுதல் அடைய வேண்டியது தான்...

நான் இந்த டைரியை விடிந்த பின் - வத்திராயிருப்பில் இறங்கிய பின் தான் வாசிக்க முடியும்.

அப்போது வாசித்துத் தான்.. விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பிராப்தம் இருக்கிறது போலும்.

பிராப்தம் அப்படி இருக்கிறதென்றால்... அதை மாற்ற யாரால் இயலும்...'

பெருமூச்சு விட்டபடி... தலையை சாய்த்து விழிகளை மூடிக் கொண்ட அதிசயாவுக்கு... தலையே வெடித்து விடும் போலிருந்தது.

உடனடியாக வாசித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல்.. அவளை உந்தியது.

சட்டென்று ஒரு யோசனை உதிக்கவே... செல் ஃபோனை எடுத்து ஆன் செய்து... அந்த வெளிச்சத்தில் ஆர்வமாய் டைரியைப் புரட்டினாள்.

பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்த வயதான பெண்மணி இவளை ஒரு தினுசாய் பார்த்து விட்டு... டைரியை வெறித்து வெறித்து நோட்டமிட்டாள்.

தன்னை அந்தப் பெண்மணி கண்கொட்டாமல் கவனிப்பது புரிந்ததும்... அதிசயாவுக்கு அதற்கு மேல் வாசிக்க என்னவோபோலிருந்தது.



ஆர்வத்தை ஓரங்கட்டி வைத்து விட்டு... டைரியை மூடி ஹேண்ட் பேக்கில் வைத்து செல்ஃபோனை அணைத்து விட்டு.. இருக்கையில் சாய்ந்து தூங்குவது போல் பாசாங்கு செய்தாள்.

அந்த வம்பு பிடித்த பெண்மணி அதற்குப் பின்புதான்... நிமிர்ந்து வீடியோவில் பார்வையைப் பதித்தாள்.

இரவு முழுவதும் அவளால் ஒரு பொட்டுக்கூட தூங்க முடியவில்லை.

டைரியை பேக்கில் வைத்து விட்டு... அப்பாவின் உருவம் மறைந்ததும் சித்தர் தென்பட்டு முறுவலித்ததும்... திரும்பத் திரும்ப மனக்கண்ணில் வந்துவந்து போனது...

மெய் சிலிர்த்து ஏதோவாரு பரவசம்... மனதில் குடிகொண்டிருந்தது நிஜம்...!

இதோ... சிறிது நேரத்தில் பொலபொலவென்று விடிந்து விடும்.

நான் என்ன செய்யப் போகிறேன்?

தற்கொலை எண்ணத்தை.... கை விட்டு விடலாமா?

சித்தரின் தரிசனம் கிடைத்திருப்பது.... ஆசீர்வாதமும் கிடைத்த மாதிரி தானே...?

அவர் மேல் பாரத்தைப் போட்டு நடக்கலாமா?

வீட்டை விட்டு அனாதைபோல் வந்து விட்டேன்.

தற்கொலை எண்ணத்தை நான் கைவிட்டு விட்டு மீண்டும்... என் வீட்டிற்கே செல்ல முடியாதே? அங்கு சென்றால்... சுகுமாரிடம் அகப்பட்டுக் கொள்வேனே?

நான் தற்கொலை செய்ய வேண்டும் என்ற முடிவு எடுத்ததால் தானே... என்மேல் சித்தர் மனமிரங்கி காட்சி அளித்திருக்கிறார்.

அந்த எண்ணம் இருந்ததால் தான்... எனக்கு அரிய காட்சி கிட்டியது.

அதனால் அந்த எண்ணத்தை நான் கைவிடவே கூடாது. எடுத்த முடிவிலிருந்து நான் பின்வாங்கவே கூடாது.

முன்வைத்த காலை... ஒரு போதும் பின் வைக்கவே கூடாது. அதுதான் சரி!'

மனதில் தீர்மானித்துக் கொண்டபின்... அதுவரை குட்டையாய் குழம்பியிருந்த மனம் தெளிவடைந்தது.

''வத்திராயிருப்பு வந்தாச்சு! இறங்க வேண்டியவங்க இறங்கிக்கோங்க...''

உரத்த குரலில் கண்டக்டர் கத்தியதும்... சட்டென்று தனது உடமைகளை எடுத்துக் கொண்டு வேகமாய் இறங்கினாள்.

'நல்லதங்காள் கோவில்... இங்கிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதாகக் கேள்விப்பட்டேனே?

டிராவல் பேக்குடன் அங்கு அலைய முடியாது. அதுவும் தவிர... குளித்து

உடைமாற்றிக் கொள்ள வேண்டுமே? தெரிந்தவர்கள் யாரும் இந்த ஊரில் கிடையாதே?

தன்னந்தனியாக வந்திருக்கும் இளம் பெண் நான்...!

துணிந்து ரூமெடுத்து தங்கலாமா? ரூம் வசதி இந்த ஊரில் இருக்குமா என்று தெரியவில்லையே...?

ஸ்ரீ வில்லிபுத்தூர், இராஜபாளையம் போன்ற ஊர்களில்தான்... தங்கும் விடுதிகள் இருக்கும் போலிருக்கிறதே...!'

யோசனையுடன் நின்றிருந்தவளின் அருகில் ஒரு ஆட்டோ வந்து நின்றது.

''எங்கம்மா போகணும்?''

''அது வந்து... நல்லதங்காள் கோவிலுக்குப் போகணும். அதுக்கு முன்னாடி குளிச்சு தயாராகணும்...''

இவள் பேசி முடிக்கும் முன்... ஆட்டோக்காரர் இடைமறித்தார்

''இந்த மாதிரி உதவிகளைச் செய்யறதுக்குன்னே - ஒரு அம்மா இருக்காங்க.... அவங்க கிட்ட கூட்டிட்டுப் போய் விடறேன்.

உங்களுக்கு என்ன தேவைப்படுதோ... அவங்ககிட்டே கேளுங்க. உடனே அந்த அம்மா செஞ்சு குடுப்பாங்க...''

நெற்றியில் சந்தனக்கீற்று... கழுத்தில் ஐயப்ப ஸ்வாமி டாலர்போட்ட மாலை தரித்து - கனிவாய் பேசியவரை... தாராளமாய் நம்பலாம் என்று தோன்ற, துணிவுடன் ஏறி அமர்ந்தாள்.

ஆட்டோவின் முகப்பில் 'நல்லதங்காள் துணை' என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது.

விதியும் விகாரமாய் சிரித்தபடியே அவளைப் பின் தொடர்ந்து வந்தது.

## 13

பத்து நிமிடங்களில் ஆட்டோ... ஒரு ஓட்டு வீட்டின் முன்பாக தடதடத்து நின்றது.

வாசலை ஒட்டி நீண்ட பெரிய திண்ணை!

திண்ணையில் அடுப்பை மூட்டி பணியாரக் குழியில்... மாவை ஊற்றி வேகவைத்துக் கொண்டிருந்தாள் அறுபது வயதைக் கடந்த பெண்மணி.

காற்றடித்து அடுப்பு அணைந்து விடாமல் இருக்க... ஒன்றரை அடி தகரத்தை வளைத்து அடுப்புக்கு அணைவாய் வைத்திருந்தாள்.



நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு... அதிகாலையிலேயே குளித்து முடித்து கண்டாங்கி சேலை உடுத்தி... பார்ப்பதற்கு மங்களகரமாய் இருந்தாள்.

''இவங்கதான், இறங்கிக்கங்க... நல்ல தாயம்மா...! பஸ்ஸ்டாப்புல இவங்களைப் பார்த்தேன். வெளியூர்லயிருந்து வந்திருக்காங்க. நம்ம நல்லதங்கா கோவிலுக்குப் போகணுமாம்...''

ஆட்டோக்காரர் பேசி முடிக்கும் முன்... அந்த நல்லதாயம்மா குறுக்கிட்டாள்.

''சரி! நல்லதம்பி..! நா பாத்துக்கிறேன். வாம்மா...! உள்ளே வா ராஜாத்தி...''

''என்னம்மா... திகைச்சுப் போய் பார்க்கிறீங்க? இந்த ஊர்லே முக்கால்வாசி பேருக்கும் நல்லதம்பி, நல்ல தங்காள், நல்ல தாயம்மா, நல்லம்மான்னு தான் பேர் இருக்கும்.

ஏன்னா... சுத்து வட்டாரத்துக்கே இந்த அம்மன்தான் காவல் தெய்வம். தயங்காம உள்ளார போங்க... இந்த நல்ல தாயம்மா இந்த ஊருக்கே உதவுற பரோபகாரி.. உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்க.. செய்வாங்க...'' என்றார் ஆட்டோக்காரர்.

''சரிங்க ஐயா! ரொம்ப நன்றி... நீங்க மட்டும் வரலைன்னா நான் ரொம்ப திண்டாடிப் போயிருப்பேன். இந்தாங்க..''

பணத்தை நீட்டினாள். அதை வாங்கி சட்டைப் பையில் வைத்துக் கொண்டு... அவளது டிராவல் பேக்கையும் ஹேண்ட்பேக்கையும் எடுத்து வீட்டுத் திண்ணையில் வைத்து விட்டு... ஆட்டோவைக் கிளப்பிக் கொண்டு சென்று விட்டார் ஆட்டோக்காரர்.

ரேழி, கூடம், கம்பி போட்ட முற்றம்... முற்றத்தைச் சுற்றி நான்கு திசைகளிலும் நான்கு பெரிய அறைகள்... அதைத் தாண்டினால் அடுக்களை, கொல்லைப் புறத்துக்குச் செல்லும் திட்டிக்கதவு என்று விஸ்தாரமான வீடாகத் தான் இருந்தது.

''வாம்மா! நீ இந்த அறையில தங்கிக்க... அதோ அந்தக்கோடியில் ஒரு திட்டிக்கதவு இருக்கு பாரு.. அதைத் திறந்தா குளிப்பறை இருக்கு... நீ தயாராகி வா...

சாப்பிடறதுக்கு பணியாரமும் ஆப்பமும் சுட்டு வச்சிருக்கேன்... இது உன் வீடு மாதிரின்னு நெனச்சுக்கோ... நீ தாராளமா எத்தன நாள் வேணாலும் தங்கிக்கோ... ஆமா.. நீ எந்த ஊருலேர்ந்து வர்றே தாயீ?''

''சென்னையிலிருந்து... அம்மா! நீங்க பண்ற இந்த டைம்லி ஹெல்புக்கு... நன்றி! நா இதுக்கெல்லாம் பணம் தந்துடறேன். நீங்க மறுக்காம வாங்கிக்கணும்...''

சங்கோஜமாய் பேசினாள் அதிசயா.

''விருப்பப்பட்டதைக் குடு... வாங்கிக்கிறேன். இவ்ளோ தான் வேணுமின்னு

அடிச்சுக் கேட்கிறவ நானில்லை தாயீ! இப்போ நான் மறுத்துப் பேசினா... சங்கோஜப் பட்டுக்கிட்டு இங்க தங்காம கிளம்பிப் போயிடுவே போலிருக்கு..."

வெற்றிலைக் காவியேறிய பற்கள் தெரிய சிரித்தாள் நல்ல தாயம்மா.

"நீங்க ஊருக்கே உதவற பரோபகாரின்னு ஆட்டோக்காரர் சொன்னாரு. உங்க நல்ல மனசைப் பாராட்டறேன் அம்மா! 'பேயிங் கெஸ்ட்'டா தங்கிக்கிட்டா... எனக்கும் நெருடல் இல்லாம இருக்கும்னு இப்படி கேட்டுட்டேன். தப்பா நெனச்சுக்காதீங்க..."

"உன் சங்கடம் புரியுது தாயி! நான் தப்பா நெனச்சுக்க மாட்டேன். மனுஷ மனவோட்டங்களைப் பார்த்ததுமே புரிஞ்சுக்கிடறவ இந்த நல்ல தாயம்மா. நான் இதுக்கெல்லாம் அப்பாற்பட்டவன்னு நீ போகப் போகப் புரிஞ்சுப்பே...

சரி... நீ உன் சோலியைக் கவனி. நா திண்ணைக்குப் போறேன். வாடிக்கையாளர்கள் வர்ற நேரமாயிடுச்சு..."

"சரிங்கம்மா..."

ஒரு அறைக்குள் நுழைந்தவளுக்கு... பெருத்த நிம்மதியாக இருந்தது. நெருங்கின உறவுக்காரரின் வீட்டிற்கு வந்தாற் போன்ற உணர்வு ஏற்பட்டது. அந்த அறையில் திண்ணையைப் பார்த்தாற்போல் ஒரு ஜன்னல் இருந்தது.

ஜன்னலருகே மெல்ல வந்து நின்றாள்.

அதற்குள் கிண்ணங்களையும், தூக்கு வாளிகளையும் எடுத்துக் கொண்டு.. பணியாரம் மற்றும் ஆப்பத்தை வாங்கிச் செல்வதற்காக வாடிக்கையாளர்கள் கூட்டமாய் வந்து விட்டிருந்தனர்.

ஏற்கெனவே சுட்டு வைத்திருந்ததை விநியோகித்து விட்டு... ஒரு அடுப்பில் பணியாரத்தையும் மற்றொரு அடுப்பில் ஆப்பத்தையும் சுட்டு சுறுசுறுப்பாய் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாள் நல்லதாயம்மா.

மாற்றுடை எடுத்துக் கொண்டு திட்டிக்கதவைத் திறந்து குளிப்பறைக்குச் சென்றாள் அதிசயா.

அங்கிருந்த நீளமான சிமெண்ட் தொட்டியில் நிரப்பப்பட்டிருந்த தண்ணீரை மொண்டு குளித்தாள்.

சில்லென்று இதமாய் இருந்தது.

அங்கு உடை மாற்றத் தோதுப்படவில்லை ஆதலால்... மீண்டும் பழைய உடையுடன் அறைக்கு வந்து... அந்த ஜன்னல் கதவை சாத்தி விட்டு வாகாய் உடையை மாற்றிக் கொண்டு... மூலையில் சுற்றி வைத்திருந்த பாயை எடுத்து விரித்து அமர்ந்தாள்.

அந்த டைரியை எடுத்து வாசிக்கத் தொடங்கினாள்.

சிவராமன் சிறுவனாய் இருந்த போது... வெள்ளிமலையில் சபாபதியின்



பங்களாவுக்கு அடைக்கலமாய் சென்றதிலிருந்து... அவர் சிவராமனை வளர்த்து ஆளாக்கி படிக்க வைத்தது... சிந்தாமணி இவர் மீது காதலை வளர்த்து அதை இவரிடம் தனிமையில் வெளிப்படுத்தியது... முதலில் ஏற்க மறுத்து பின் அவளது பரிசுத்தமான நேசத்தைப் புரிந்து தானும் மனதைப் பறி கொடுத்ததுவரை... எல்லாவற்றையும் தெளிவாய் எழுதி இருந்தார் சிவராமன்.

அந்த டைரியை வாசித்தபோது... அதிசயாவிடம் அத்தனையையும் நேரில் எடுத்துக்கூறுவது போல் மிக அழகாக எழுதியிருந்தார்.

'இது மிகப்பெரிய தவறுதான். ஊரறிய நிச்சயமான பின்பு... நாங்கள் வீட்டை விட்டு வந்தது.. சபாபதி ஐயாவோட பரம்பரைக்கு மிகப்பெரிய தலை குனிவு தான். அவர் வெள்ளிமலை எஸ்டேட் ஓனர்; ஜமீன்தார்.

வளர்த்து ஆளாக்கிப் படிக்க வச்ச புண்ணியவானுக்கு... நான் காலத்துக்கும் கைம்மாறு செஞ்சாலும் தீராது. ஆனா நான் மிகப்பெரிய துரோகத்தைப் பண்ணிட்டேன். காதல் எங்க கண்ணைக் கட்டிப் போட்டுருச்சு.

சுய சந்தோஷத்துக்காக மிகப்பெரிய அவமானத்தை அவருக்கு நாங்க தந்துட்டோம். உங்கம்மாவுக்கும் எனக்கும் இது காலத்தால ஆற்ற முடியாத ரணம்தான்.. மனசாட்சி முள்ளா குத்திட்டிருந்துச்சு.

இருந்தாலும்.. நாங்க ஆதர்ஷ தம்பதிகளா தான் வாழ்ந்தோம். எங்கள் இனிய வாழ்க்கைக்கு அடையாளமா... பல வருஷம் கழிச்சு நீ அதிசயமா பிறந்தே...

கடந்த காலத்தைப் பத்தியோ... எங்க பூர்வாசிரமத்தைப் பத்தியோ நாங்க உன்கிட்டே சொல்லாம மறைச்சதுக்கு... இதுதான் காரணம். உன் பார்வையில் - பெத்தவங்க நாங்க... எந்தக் குறையும் காண முடியாத நல்லவங்களா தெரிஞ்சோம். ஈ எறும்புக்குக்கூட நாங்க ஊறு விளைவிச்சது இல்லைதான்.

ஆனா... கடந்த காலத்துல காதலுக்காக ஒரு உத்தமரோட மனசை நொறுக்கிட்டு... அணுஅணுவா வேதனைப் பட வச்சுட்டு.. எங்க வாழ்க்கையை நாங்க தொடங்கினதை... உன்கிட்டே வெளிப்படையா சொல்றதுக்கு உரிய தைரியம்... எங்களுக்கு வரலை.

உற்றார் உறவினர்கள்ன்னு யாரோட ஆதரவும் இல்லாம... நீ வளர்ந்தே. அப்படியொரு சூழலை ஏற்படுத்தின இந்தப் பாவியை... நீ மன்னிச்சுடும்மா. நீ மன்னிச்சாதான் எங்க ஆத்மா சாந்தியடையும். இந்த டைரியை கண்டிப்பா என்னோட மரணத்துக்குப் பின்னாடி தான் எடுத்து வாசிப்பேன்னு... எனக்கு நல்லா தெரியும்...

ஒரு இளவரசி மாதிரி வசதியா வாழ வேண்டியவள் நீ! வெள்ளி மலையில் இருக்கிற உன்னோட தாத்தாவோட பங்களாவுல ஓடிவிளையாடியிருக்க வேண்டியவள் நீ!

சாரிம்மா... என்னை... எங்களை நீ மன்னிக்கணும்...'

நீர் திரையிட்டு பார்வையை மறைத்தது.

புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... அடுத்த பக்கத்தைப் புரட்டினாள். காலியாக இருந்தது.

அடுத்தடுத்து காலியான பக்கங்கள் தான் இருந்தன.

''நான் அனாதையில்ல. வெள்ளிமலை எஸ்டேட் ஓனர்... அதுவும் ஜமீன்தாரோட பேத்தி நான். ஊர் பேர் தெரியாதவள் இல்லை. அபலையும் இல்லை. அகதியும் இல்லை... இந்தத் தகவலைத் தெரிவிச்சதுக்கு உங்களுக்கு கோடி நன்றி அப்பா!

மன்னிக்கிற அளவுக்கு நீங்களும் அம்மாவும் மாபெரும் குற்றத்தை செய்துடலையே! காவியங்கள்லே... இதிகாசங்கள்லே கூட... காதல் மணம் புரிஞ்சிருக்காங்களே? வீட்டை விட்டு வந்து கந்தர்வ மணம் புரிஞ்சதா... புறநானூற்றுல வரலாற்றுச் சான்றுகளே இருக்கே?

காதல் திருமணம் செஞ்சது தவறான விஷயமே இல்லையே? போதும் அப்பா! நான் அனாதையில்லைங்கிற நிம்மதி ஏற்பட்டுப் போச்சு... அதுவே போதும்...!''

மானசீகமாய் அப்பாவிடம் பேசினாள் அதிசயா. மனதில் ஒரு நிம்மதி ஏற்பட்டதாலோ... அசதியினாலோ.. அவளையும் அறியாமல் சரிந்து படுத்து தூங்கி விட்டாள்.

வலது கை இறுக்கமாய் அந்த டைரியைப் பிடித்திருந்தது.

## 14

''அம்மாடி...! ராஜாத்தி...! உன் பேரு என்னன்னு கூட நான் கேட்டு வைக்கலையே? பாவம்...! பிரயாணக்களைப்பு போலிருக்கு... அம்மாடி...''

அவளது புஜத்தைத் தட்டி எழுப்பினாள் நல்லதாயம்மா.

''சாரி... சாரிம்மா... எப்படியோ கண் அசந்துட்டேன்....'' வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து அமர்ந்தாள் அதிசயா...

''இருக்கட்டும். என்ன இப்போ? உன் பேரு என்னம்மா?''

''அதிசயா.''

''ஆங்... உனக்கேத்த பேருதான். இந்தா... சூடா பலகாரம் கொண்டாந்துருக்கேன். சாப்பிடும்மா...''



தட்டில் சூடான ஆப்பங்களும், பணியாரங்களும் இருந்தன. ''இந்தக் கிண்ணத்துல தேங்காய்ப் பால் இருக்கு. இதுலே கடலை சட்னி வச்சிருக்கேன். சாப்பிடு..''

அன்பாய் உபசரித்தாள் நல்ல தாயம்மா.

அகோரப் பசியால்... மளமளவென்று சாப்பிட்டு முடித்தாள்.

''இன்னும் ரெண்டு பணியாரம் வைக்கட்டுமா? பாவம்... பிள்ளைக்கு நல்ல பசி போலிருக்கு... வயிறார சாப்பிடு தாயீ''

மேற்கொண்டு அவள் பரிமாறியபோது... மறுக்கத் தோன்றாமல் சாப்பிட்டாள் அதிசயா.

''ரொம்ப நன்றிம்மா... ரொம்ப நாளைக்கு அப்புறம் வயிறார சாப்பிட்டிருக்கேன். அம்மா கையால சாப்பிட்ட மாதிரி திருப்தியா இருக்கு...''

''அசதி தீர தூங்கணும்னா.. படுத்து தூங்கு தாயீ.''

''இல்லம்மா... நான் குருசாமி சித்தரோட குகையையும், நல்லதங்காள் கோவிலையும் பார்க்கணும்...''

''அர்ச்சுனா நதியைக் கடந்து போகணும். அர்ச்சுனாபுரத்துல தான் காட்டுக்குள்ளார கோவில் இருக்கு... எனக்கு வேலை நிறைய இருக்கு தாயீ... இல்லன்னா நானே உன்கூட துணையா வருவேன்...''

''பரவாயில்லம்மா... எந்தப் பாதையில, எப்படிப் போகணும்னு சொன்னீங்கன்னா.. நான் போயிடுவேன்...''

''அதோ கிழக்கால போற பாதையில போகணும். பாதை திரும்பற இடத்தில் எல்லாம் அம்புக்குறி போட்ட பலகை இருக்கும். ஆடு மாடு மேய்க்கிற பசங்க திரிவானுங்க.. அவனுங்களக் கேட்டா கூட... பாதையைக் காண்பிச்சு தருவாங்க...''

''பழங்கால கோவில்லே கல்வெட்டுச் செய்தி இருக்கான்னு ஆராயணும். காமிராவில் படம் பிடிக்கணும். நான் திரும்பறதுக்கு ரொம்ப நேரமாகும்... கிளம்பறேன் அம்மா!''

இரண்டடி நடந்தவள் சட்டென்று நின்றாள்.

ஹேண்ட் பேக்கையும் டைரியையும் எடுத்துக்கொண்டு தலையாட்டி விடை பெற்றாள்.

''ரொம்ப தூரம் நடக்கணுமே? அர்ச்சுனா நதி வரைக்குமாவது ஆட்டோவுல போறியா? ஆட்டோ புடிச்சிட்டு வரட்டுமா?''

''வேணாம்...எதுக்கு உங்களுக்கு வீண் சிரமம்? எவ்ளோ தூரம் வேணாலும் நான் நடப்பேன். காலாற நடந்து போயிட்டு வர்றேனே?''

முறுவலித்து விட்டு திண்ணையைத் தாண்டி வெளியேறினாள்.

பாதையின் இருமருங்கும் அடர்ந்த மரங்கள் இருந்ததால்.. சில்லென்ற காற்றும் நிழலுமாய் - நடப்பதற்கு அலுப்பு தட்டாமல் தோதாய் இருந்தது நிஜம்!

அனிச்சையாய் அவளது கால்கள் நடந்தாலும்... மனம் சிந்தனைவலை பின்னியபடி இருந்தது.

'வெள்ளி மலை எஸ்டேட் ஓனர் சபாபதியின் பேத்தி நான்!

கடைசியாக அவரை ஒரு முறை பார்த்து விட்டு வரலாமா? தாத்தா இன்னமும் உயிரோடு இருப்பாரா?

மகளும், மருமகனும் போய் சேர்ந்து விட்டார்கள். இன்னமும் அவர் உயிரோடு இருப்பது சந்தேகம் தானே?

ஒருவேளை அவர் இருந்தால்...? நான் அவரை சந்தித்தால் என்ன நடக்கும்?

பாசமாய் என்னை எதிர்கொள்வாரா? இல்லை... என்னைக் கண்டாலே வெறுத்து ஒதுக்குவாரா?

எதற்கு வம்பு? அம்மாவே கடைசி வரையிலும் அவரைச் சந்திப்பதற்கு சிறிதும் முயலவில்லை.

வைராக்கியமாய் இருந்து உயிரை விட்டுவிட்டாள். நான் எதற்கு அந்த உறவை ஒட்ட வைக்க முயல வேண்டும்?

வேண்டாம்... 'சொத்துக்காக ஆசைப்பட்டு சொந்தம் கொண்டாட வந்து விட்டாயா?' என்று தாத்தா தப்பு அர்த்தம் செய்து முகத்திலடித்தாற் போல் கேள்வி கேட்டு விட்டால்...?

அதை என்னால் தாங்கவே முடியாதே?

முன் வைத்த காலை... பின் வைக்க வேண்டாம்...'

வேதனையுடன் பொங்கி வந்த கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டாள் அதிசயா.

'சடையாண்டி சித்தரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லையே? அவரை அப்பா எங்கு, எப்போது சந்தித்திருப்பார் என்று தெரியவே இல்லையே...?'

கேள்விகள் மாறி மாறி மனதைத் துளைத்தெடுத்த வண்ணம் இருந்தன.

அர்ச்சுனா நதியில் அவ்வளவாகத் தண்ணீர் இல்லை. கணுக்கால் அளவு தண்ணீர் சலசலத்தபடி ஓடிக்கொண்டிருந்தது.

ஆடு மேய்க்கும் சிறுவர்கள் தண்ணீரைக் கைகளால் மொண்டு ஒருவர் மீது ஒருவர் வாரியிரைத்தபடி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சேலை நனைந்து விடாதவண்ணம்... சற்றே கொசுவத்தை உயர்த்திப் பிடித்து நடந்த அதிசயா.. அர்ச்சுனா நதியைக் கடந்து மேட்டின் மீது ஏறினாள்.

அம்புக்குறி போட்ட பலகை காட்டிய திசையில்... இறங்கி வரப்பின் மீது நடந்தாள்.



இரு புறமும் கரும்பு ஆளுயரத்திற்கு மேல் வளர்ந்திருந்தது. கரும்புத் தோகைகள் அழகாய் அவளை வரவேற்பது போல் ஆடின.

யாரோ ஒரு முதியவர் எதிரில் நடந்து வந்தார். இரு கண்களுக்கும் மேலாக வலது கையால் - பார்வையைக் கூசச் செய்த வெளிச்சத்திற்கு அணை போட்டு... அவளைக் கூர்ந்து நோக்கினார்.

''ஐயா! நல்லதங்காள் கோவிலுக்குப் போகணும். இன்னும் ரொம்ப தூரம் போகணுமா?''

''அ... அதோ... தூரத்துல சின்னதா ஒரு கோபுரம் - மரங்களுக்கு மத்தியில் தெரியுது பாரு தாயீ... அதான்... வரப்பு சரியில்ல.. மேடு பள்ளத்துல அப்பப்போ இறங்கி தாண்டித்தான் போகணும். பார்த்து போம்மா...''

''நன்றி ஐயா''

திடீரென வெளிச்சம் மங்கியது. குளுமை கூடியது. அடர்ந்த மேகங்கள் கருகருவென சூழ்ந்தன.

காற்று பலமாய் வீசத் தொடங்கியது. புழுதி, புயலாய் சுழன்று எழும்பியது.

கண்களை அவ்வப்போது தூசு படாமல் மூடிக் கொள்ள வேண்டியிருந்தது.

கண்ணுக்கு எட்டிய தூரத்தில் கோவில் கோபுரம் தெரிந்தாலும்... நடக்க நடக்க பாதை நீண்டு கொண்டே போவது போல் இருந்தது.

வரப்பு வேறு காடு முரடாய் - குண்டும் குழியுமாய் - மேடும் பள்ளமுமாய் அச்சுறுத்தியது. கரும்புத் தோட்டத்தைக் கடந்து.. அடுத்த வயலுக்குள் இறங்கினாள்.

'மழை வர்றதுக்குள்ளே போய் சேர்ந்துடணுமே? இல்லேன்னா பாதை வழுக்கத் தொடங்கிடுமே?'

திகிலுடன் நடையை எட்டிப் போட்டாள்.

அவசரத்தில் சிறு குழிக்குள் பாதம் புதைய... பொத்தென்று விழுந்தாள்.

முழங்கையில் சிராய்ப்பு ஏற்பட்டு.. தகதகவென்று காந்தியது. 'உப்'பென்று ஊதி மண்ணைத் தட்டி விட்டு... துளிர்க்கத் தொடங்கிய குருதியை கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டு.. மேற்கொண்டு நடந்தாள்.

அவள் பயந்தது போல்... சூறாவளிக் காற்றுடன் பேய் மழை பொழிய ஆரம்பித்தது.

'அப்பப்பா! ஒவ்வொரு துளியும் பெரிசு பெரிசா இருக்கே? தொட்தொட்டென்று வீரியமா கொட்டுதே?'

மாயமாய் பெருமழை பொழிந்தது.

ஒரு அடி எடுத்து வைக்கவே.. பெரும் பாடாய் இருந்தது.

களி மண்ணும் செம்மண்ணும் குழைந்து போனதில் சொதக்.. சொதக் என்று வழுக்கியது.

பிரம்மப் பிரயத்தனப்பட்டு மெள்ள மெள்ள முன்னேறினாள். யாரோ பின் தொடர்ந்து வருவதைப் போன்று.. ஒரு குறுகுறுப்பு தோன்றியது.

திரும்பிப் பார்த்தால்... யாரும் கண்ணில் தட்டுப்படவில்லை. ஆனாலும் ஏதோ ஒரு நெருடல்! அவ்வப்போது திரும்பித் திரும்பிப் பார்த்து விட்டு சிரமப்பட்டு நடந்தாள்.

ஏதோவொரு உள்ளுணர்வு அவளை எச்சரித்தது.

அப்படியொரு ஆபத்து வரும் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லைதான்!

## 15

'திரும்பி வந்தவழியே சென்று விடலாமா? மழை ஓய்ந்த பின் நிதானமாக வரலாமா?' என்று அதிசயாவுக்குத் தோன்றியது.

'சிரமப்பட்டு இவ்வளவு தூரம் வந்துவிட்டு பின்வாங்கவே கூடாது!' வைராக்கியத்தை வரவழைத்துக் கொண்டு... கொசுவத்தை இழுத்து இடுப்பில் செருகியபடி நடந்தாள்.

'மழையில் ஆசை தீர நனைய வேண்டும்' என்று அவளுக்கு கொள்ளை ஆசை!

அம்மாவும் அப்பாவும் அவளை அனுமதித்ததே இல்லை.

இப்படியொரு சூழலில்... அதுவும் வனப்பகுதியில்... விரக்தியின் விளிம்பில் இருக்கும் போது... ஆசை நிறைவேறி இருக்கிறது.

*'மழை!*
*நீலக்குடை வழங்கும் நன்கொடை*
*ஆம்.. மழை நீ....*
*வானம் வழங்கும் சுத்ததானம்*
*இந்த பூமிக்கு நீ ரத்த தானம்....*

அந்த நேரத்திலும் அவளது முகத்தில் சிறு முறுவல். அவளையும் அறியாமல் அந்தக் கவிதை வரிகளை முணுமுணுத்து திருப்தி பட்டுக் கொண்டாள்.

வெகு நேரம் கழித்து எப்படியோ அந்தக் கோவிலை அடைந்து விட்டாள்.

சிறு மேட்டின் மீது கட்டப்பட்டிருந்த புராதனக் கோவில்லை ஆவலுடன் ஏறிட்டாள்.

முகப்பு மண்டபத்தில் வனபத்திர காளியின் சிலையும் இடது புறம் நல்லதங்காள் சிலையும் இருந்தன.

நல்லதங்காள்; ஏழு குழந்தைகள் - ஆண் குழந்தைகள் நான்கு; பெண்



குழந்தைகள் மூன்று - என அழகாய் சிலைகள் வடிக்கப்பட்டிருந்தன.

கோவில் பூட்டப்பட்டிருந்தது.

"என்னக்கா பார்க்கிறீங்க? பூசாரி ஐயா இன்னிக்கு வர மாட்டாரு. அவருக்கு உடம்புக்கு சொகமில்லையாம்..." என்ற குரல் கேட்டு சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

வேப்ப மரத்தின் அடியில் ஒண்டி நின்ற சிறுமி... குளிரில் வெடவெடத்து பேசினாள். கையில் ஒரு குச்சியை வைத்திருந்தாள்.

"ஓ.. காட்டுக்கு நீ மட்டும் தனியாவா வந்தே பாப்பா?"

"உம்... மாடு மேய்க்க தினமும் நா வருவேனே..." பெருமிதமாய் மோவாயை உயர்த்திப் பேசியவளைப் பார்த்து... பச்சாதாபப் பட்டாள் அதிசயா.

"பரவாயில்லையே... தைரியசாலிதான்" - பாராட்டியவள்... சுற்றும் முற்றும் பார்வையைச் சுழற்றினாள்.

இடது கோடியில் இருந்த கிணறு... அவளை ஈர்த்தது.

"ஏன் பாப்பா? உனக்கு நல்லதங்காளோட கதை தெரியுமா?" கேட்டபடி அந்தக் கிணற்றை நோக்கி இரண்டு எட்டு வைத்தாள்.

"தெரியுமே... அது... நீங்க நெனைக்கிற கிணறு இல்லக்கா..."

"அப்படின்னா... அவங்க இதுல....?" தயங்கி நிறுத்தினாள் அதிசயா.

"ஊகூம்... அது... அதோ அங்கே இருக்கு... மஞ்சனத்தி மரத்துக்கு அடியில... தெரியுதா...? தூரத்துல அந்த மஞ்சனத்தி மரம் இருக்கு பாருங்க... அங்கே தான்..."

"கிணறு அங்கே இருக்கு. கோவிலை இங்கு எழுப்பிட்டாங்களா?"

"இங்கன தான் செத்துப் போன அந்தம்மாவையும் ஏழு குழந்தைகளையும் தூக்கிட்டு வந்து வரிசையா கிடத்தினாங்களாம்...

வனபத்திரகாளியே இறங்கி வந்து காட்சி தந்து உயிர்ப்பிச்சை குடுத்திருக்காங்க... கதை உங்களுக்கு தெரிஞ்சிருக்குமே அக்கா?"

அதிசயாவின் மனக்கண்ணில் அந்தப் பரிதாபமான காட்சி தத்ரூபமாய் தோன்றி... அவளது விழிகளில் கண்ணீரை வரவழைத்து நெஞ்சத்தை கனக்க வைத்தது.

"ஆமா பாப்பா! தெரியும்... அது கதையில்ல பாப்பா! நடந்த சரித்திரம் ஆச்சே? மனித நிலையிலிருந்து அந்தம்மா தெய்வமா மாறி இங்க கொலு இருந்து எல்லாரையும் ரட்சிக்கணும்கிறது பிராப்தம் போலிருக்கு..."

மெள்ள முணுமுணுத்தபடி கோவிலின் முதல் படியைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு... மீண்டும் முகப்பிலிருந்து சிலைகளைப் பார்த்து மனமுருக வணங்கினாள்.

பக்கவாட்டில் சிறு சன்னதி இருந்தது. அதில் ஏழு குட்டி சிலைகள் இருந்தன. 'இது சப்த கன்னிகளின் சிலைகளா? சம்பந்தமே இல்லாம இந்த கன்னிமார் சிலைகளை இங்க வச்சிருக்காங்க?' தனக்குள் பேசியபடி நெருங்கி ஊன்றிப் பார்த்தாள்.

"அட... இவங்க நல்லதங்காளோட குழந்தைங்க.. ஆண் குழந்தைகள் நான்கும் பெண்குழந்தைகள் மூன்றும் இருக்கே...? உற்று கவனிச்சா தான் வித்தியாசம் தெரியுது. பாமர ஜனங்க கன்னிமார் தெய்வம்னு நெனைச்சுட்டுப் போயிடுவாங்க..."

கோவிலைச் சுற்றிப் பார்ப்பதற்குக் கூட அவளுக்கு மனம் இருக்கவில்லை.

அந்தக் கிணறு இருக்கும் திசைப் பக்கம் திரும்பி நடந்தாள்.

"அக்கா! நில்லுங்க... இங்க வர்றவங்க கோவில்லே இருக்கிற அம்மனைக் கும்பிட்டுட்டு.. இதோ இந்த வேப்ப மரத்து தெய்வத்தை சூடம் கொளுத்தி கும்பிட்டுட்டு... அப்படியே போயிடுவாங்க... யாருமே அந்த கிணத்துப் பக்கம் போக மாட்டாங்க..." என்றாள் சிறுமி.

"ஏன் அப்படி?"

"அது ஏனோ? பார்க்கக் கூடாதுன்னு பெரியவங்க சொல்லி வச்சிருக்காங்க. யாருமே அதைப் பார்க்க பயப்படுவாங்கக்கா... இப்படியே திரும்பிப் போயிடுவாங்க..."

"நான் கும்பிடறதுக்காக மட்டும் வரலை. ஆராய்சசி பண்ணிட்டுப் போலாம்னு வந்திருக்கேன். நான் கட்டாயமா அந்தக் கிணத்தைப் பார்த்தே தான் ஆகணும்..."

"சரி.. இதுக்கு மேல உங்க இஷ்டம்...! அதோ அந்தக் கோடியில ஒரு குகை இருக்கே அது குருசாமி சித்தரோட குகை... அதைப் பார்க்காம போறீங்க...?"

அந்த பிரம்மாண்ட ஆலமரத்துக்குப் பின்னால்.. கோவிலுக்கு அருகாமையில் இருந்த மறைவான குகையைச் சுட்டிக் காட்டினாள்.

"முதல்லே கிணத்தைப் பார்த்துட்டு வர்றேன். அப்புறமா குகையைப் பார்த்துப்பேன்..."

மழை சற்றே மட்டுப் பட்டிருந்தது.

கருமேகங்கள் அடர்ந்திருந்ததால் பகல் நேரத்திலும் இருளாய் இருந்ததை எண்ணி வியந்தபடி தட்டுத்தடுமாறி நடந்தாள் அதிசயா.

அந்தக் கிணற்றை அடைவதற்குள்... யுகக்கணக்காய் நேரம் நீண்டு விட்டது போன்ற பிரமிப்பு தான் ஏற்பட்டது.

கால்கள் களைத்து துணியாய் துவண்டன.

அந்த சிறுமி சுட்டிக்காட்டிய மஞ்சனத்தி மரத்தை ஒரு வழியாக எட்டிப் பிடித்தாள்.



வெள்ளையாய் பூக்கள் பூத்துக் குலுங்கி, மழைத் துளிகளின் பாரம் தாங்காமல் தலை கவிழ்ந்து சுகந்த நறுமணத்தைக் காற்றில் கலக்கிக் கொண்டிருந்தன.

சுற்றுச் சுவர் இன்றி தரையோடு தரைமட்டமாக இருந்த - வட்ட வடிவமான - மிக பிரம்மாண்டமான - பழங்காலத்திய கிணற்றை நெருங்கினாள்.

கிணற்றை ஒட்டியிருந்த மஞ்சனத்தி மரத்தின் அடியிலிருந்த பெரிய பாறை ஒன்றில் அமர்ந்து... மெல்ல கிணற்றை எட்டிப் பார்த்தாள்.

மழைத்துளிகள் வீழ்ந்து கிணற்று நீரில் வளையங்களை உருவாக்கிக் கொண்டிருந்தன.

சுற்றிலும் பார்வையை சுழல விட்டாள்.

மேலே ஆகாசம்... கீழே பூமி... அவ்வளவு தான்!

கண்ணுக்கு எட்டின தொலைவு வரை... ஆள் அரவமே இல்லாமல் வெறிச்சோடிப் போயிருந்தது வனம்...!

'இத்தனை வருஷங்கள் கடந்தும் கூட... அத்துவானக் காடாய்... அமானுஷ்யமாய் வனம் இருக்கிறதே...? அந்த நாளில்... நல்லதங்காள் காலத்தில் இது எப்படி இருந்திருக்கும்?'

ஏழு குழந்தைகளைத் தூக்கிப் போட்டு தானும் குதித்து மாண்டாளே நல்ல தங்காள்?

எட்டு உடல்களும் மிதப்பதற்குத் தோதாய் கிணறு பிரம்மாண்டமாய்த்தான் இருக்கிறது.

'அம்மா தாயே! அண்டிப் பிழைக்க வழியின்றி, ஆதரவுக்கரம் நீட்ட வேண்டிய அண்ணி மூளி அலங்காரி நிர்தாட்சண்யமாய் விரட்டிக் கதவைச் சாத்தினதும்... வாழ்க்கையை வெறுத்து யாருக்கும் பாரமாய் இருக்க விரும்பாமல்... குழந்தைச் செல்வங்களை இரு கைகளாலும் வாரித் தூக்கிப் போட்டு... கடைசியில் நீயும் குதித்தாயே...!

தன் உயிரை மாய்த்துக் கொள்வது பெரிய விஷயமல்ல... பெற்ற மக்கட் செல்வங்களைக் கிணற்றுக்குள் தூக்கிப் போடும் முன்பு... எப்படியெல்லாம் புழுவாய் துடித்தாயோ?

உள்ளுக்குள் ஊமையாய் கலங்கித் தவித்தாயோ?

உன் கருணை உள்ளமும் தியாக உணர்வும்... அந்த வன பத்திரகாளியின் மனதைத் தொட்டு... காட்சி தர வைத்து எட்டு உயிர்களை மீண்டும் பிழைக்க வைத்ததே?

எந்த அளவுக்கு நீ கொடுத்து வைத்தவள் தாயே?

வன பத்திரகாளியின் பெயர் மங்கி உன் பேர் நிலைத்து விட்டதே?

சரித்திரத்தில் நீ இடம் பிடித்து விட்டாயே?

தாயே! நானும் உன் நிலைமையில் தான் இருக்கிறேன். ஆதரவுக் கரம் நீட்ட யாருமில்லை. பூமிக்கு பாரமாய் இருக்க விரும்பவில்லை தாயே...!

உன்னைப் போல் வைராக்கியமாய் நானும் உயிரை மாய்த்துக் கொள்ளப் போகிறேன்.

நீ விழுந்து மாண்ட இந்தக் கிணற்றில் என் உயிரும் போகப் போகிறதே... இதற்கு நான் கொடுத்து அல்லவா வைத்திருக்கிறேன்.

தற்கொலை செய்து கொண்டாலும்... உன் நல்ல மனதிற்கு நீ தெய்வமாகி விட்டாய்...!

நானும் உன் மகள் தான்..! இந்த அபலைக்கு... அனாதைக்கு மனமிரங்கி... என் ஆத்மாவை சாந்தி அடையச் செய்யம்மா...!

உன்னைத் தஞ்சமடைந்து விட்டேன்... எனக்கு வேறு வழியே தெரியவில்லை.

அழகாய் பிறந்து தொலைத்து விட்டதால்... அழகே ஆபத்தாகி என்னைத் துரத்துகிறது.

என்னை... என் நிலைமையைப் புரிந்து கொள்ளம்மா... என்னை மன்னித்துக் கொள்ளம்மா...

தாயே... நீயே துணை...!'

ஹேண்ட் பேக்கை பாறையின் மீது வைத்து விட்டு எழுந்து நின்றாள்.

விழிகளை இறுக மூடி இரு கரம் கூப்பி வணங்கி விட்டு... கிணற்றில் குதிக்கத் தயாரானாள்.

ஒரு முரட்டுக் கரம் அவளது இடையைச் சுற்றி வளைத்து தடுத்தது.

## 16

திடுக்கிட்டு திமிறியவள்... வீலென்று அலறியபடி பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

கோணல் சிரிப்புடன் சுகுமார் நின்று கொண்டிருந்தான்.

"என்கிட்டேயிருந்து அவ்வளவு சுலபத்துல தப்பிச்சுப் போயிடலாம்னு நெனச்சியாக்கும்?

கண் கொத்திப் பாம்பா என்னோட ஆள்... உன் வீட்டைக் கண்காணிச்சுட்டே இருந்தான். நீ ஆட்டோவுல ஏறினதுமே... நிழல் மாதிரி உன்னை ஃபாலோ பண்ணி எனக்கு மெஸேஜ் குடுத்துட்டே இருந்தான்.



நான் கார்லே உன் பஸ்ஸை ஃபாலோ பண்ணிட்டே வந்தேன்...

செத்துடலாம்கிற முடிவுக்கு வந்துட்டே... போறது போறே... என்னை சந்தோஷப்படுத்திட்டுப் போயேன்..."

கண்சிமிட்டினான் சுகுமார்.

"சீ! பிணந்தின்னி கழுகே... விரக்தியின் விளிம்பில் மரண வாசல்லே வந்து நிக்கிறவள்கிட்டே... இப்படி பேசறியே? உன் நெஞ்சுல ஈரமே இல்லையா? பாவி! என்னை நிம்மதியா சாகவிடேன்... உனக்குப் புண்ணியமா போகட்டும்... கையை எடுடா ராஸ்கல்."

தன்னை இறுக்கிப் பிடித்திருந்த அவனது கரத்தை விலக்கப் போராடினாள். பிடி மேலும் இறுகியதே தவிர... தளரவில்லை.

"சாகப் போகிறவ கிட்டே சந்தோஷம் தேடப் பார்க்கிறியே... பொறுக்கி நாயே... விடுடா... ஐயோ... இந்த அபலையை யாராச்சும் வந்து காப்பாத்துங்களேன்..."

அவள் அலறிய அலறல்... அந்தப் பிரதேசம் முழுவதும் மீண்டும் மீண்டும் எதிரொலித்தது.

மழை மீண்டும் வலுத்தது.

"காப்பாத்தணுமா? கிணத்துல குதிக்கப் போனவளைத் தான்.... நான் காப்பாத்திட்டேனே? அப்புறம் என்ன டார்லிங்?"

"உனக்குப் புண்ணியமாப் போகட்டும்... என்னை சாக விடேன்..." கையெடுத்து கும்பிட்டாள்.

"அதெப்படி? இதுக்கா அவ்ளோ தூரத்துல இருந்து வந்தேன்? சாக விடறேன்... நான் என்ன மாட்டேன்னா.. சொன்னேன்? அதுக்கு முன்னாடி உன்னோட அழகை எனக்கு அர்ப்பணிச்சுட்டுப் போன்னு தானே சொல்றேன்.."

இவனிடம் கெஞ்சிப் பிரயோஜனம் இல்லை என்ற முடிவுக்கு வந்தவள்... பலத்தை எல்லாம் திரட்டி அவனிடமிருந்து தப்பியோட முயன்றாள்.

வெறிகொண்ட வேங்கையாக இருந்தவனிடம்.. மீண்டும் அகப்பட்டுக் கொண்டு அலறினாள்.

"யாராச்சும் காப்பாத்துங்க... ஐயோ! அப்பா...! பெண் தெய்வம் உன்னைக் காக்கும்னு சடையாண்டி சித்தர் அருள் வாக்கு குடுத்ததா சொன்னீங்களே..?

நானும் அற்புதங்களைக் கண்கூடா பார்த்தேனே...?! சித்தர் சாமீ... காப்பாத்துங்க...

அம்மா நல்ல தங்காள் தாயே! உன் எல்லையில இப்படியெல்லாம் அக்கிரமம் நடக்குதே... காப்பாத்து தாயே..!"

பெருங்குரலில் அலறினாள். மறுகணம் பலங்கொண்ட மட்டும் சுகுமாரின் கையைக் கடித்து விட்டாள்.

"ஆ...." அவனது பிடி தளர்ந்தது.

மின்னல் வேகத்தில் கண் இமைக்கும் நேரத்தில் புள்ளிமானாய் பாய்ந்தோடினாள்.

'எங்கு ஓடினாலும்... வெறி கொண்ட மிருகத்திடம் மீண்டும் சிக்கி விடுவேன்...' என்ற பயத்தில் கிணற்றில் குதித்து விட்டாள்.

கையை உதறியபடி இந்தக் காட்சியைப் பார்த்தவன்... நான்கே எட்டில் கிணற்றை சமீபித்தான்.

"இதுக்குள்ளே குதிச்சுட்டா... விட்டுட்டுப் போயிடுவேன்னு நெனச்சியா?" கேட்டபடி அவனும் கிணற்றுக்குள் பாய்ந்தான்.

நடு மையத்தில் மூழ்கி திணறித் தத்தளித்தவளை... வாகாய் பிடித்து விட்டான்.

அவளால் தண்ணீருக்குள் போராட முடியவில்லை.

குதித்த வேகத்தில் முங்கி மடக்மடக் என்று தண்ணீரை வேறு குடித்து விட்டிருந்தாள்.

அவளுக்கு சுத்தமாய் நீச்சல் வேறு தெரியாது.

தத்தளித்துக் கொண்டிருந்தவளின் அடர்ந்த கூந்தலைப் பற்றி இழுத்தான்.

'அடப்பாவி! உன் அராஜகத்துக்கு அளவே இல்லையா?' என்ற ரீதியில் பீதியுடன் மிரண்டு பார்த்தாள்.

"அம்மா... நல்லதங்காள் தாயே..! இந்தக் கிணத்துல நீங்க மாண்டு போனதால... அம்பாளே தரிசனம் தந்து உங்களை உயிர்ப்பித்து - உங்களை இந்த ஆலயத்துக்கே தெய்வமாக்கினாங்க...

இந்தப் புனிதமான கிணத்துல குதிச்சு நானும் உயிரை விடலாம்ன்னா... இந்தப் பாவி என்னை விட மாட்டேங்கிறானே?

இப்படியொரு அசம்பாவிதம் நடக்குதே... ஐயோ! இந்த உடம்புலேர்ந்து உயிர் பிரிஞ்சு தொலையமாட்டேங்குதே? என் உயிரை எடுத்துக்கோ தாயே...!"

மானசீகமாய் பேசியபடி மூழ்க யத்தனித்தாள்.

அவன் தான் கூந்தலை இறுகப் பற்றி இருந்தானே?

கடகடவென்று தலையை சரித்து சிரித்தான்.

சுற்றும் முற்றும் பார்த்தான். கிணற்றின் ஒரு புறம் சரிந்து இடிந்திருந்தது. அந்த சரிவில் வாகாய் இவளைத் தூக்கிக் கொண்டு மேலே ஏறி விடலாம் என்ற முடிவுக்கு வந்தான்.

அவனது எண்ணம் புரிபட... அதிசயா புழுவாய் துடிதுடித்தாள்.

'போச்சு....! நம் கதி அவ்வளவுதான்' என்று தோன்றியது. இருப்பினும் நூலிழை நம்பிக்கையைப் பிடித்து இவள் ஊசலாடிக் கொண்டிருந்தாள். அவன் பலாத்காரமாய் இவளை ஓரமாய் இழுத்துக் கொண்டு போனான்.



திடீரென்று பெரிய இடிச் சப்தம்!

காதைப் பிளக்கும்படியான சப்தம்...

அண்ட சராசரங்களும் நடுநடுங்கும்படியான சப்தம்...!

சப்தம்... ஆகாயத்திலிருந்து வரவில்லை.

கிணற்றுக்குள்ளிருந்து தான் வந்தது.

கிணற்றின் நடு மையத்திலிருந்து 'குபுக் குபுக்'என்று பெரிய குமிழ்கள் கொப்பளித்து வெடித்தன.

மறுகணம்... உள்ளிருந்து வன பத்திரகாளியின் உருவம் கொஞ்சம் கொஞ்சமாய் மேலே வந்தது.

செந்நிற ஆடை உடுத்திய 'அம்பாளின் ஆக்ரோஷத் தோற்றம்! பிரம்மாண்டமாய் உறுமும் சிங்கத்தின் மீது அமர்ந்து உறுத்துப் பார்த்தாள்.

"அ... அ... அம்மா... அ... ஆ... தா...யே!"

விம்மிய படி இரு கரங்களையும் தலைக்கு மேல் தூக்கி கூப்பினாள்.

சுகுமாரின் முகத்தில் பீதி படர்ந்தது.

அம்பாளை ஏறிட்டுப் பார்க்கவே.. அவனது கண்கள் கூசின.

மிரண்டு போய்... அதிசயாவிடமிருந்து விலகி... சரிவின் வழியே ஏறி ஓடிவிட யத்தனித்தான்.

மீண்டும் பயங்கர சப்தம் கேட்டது.

இடி சப்தம் அல்ல...!

ஆங்காரமான சிரிப்பு சப்தம்...!

விண்ணும் மண்ணும் அதிரும் வண்ணம் வனபத்திரகாளி சிரித்துக் கொண்டிருந்தாள்.

விழிகள் அகல... அண்ணாந்து பார்த்தவண்ணம் இருந்தாள் அதிசயா.

மறுகணம்... அம்மனும் அம்மன் அமர்ந்திருந்த சிங்கமும் மறைந்து பெரிய புகை மண்டலம் உருவானது.

புகை மண்டலம் மறைய... அங்கு 'யாழி'யின் உருவம் விஸ்வரூபத்தோடு தோன்ற... ஆனந்தத்தில்... ஆன்மீக அதிர்வில்... அதிசயாவின் மேனி சிலிர்த்தது.

கோவில் மண்டபங்களில் 'யாழி'யின் சிற்பத்தை அவள் பார்த்திருக்கிறாள்.

யாழி - சிங்கமும் யானையும் கலந்த கலவையான மிருகம்! 'சிங்கத்தின் கர்ஜனையா? யானையின் பிளிறலா?' என்று இனம் பிரித்து அறிய முடியாத வகையில்... அது ஆக்ரோஷமாய் - ஆங்காரமாய் உறுமியது.

மயிர்க் கூச்செரியும் காட்சி அங்கே அரங்கேறியது.

யாழியின் பிடிக்குள் சுகுமார் சிக்கினான்.

அவனை துவம்சம் செய்த யாழி... பயங்கர உறுமலோடு அவனைக் கடித்து கபளீகரம் செய்து கொண்டது.

மறுகணம்.. அதன் ஆங்காரம் அடங்கியது.

விழிகளை மூடி சாந்தமடைந்தது. மீண்டும் புகைமண்டலம் தோன்ற... யாழியின் உருவம் மறைந்தது.

வந்த சுவடு தெரியாமல் மறைந்தே போனது.

"தாயே! போதும்... ஜென்மம் எடுத்ததுக்கு பலன் கிடைச்சாச்சு. உங்க தரிசனம் கிடைச்சது மட்டுமில்ல... என்பொருட்டு இந்த அசுரனை வதம் செய்துட்டீங்க...

இது போதும் தாயே...! எப்பேர்ப்பட்ட குடுப்பினை இது!"

தழுதழுத்தபடி இரு கரங்கள் கூப்பி வணங்கி விட்டு... "என்னை ஏத்துக்கணும் தாயே...!" என்று கூறியபடி விழிகளை மூடி தண்ணீருக்குள் மூழ்கினாள். ஆழமாய் மூழ்கிய பின்... நீரின் மேற்பரப்பில் குமிழ்கள் குமிழியிட்டு அடங்கின.

## 17

'எங்கிருக்கிறேன் நான்? சொர்க்கத்திற்கு வந்துவிட்டேனா? யாருடைய மடியில் படுத்திருக்கிறேன்? சொர்க்கத்தில் இருக்கும் அப்பாவின் மடியா?'

விழிகளை சிரமப்பட்டு மலர்த்தினாள் அதிசயா.

இனியனின் மந்தகாசமான முகம் கண்ணில் பட்டதும்.. வாரிச்சுருட்டிக் கொண்டு எழப்பார்த்தாள். முடியவில்லை.

"பதட்டப்படாதே அதிசயா! உனக்கு வந்த ஆபத்து எல்லாமே நீங்கிடுச்சு. இனி உனக்கு எந்தக் கவலையும் இல்லை. நிம்மதியா இரு..."

அதிசயாவின் அழகிய முகத்தில் ஆச்சரியம் கிளை விட்டுப் படர்ந்தது.

'யாரிவன்?என் பேர் இவனுக்கு எப்படி தெரிந்தது? என்னைப் பற்றி சகலமும் தெரிந்து வைத்திருக்கிறானே?

அது மட்டுமா? இவனைப் பார்த்தால்.. மனதிற்குள் இனம் புரியாத நிம்மதியும் இதமும் தோன்றுவது மட்டுமல்ல...

ஜென்ம ஜென்மமாய் இவனோடு பழகினாற் போன்ற உணர்வும் ஏற்படுகிறதே? என்ன காரணம்...?'

அதிசயா கீழுதட்டை அழுந்தக் கடித்து முழங்கையை ஊன்றி எழுந்து சற்று விலகி அமர்ந்தாள்.

"நீ...ங்க யாரு?"

"இனியன்...! எந்த இடத்துல நாம இருக்கோம்னு கவனி..."

"இது... இது... குகைக் கோவிலா? அப்படின்னா... நல்லதங்காள்



கோவிலுக்கு அருகாமையில் இருக்கிற குருசாமி கோவிலா?"

"எக்ஸாக்ட்லி"

ஒரு பீடத்தில் சிறு படத்திற்கு மாலை சாத்தப்பட்டிருந்தது. எதிரில் மண் அகல் தீபம் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தது.

அதிசயா எழுந்து அருகில் சென்று... அந்தப் படத்தைப் பார்க்கப் பிரியப்பட்டாள்.

எழுந்து நின்றபோது.. அவளது தளிர் உடல் ஏகத்திற்கும் தள்ளாடியது. கைத்தாங்கலாய் - உரிமையாய் அவளை இனியன் பிடித்துக் கொண்டான்.

ஏனோ தெரியவில்லை. மறுக்கத் தோன்றாமல் மெல்ல நடந்தாள். அவளது ஆடை நனைந்திருந்தது.

'நடந்ததெல்லாம் கனவா? நனவா?' என்று மீண்டும் குழப்பம் தலைதூக்கியது.

"எல்லாமே நிஜம்தான் அதிசயா!" அவளது மனதில் முகிழ்த்த கேள்விக்கு அவன் பதில் சொல்லிய போது... திகைத்துப் போய் ஏறிட்டாள்.

"முதல்லே படத்தைப் பார்த்து வேண்டிக்கோ... நடந்ததை எல்லாம் விலாவாரியா சொல்றேன்.."

பீடத்தின் அருகில் சென்று படத்தைப் பார்த்தபோது - அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

'இவர் கனவில் வந்த சித்தர் ஆயிற்றே? இவர்... இவரது சிறு படம் கிடைத்ததே? அதை எடுத்து வைத்தேனே?'

உற்றுப் பார்த்து விட்டு... "இவர் சடையாண்டி சித்தராச்சே?" மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

"ஆமா.. சடையாண்டி சித்தர்தான்...! என்னடா... குருசாமி சித்தர் குகையில் இவரோட படம் இருக்குன்னு பார்க்கிறியா? குருசாமி சித்தரோட இயற்பெயர் 'சடையாண்டி சாமி'. அவர் தான் இவர்!

**"சடையாண்டி சித்தர்... உனக்கு பெண் தெய்வம் துணையிருக்கும்னு அருள் வாக்கு குடுத்திருக்காரு"** அப்பா கடைசியாய் கூறிச் சென்ற வார்த்தைகள்.. அவளது செவிகளில் எதிரொலித்தன.

"அடக் கடவுளே...! இப்போதான் எல்லாமே புரியுது. அந்தப் பெண் தெய்வம் நல்லதங்காள் தான்... வன பத்திரகாளி தான்...

ஐயனே..! உமக்கு நன்றி..!"

நெகிழ்ந்து போய் பேசியவள் மண்டியிட்டு அமர்ந்து படத்தைத் தொட்டு வணங்கினாள்.

"எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை சொல்றேன். கேட்டா ரொம்ப அதிசயமா இருக்கும்..." என்றபடி இனியன் விலாவாரியாக சொல்லத் தொடங்கினான்.

"கடைசியா எனக்கொரு உத்தரவு வந்தது. ஏட்டுல உன்னோட பேரும், நான்

உடனே கிளம்பி குறிப்பிட்ட அந்தக் கிணத்துக்கு வரணும்னும் எழுதப்பட்டிருந்தது.

சடையாண்டி சித்தர் எங்களுக்கு குல தெய்வம் மாதிரி. உத்தரவு கிடைச்சதும் கிளம்பி வந்தேன். அசுர வதை முடிஞ்சு நீ சரியா கிணத்துல மூழ்கிட்டிருந்தே... நான் இறங்கி உன்னைத் தூக்கிட்டு வந்தேன்..."

நம்ம தாத்தாக்கள் ஆசைப்பட்டபடி... நாம வாழ்க்கையில இணையணும்ங்கிறது குருசாமியோட உத்தரவு!

கனவுலே ஓவியமா வந்த உன்னோட உருவத்தைப் பார்த்ததுமே... நான் என் மனசைப் பறிகொடுத்துட்டேன். அதிசயா...! ஐ லவ் யூ... நல்லா கும்பிட்டுக்கோ... நாம வெள்ளிமலை எஸ்டேட்டுக்கு கிளம்பலாம்."

அதிசயாவின் மேனி மீண்டும் சிலிர்த்தது.

கண்ணீர் மல்க பிரார்த்தித்து விட்டு... மெல்ல எழுந்தாள்.

"எனக்குன்னு யாருமே இல்லையேங்கிற விரக்தியில நான்... தற்கொலை செஞ்சுக்கலாம்னு..." சட்டென்று இடைமறித்தான் இனியன்.

"உனக்கு எல்லாமுமா நானிருக்கேன். நமக்கு இந்த சித்தரும், பெண் தெய்வமும் துணை இருக்கிறப்போ... உனக்கு என்ன குறைச்சல் அதி?"

அவளது கரத்தை இறுகப் பற்றினான் இனியன்.

நீர்த்திரையிட்ட விழிகளுடன் அவனை நேசமாய் பார்த்துவிட்டு "போறதுக்கு முன்னாடி 'நல்ல தாயம்மா'வைப் பார்த்து சொல்லிட்டுப் போலாமா? அவங்க வீட்ல தங்கறதுக்கு இடம் குடுத்தாங்க. அடைக்கலம் தந்தவங்களுக்கு நன்றி சொல்லிட்டுப் போலாம்..."

"உன் இஷ்டம்..."

**அ**வர்கள் அங்கு வந்தபோது... நல்ல தாயம்மாவின் ஓட்டு வீடு இருந்ததற்கான அறிகுறியே தென்படவில்லை.

"என்னது இது? வீட்டுத் திண்ணையில பலகாரம் சுட்டு வித்துட்டிருந்தாங்க நல்ல தாயம்மா..." முணுமுணுத்தவள்... அங்கு தெருவிலிருந்தவர்களிடம் விசாரித்த போது... உதட்டைப் பிதுக்கினார்கள்.

"நாங்க இதே ஊருல பல வருஷமா இருக்கோம். நல்ல தாயம்மாவா? அப்படி யாரும் இங்கே இல்லையேம்மா?"

"அப்படின்னா... ஒரு ஆட்டோக்காரர் கொண்டு வந்து விட்டாரே? அந்தம்மா கையாலே வயிறார சாப்பிட்டேனே? அவங்க யாரு?" குழப்பத்துடன் இனியனை ஏறிட்டாள்.

"நம்ம விஷயத்துல எல்லாமே அதிசயமா தான் நடக்குது. வேற யாரு? குருசாமி சித்தரும் பெண் தெய்வமும் தான் அந்த ரூபத்துல வந்திருப்பாங்க."

*"யாகத்திலே தவ வேகத்திலே - தனி*



*யோகத்திலே பல போகத்திலே*

*ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார் - தம்*

*அருளினிலே உயர்நாடு"* என்று பாரதி பாடினாரே... அந்த 'மகாகவி'யின் கூற்று மகத்தானது தானே?

தர்மத்தை நிலை நிறுத்தவும், தர்மம் வெல்லும் என்று சொல்லவும் இதிகாசங்கள் தோன்றின. மக்களிடம் இதை நடைமுறைப்படுத்த ஞானிகளும் சித்தர்களும் தோன்றி வழிநெறிப் படுத்தினாங்க...

'ஆன்மீகமே இந்தியாவின் ஆன்ம பலம்! இறைவன் தனக்கென ஒரு நாட்டைத் தேர்ந்தெடுத்து அங்கு எந்த ஆபத்து வந்தாலும், சிலர் மூலமோ, பலர் மூலமோ உயர் ஞானத்தை வைத்துக் காக்கிறான். அந்நாடு தான் இந்தியத் திருநாடு!'... அப்படின்னு.. மனிதகுல மேம்பாட்டிற்காக தன்னை அர்ப்பணித்த ஸ்ரீ அரவிந்தர் சொல்லி வச்சது சரியாத் தான் இருக்கு. இல்லையா...? சரி கார்லே ஏறு அதிசயா!.

பாவம்... நம்ம தாத்தாக்கள் கவலையோட இருப்பாங்க... இருட்டறதுக்கு முன்னாடி வெள்ளி மலைக்குப் போய் சேர்ந்துடணும்..."

மானசீகமாய் சித்தருக்கும் பெண் தெய்வத்திற்கும் நன்றி தெரிவித்தபடி... சந்தோஷ மிகுதியில் கண்ணீர் மல்கிய வண்ணம் காருக்குள் ஏறி அமர்ந்தாள்.

"இது என்ன ஆனந்தக் கண்ணீரா? இது கூட அளவாய்த்தான் வரணும்! இல்லேன்னா... என் மனசு தாங்காது அதிசயா!"

அவளது புறங்கையில் மென்மையாய் இதழ் பதித்து விட்டு காரை ஓட்டத் தொடங்கினான்.

நீண்ட பெருமூச்சு விட்டபடி... அவனது தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

**"இனியவனே... என்று பாடி வந்தேன்...**
**இனி அவன் தான் என்று ஆகி விட்டேன்..."**

எங்கிருந்தோ ஒலி பெருக்கியிலிருந்து இந்தப் பாடல் மிதந்து வந்ததைக் கேட்டதும்... இருவரும் ஒருவரை ஒருவர்.. பார்த்துக் கொண்டு.. காதலுடன் சிரித்துக் கொண்டனர்.

கார், வெள்ளி மலையை நோக்கிப் பறந்தது.